146889

ஸ்ரீமத் ஸௌராஷ்ட்ர சரித்ர
சங்கிரகம்

Y592.S
N15
146889

# அட்டவணை. I

OFFICE OF THE REGISTRAR ... 24 ... RAS


| விஷயம். | பக்கம் |
|---|---|
| மங்களமும், கிரந்தப்பிரதிஜ்ஞையும். | 1 |
| சிரௌதிகளுக்கும் சேதுராமனுக்கும் சம்பாஷணை. | ,, |
| ஆர்யாவர்த்தம், ஸௌராஷ்ட்ரப்பிராம்ஹணர். | 2 |
| ஸௌராஷ்ட்ரதேசம், எல்லை, இயற்கையமைப்பு. | 3 |
| ஸௌராஷ்ட்ர தேசச்சிறப்பும், பூர்வீக அரசர்களும். | 3-8 |
| ஸௌராஷ்ட்ரதேசத்தின் தற்கால நிலைமை. | 9 |
| ஜுனகரா, கிரிநாராயணமலை, சோமநாதபுரம். | 9-10 |
| சந்திரனுக்கு வந்த சாபமும், அதன் நிவர்த்தியும். | 11-12 |
| சந்திரபகவான் ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணருக்கு சோமபுரியை தானங் கொடுத்தது. | ,, |
| மங்களபுரம், போர்பந்தர், துவாரகை, ஜாம்நகர். | 12-14 |
| நவநாகர், ராஜக்கோட்டை, வத்வான், பாவநகர், கோஹில்வாரி, அனஹல்வாரி, பூஜ். | 14-15 |
| ஸௌராஷ்ட்ரர் தக்ஷிணத்திற்கு வந்த காரணம். | ,, |
| தேவகிரி, விஜயநகரம், பிரிட்டிஷ் ராஜாங்க நன்மை, | 16 20 |
| ஸௌராஷ்ட்ரப்பிராம்ஹணர் பூர்வீக விருத்தாந்தம். | 21-31 |
| ஆசார விசாரணை, சிலதேசாசாரம். | 32-36 |
| பிராம்ஹணனுக்கு சந்தியாவந்தனம் முக்கியமானது. | ,, |
| பிராம்ஹணலக்ஷணம். (வஜ்ரசூசிக உபநிஷத்) | 36-41 |
| சப்தரிஷிமண்டலம், பிராம்ஹணகர்மங்கள். | 42-45 |
| ஆபத்தருமம், சம்ஸ்காரங்கள், நித்யாதிகர்மங்கள். | 45-47 |
| பஞ்சகௌடாள், பஞ்சதிராவிடாள். | 47-48 |
| ஸௌராஷ்ட்ர பிராகிருத பாஷைகள், லிபி. | 48-52 |
| சம்ஸ்கிருத ஸௌராஷ்ட்ர பதங்கள். | 52-54 |
| ஸௌராஷ்ட்ர கவிகள், வித்வான்கள் &c. | 54-57 |
| ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர் செய்யுங்காரியங்கள். | 57-58 |
| ஸ்திரீ புருஷ குணங்கள். | 58-59 |
| பிராம்ஹணனுக்கு ஆசாரம் பிரதானம். | 59-60 |
| ஸௌராஷ்ட்ர தேசத்துமடம். | 60 |
| துவாரகா மடத்தின் தர்மங்கள். | 61 |
| ஸௌராஷ்ட்ரப பிராம்ஹணர் மதம். | 61-62 |
| காயத்ரீ ரூபவ்யாக்யானம். | 62-63 |
| ...ஆசாரியனையாசிரயித்தல்இன்றியமையாதது. | 64 |
| ...ந்தர சிரௌதிகள் சேதுராமனை ஆசிர்வ...ஹத்திற்கனுப்பல். உத்தரமங்களம். | 65-66 |


4592,S
M15
46889

ஸ்ரீரஸ்து

சென்னை-600 005.

# முகவுரை.

"काहं कोऽहं कुलं किं मे संबन्धः कीदृशो मम। स्वस्वधर्मो न लुप्येत तथैवं चिंतयेद्बुधः ॥ नारदो ब्रह्मबीजाय ममचेन्वाचयूात्बुधः ॥"

புத்திசாலியான மனிதன், தன்னுடைய வர்ணாஸ்ரம தர்மங்களைச் சரியாய் நடக்கவிரும்பினால், "நான் எவன்? எங்கிருந்து வந்தவன்? என் குலமெது? என்னுடைய சம்பந்தம் எத்தகையது? என்பவற்றை நன்றாய் விசாரித்தறியவேண்டு" மென்னும் "ஸஹ்யாத்ரிகண்ட" த்தில் நாரதபகவான் ஆஜ்ஞாபித்திருக்கிற திருவாக்குப்படி, ஸௌராஷ்ட்ரப் பிராஹ்மணர்களுடைய பூர்வோத்தர விருத்தாந்தங்களை தர்ம சாஸ்திரங்கள், இதிஹாச புராணங்கள் முதலிய பூர்வீக நூல்களின் ஆதாரங்களுடன் இச்சிறு புஸ்தகம் தமிழில் எளிய வசனரூபமாகவும், ஆதாரமாக எடுத்துக் கொண்ட சம்ஸ்கிருத வாக்கியங்களோ! ஸ்லோகங்களோ! அவற்றை அந்தந்த பக்கத்தினடியில் தேவநாகரீ லிபியில் டிப்பணி ரூபமாகவும் எழுதியிருக்கிறேன்.

இது பூர்வம், உத்தரமென்னுமிரண்டு பாகங்களாயுள்ளது. பூர்வபாகத்தில், ஆர்யாவர்த்தம், ஸௌராஷ்ட்ரம் அதனெல்லை, இயற்கையமைப்பு, உள்நாட்டு விவரங்கள், ஸ்ரீமஹாவிஷ்ணுவினாஜ்ஞையால் பூர்வீக ஆர்யர் ஸௌராஷ்ட்ர தேசத்தில் வசித்த விவரம் முதலிய விஷயங்களும்; உத்தரபாகத்தில், ஆசாரம் தொழில் பாஷை மதம் முதலியவற்றைக் குறித்த விசாரணையும் அடங்கியுள்ளன.

நான் சம்ஸ்கிருத பாஷையிலாவது, தமிழ் பாஷையிலாவது தேர்ந்த பண்டிதனல்ல. அதனால், இப்புஸ்தகத்தில் இலக்கணப்பிழை சொற்குற்றம் பொருட்பொலிவின்மை முதலிய தோஷங்களிருக்கலாம். அவற்றை யெடுத்துக்காட்டும் வித்வான்களுக்கு நன்றி செலுத்துவதுடன் அத்திருத்தங்களையும் அடுத்த பதிப்பில் வெளியிட உத்தேசித்திருக்கிறேன்.

---

ॐ

॥श्रीमत्सौराष्ट्र चरित्र संग्रहम्॥

॥ॐ श्रीगणेशायनमः॥ ॐनमः श्रीगोपालकृष्णाय॥

45921S N15

ध्यात्वा हृदि जगन्नाथं कृत्वा स्वगुरुवन्दनम्।
वक्ष्ये सौराष्ट्र चारित्रं यथामति सदुक्तिभिः॥ १॥

# ஸ்ரீமத் ஸௌராஷ்ட்ர சரித்ர சங்கிரகம்.

## பூர்வபாகம்.

146889

### பீடிகை.

பூர்வத்தில், சிதம்பர க்ஷேத்திரத்தில் சோமசுந்தர ஸ்ரௌதிகள் என்றஓர் பிராஹ்மணர் இருந்தார். அவர் சகல சாஸ்திரங்களின் நுட்பமானகருத்தையறிந்தவர்; பால்யத்திலேயே வேதாத்தியயனஞ்செய்தவர்; தர்க்கம், வியாகரணம், நியாயம், மீமாம்ஸை, வேதாந்தம், ஸ்மிருதிகள் ஆகிய இவற்றில் தேர்ச்சிபெற்றவர்; பலகற்றுங் கர்வமில்லாதவர்; தாழ்ந்தோரிடத்திலும் மரியாதையாயும், சாந்தமாயும் பேசும் சுபாவமுள்ளவர்; அவருக்கு சிஷ்யலக்ஷணங்கள் பூர்ணமாய் நிரம்பிய சேதுராமன் என்றொரு மாணாக்கனிருந்தான். அவன் ஒருநாள் குருவினிடம் பாடங்களைக் கேட்டு முடிந்து சாவகாசமாயிருக்கும்போது, ஆசிரியரைப் பார்த்து வணக்கமாக "ஸ்வாமி! நான் தேவரீரிடம் ஒரு விஷயங் கேட்கவேண்டுமென்று வெகுநாளாகத் தங்கள் சாவகாசத்தை யெதிர்பார்த்திருந்தேன்" என்றான். அதற்கு ஆசிரியர், தன் மாணாக்கனை அன்புடன் நோக்கி "அப்பா உன் மனதில் என்ன விஷயங் கேட்கவிச்சையிருக்கிறதோ அதை மறைக்காமல் கேள்; அவ்விஷயத்தைப்பற்றி யெனக்குத் தெரிந்தவரை சொல்லுகிறேன்" என்றார்.

1. சேதுராமன்:—குருவை வணங்கி "அண்ணா இத்தென்னிந்தியாவில் ஸௌராஷ்ட்ரர்கள் என்ற ஓர் வகுப்பார் வசிக்கிறார்கள் அல்லவா? அவர்கள், எந்த தேசத்திலிருந்தவர்கள்? என்ன ஜாதியார்? அவர்களுடைய ஆசாரமென்ன? இவை எனக்கு விவரமாகச் சொல்ல வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

## நூல்.

ஸ்ரௌதிகள் சேதுராமனை நோக்கி "குழந்தாய் நீ நல்ல பிரஸ்னம் பண்ணினாய்! ஒவ்வொரு சமூஹத்தைப்பற்றிய வரலாறு அறிந்திருப்பது அவசியமானது; சொல்லுகிறேன் கேள்! ஸௌராஷ்ட்ரர், ஆர்யர்களில் ஓர் பிரிவினர்; ஆர்யர் ஆர்யாவர்த்தமென்னும் தேசத்தில் வசித்திருந்தவர்கள்; 1. "ஆர்யாவர்த்தமென்பது விந்தியமலைக்கும் ஹிமாலயத்திற்கும் மத்தியிலிருக்கிற தேசம் ஆர்யாவர்த்தமென்னும் புண்ணிய பூமி" (அமரம் 2. 1. 8) "2. கீழ்சமுத்திரத்திற்கும் மேலசமுத்ரத்திற்கும் விந்திய ஹிமய மலைகளுக்கும் நடுவிலுள்ள தேசமே ஆர்யாவர்த்தம்" (மனுஸ்மிருதி 2—12).

ஆர்யாவர்த்தமானது, புண்ணிய பூமியாதலால் அதில் வசித்த ஜனங்களின் கிரியைகள் புண்ணியமானவை; அதனால் அவர்கள் பூஜிக்க யோக்கியமானவர்கள்; அவர்களில் பெரும்பான்மையோர் ரிஷிகளாயிருந்தவர்கள்; அந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஸௌராஷ்ட்ரர்கள்; அவர்கள் பிராஹ்மணவகுப்பைச்சேர்ந்தவர்கள்; அவர்கள், ஆர்யர் தெற்கேவந்தபோது ஸொராஷ்ட்ர தேசத்தில் தங்கியிருநதார்கள்; அதனால் அவர்கள் ஸௌராஷ்ட்ர பிராமணரென்று வழங்கலாயினர்.

---

१ आर्यावर्तः पुण्यभूमिः मध्यं विन्ध्यहिमागयोः ॥२॥

२ आसमुद्राच वै पूर्वा दासमुद्रात्तु पश्चिमात् ।
हिमवद्विंध्ययो र्मध्य मार्यावर्तं विदुर्बुधाः ॥ ३ ॥



ஆர்யர்களுக்கு ஏற்பட்ட ஸ்ரௌதஸ்மார்த்தாதி கர்மங்களையனுஷ்டிப்பவர்கள். இவ்விஷயத்தைப்பற்றி இன்னம் எதைக் கேட்கிறாயோ அதைச் சொல்லுகிறேன் கேள்" என்றார்.

2. சேதுராமன்:— "ஸ்வாமி! ஸௌராஷ்ட்ர தேசம் எங்கிருக்கிறது? அது யாரால் அரசாக்ஷி செய்யப்பட்டது?" என, ஸ்ரௌதிகள் "குழந்தாய்! நாம் வசிக்கிற இந்த இந்தியாவிற்கு பரதகண்டமென்று பெயர்; முற்காலத்தில் பாத கண்டத்தை 56 அரசர்கள் ஆண்டு வந்தார்கள். அந்த 56 ராஜ்யங்களில் சுராஷ்ட்ரம் என்பது ஒன்று. அது தற்காலத்தில் பம்பாய் ராஜதானியின் மேற்கு பாகத்தில் இருக்கிற "கத்தியவார்" என்ற தீபகல்பந்தான் முற்காலத்தில் ஸௌராஷ்ட்ர தேசமென்று வழங்கிவந்தது; அதற்கு வடக்கிலிருக்கிற "கச்" (Cutch) தேசமும் அதிலடங்கியிருந்தது; அதனால்:—வடக்கில், சிந்து, மேற்கு ராஜபுடானா, கூர்ஜர தேசங்களும்; கிழக்கில், கூர்ஜரத்தின் ஓர் பாகமும் காம்பேக்குடாக்கடலும்; தெற்கிலும், மேற்கிலும், அரபிக்கடலும் (யவனசமுத்திரமும்) இத்தேசத்திற்கு எல்லைகளாயிருந்தன.

இதன் மத்தியில் "கிரிநாரராயண" மென்ற (Girnar Hill) ஓர் மலையுண்டு. அது, நடுவில் 3500 அடி, சமுத்திரமட்டத்திற்குமேல் உயர்ந்திருக்கிறது. அதன் மற்றொரு பாகம் தெற்கில் கிழமேலாக நீண்டிருக்கிறது. அம்மலையில் பெய்யும் மழைஜலம் சிற்றாறுகளாகப் பாய்ந்து சமுத்திரத்தில் விழுகிறது. அவற்றில் முக்கியமானது "சரஸ்வதி" நதி, இது சோமநாதபுரத்திற்குச் சமீபத்தில் அரபிக்கடலில் சங்கமமாகிறது. கிரிநார் மலைக்கு ரைவதம், உஜ்ஜயந்தம், ஆநர்த்தமென்ற பெயர்களுமுண்டு.

இந்த மலையில் "ஹர்யஸ்வன் என்ற அரசன் தன் இராஜதானியை ஸ்தாபித்தான். இதற்கு ஆனர்த்தமென்று பெயர்; பசுக்களும் தனமும் நிறைந்த ராஜ்யம் சுராஷ்ட்ரம்" என்று ஹரிவம்சம் 5168—9-ல் சொல்லியிருப்பதாக C. R. ஸ்ரீநிவாச அய்யங்கார் பதிப்பு தமிழ் வால்மீகி ராமாயண கோட்டு

322-ம் பக்கத்திலும், 1. "ஸ்ரீகிருஷ்ண பகவான், பூமியைப் பிளந்து மேலெழும்பும் நாகஸர்ப்பங்களின் சிற்றத்தாலுண்டான மூச்சுக்காற்றுப் புகையோவென்றெண்ணும்படி தோன்றுகிற இந்திரநீலமணிகளின் தொடர்ச்சியால் நானாவிதமான இரத்தினப்பிரகாசத்துடன் கூடிய தாதுக்களையுடைய ரைவத பர்வதத்தைப்பார்த்தார்." என்று மாகம் 4—1லும், 2. "இத்தேசத்தில் வசிக்கும் ஜனங்கள் தங்கள்வீடுகளை மனோகரமான சந்திரகாந்தக் கற்கள் பரப்பிய தளவரிசைகளுள்ள அநேக மெத்தைகளுடன் அதி உன்னதமாகக் கட்டிக்கொண்டிருந்தார்கள்; அவ்வீடுகள் ஒவ்வொன்றும் மேகமண்டலத்தையளாவியிருந்தன; அதனால் ஒவ்வொரு தினங்களிலும் அந்த உயர்ந்த மாளிகைகளிலிருந்து ஜலதாரைகளின் வழியாகத் தண்ணீர் கீழே விழுவது, மேகம் அகால மழை பெய்கிறதோவென்று நினைக்கும்படியாயிருந்தது." என்றுமாகம் 3—44லும்" "3. இத்தேசமானது, அழிவில்லாத ஐஸ்வர்யத்திற்கு ஸ்தானமாயும், அந்நியராஜாக்களால் ஜயிக்கமுடியாததாயும், சூரர்களான காவலாளிகளால் காக்கப்பட்ட அநேக உன்னதமான மாளிகைகள் நிறைந்தும், மதயானைகள் நிறைந்த இராஜவீதிகளால் பிரகாசிக்கப்பெற்றும் இருந்தது; மலையையடுத்த

१ निस्वासधूमं सह रत्नभाभिः भित्वोत्थितं भूमिमिवोरगाणां।
नीलोपलस्यूतं विचित्रधातु मसौ गिरिं रैवतकं ददर्श ॥४॥

२ क्रान्तेन्दुकान्तोपल कुट्टिमेषु प्रतिक्षणं हर्म्यतलेषु यत्र ।
उच्चैरधः पाति पयोमुचोऽपि समूहमूहुः पयसां प्रणाल्यः ॥५॥

३ अजर्जराश्रियां धामं वेपालक्ष्य जरज्जरः।
अस्ति सौराष्ट्रदेशोऽन्यसज्जराजन्य दुर्जरः ॥६॥
प्रासादा यत्र दृश्यन्ते मत्तवारण राजिताः।
राजमार्गाश्च शोभन्ते मत्तवारण राजिताः ॥७॥
महर्षयश्च निःसंगा नवन्धूपगमं श्रिताः॥



வனங்களில் மஹரிஷிகள் ஆஸ்ரமங்களை ஸ்தாபித்து வசித்திருந்தார்கள்." என்று பிரபாவக சரித்ரம் 14—5—8லும் சொல்லப்பட்டிருப்பதால் பூர்வத்தில் ஹர்யஸ்வனென்னும் அரசனாலும், துவாபரயுகத்தின் முடிவில் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவினாலும் ஸௌராஷ்ட்ர தேசம் அரசாக்ஷி செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. ("1. ஹர்யஸ்வனென்னும் அரசன் நிமி வம்சத்தில் பிறந்த த்ருஷ்டகேதுவின்பிள்ளை; சீதையின் தகப்பனான ஜனகமஹாராஜனுக்கு 11-வது தலைமுறைப் பாட்டன்." (வா. ரா. 1. 71. 8.) மேலும் ஸௌராஷ்ட்ர தேசமானது, பூர்வத்தில் மிக்க செல்வம் பொருந்தியதென்றும் ஸ்பஷ்டமாக விளங்குகிறது.

சோமகாந்தன் என்னும அரசன் ஸௌராஷ்ட்ர தேசத்தை யாண்டு வானப்ரஸ்தாஸ்ரமத்திற்குப் போகும் போது, தன் குமாரனான ஏமகண்டனுக்கு நீதியுபதேசித்திருக்கிறதாக விநாயகபுராணங் கூறுகிறது.

அவர் தன் பிள்ளைக்கு உபதேசித்த நீதியின் ஒரு பாடல்:—

*("இரப்பவன் வாளா தேகவிலனெனு மெவ்வங்கூறுது,
இரப்பினை நிரப்ப நன்றும்; இதனினன்றுவதாகும்;
இரப்பவனிலனென்றுரவியம்பியவெவ் வஞ்சொல்லென்று
இரப்பினும் பிறர்பாற் கூறுதிரக்கமோடீதன் மைந்தா.)

என்பதே. இந்த சோமகாந்தன் சோமசர்மாவென்று பாகவதத்திற் கூறப்படுகிறான். எப்படியெனில்:—2. ,,சாணக்கிய னென்னும்பிராமணன் மௌர்யவம்சத்தில்பிறந்த சந்திர

* குழந்தாய்! நீ உன்னிடம்யாசிக்க வருகிறவன், இல்லையென்னுந்துன்பத்தைத்தருகின்ற சொல்லை உன்னாலாவது யாசகனாலாவது சொல்லப்படாமலும், அவன் ஒன்றையும் பெறுமற்போகாமலும் மனோரதம் பூர்த்தியாகும்படி தருமஞ் செய்வது நல்லது; மேற்சொன்ன இல்லையென்னும் துன்பத்தைத்தருகின்ற சொல்லையவாது கொடுவென்று யாசகன் உன்னைக்கேட்டாலும் அதைப்பிறரிடமுஞ்சொல்லாமல் அவன் மேல் இரக்கப்பட்டு அவன்மனோபீஷ்டம் நிறைவேற்றுவது மிகவும் நல்லதாகும்.

१ धृष्टकेतोश्च राजर्षे हर्यश्व इति विश्रुतः ॥८॥

குப்தனென்னும் அரசனைசிம்மாசனமேற்றுவான்; சந்திரகுப்தன் குமாரன் வாரிசாரன்; வாரிசாரன் பிள்ளை அசோகவர்த்தனன்; அசோகவர்த்தனன் பிள்ளை சுயஸஸ்; சுயஸஸ்ஸின் பிள்ளை சங்கதன்; சங்கதன் பிள்ளை சாலிசூகன்; சாலிசூகன் பிள்ளைசோமசர்மா" என்று ஸ்ரீமத்பாகவதம் 12-வது ஸ்கந்தம் 1-வது அத்தியாயம் 13, 14, சுலோகம் வரை சொல்லுகிறது. சோமசர்மா ஸௌராஷ்ட்ர தேசத்தை அரசாக்ஷிசெய்தது சுமார் கி. மு. முதல் நூற்றாண்டு.

ஆப்டே (Apte) சம்ஸ்கிருத இங்கிலீஷ் அகராதியில் ஸௌராஷ்ட்ரம் என்ற பதத்தின் உரையில் "அஸ்தி ஸௌராஷ்ட்ரேஷு வலபீ நாமநகரீ" என்று உதாகரண வாக்கியமொன்று எழுதியிருக்கிறது. அதனால் ஸௌராஷ்ட்ர தேசத்தில் வலபீ நகரமானது ஒரு முக்கிய பட்டணமாயிருந்ததென்று தெரிகிறது. கி. பி. 319-ம் வருஷ முதல் வலபியப்தமென்று ஓர் சகாப்தம் வழங்கியிருந்தது.

இந்த வலபீ நகரத்தில், 1. கி. பி. 449-ல் ஸ்ரீதரசேனரும், கி. பி. 559-ல் குஹசேனரும், கி. பி. 571-லும் 589-லும் ஸ்ரீதரசேனரும், கி. பி. 565-ல்பிரதமசிலாதித்தியரும், கி. பி.

२ स एव चन्द्रगुप्तं वै द्विजो राज्येऽभिषेच्यति।
तत्सुतो वारिसारस्तु ततश्चाशोकवर्धनः ॥ ९ ॥
सुयशा भविता तस्य संगतः सुयशः सुतः ।
शालिसूकस्ततस्तस्य सोमशर्मा भविष्यति ॥१० ॥

१ -*-वलभीप्रभोः श्रीधरसेनमहाराजानां चतुर्थं दानपत्रम्-*-
वलभीप्रभुः परमभट्टारक महाराजाधिराजपरमेश्वर चक्रवर्ति —श्री धरसेनः कुशली सर्वानेवसमाज्ञापयति-आनर्तपुरचातुर्विद्य सामान्य सकेराक्षिसगोत्र**नारायणाय–देसराक्षितिग्रामः–उदकातिसर्गेण धर्मदायो निसृष्टः ॥ प्राचीनलेखमाला२–१८०–॥ ( सन ४४९. )॥११॥



631-ல் ஸ்ரீஹர்ஷருத்த ரவால் ஸ்கந்தகுப்தரும், கி. பி. 634-ல் 3வது துருவசேனரும், கி. பி. 656-ல் ஸ்ரீகரக்ரஹரும் தர்மசாசனங்களெழுதி கிராமங்களை தானஞ் செய்திருக்கிறார்கள். (பிராசீன லேகமாலையில் தானசாசனங்கள் ஒவ்வொன்றும் மிகவிஸ்தாரமாக யெழுதப்பட்டிருப்பதால் புஸ்தகத்தின்விரிவையஞ்சி சம்ஸ்கிருதத்திலெழுதவில்லை. மாதிரிக்கு முன் பக்கத்தில் சில பதங்கள் காணலாம். முழுமையும் பார்க்க விரும்புகிறவர்கள் பிராசீன லேகமாலையிற் காண்க).

ஸௌராஷ்ட்ர தேசத்திற்கு பெரும்பான்மை குஜராதியென்று வழங்குகின்ற காரணம்:—முற்காலத்தில் கூர்ஜரமென்று வழங்கியதேசம் பஞ்சாப்பிலிருக்கிறது. அங்கிருந்து தெற்கு வந்த குஜராதியர் ஸௌராஷ்ட்ரத்தில் குடியேறி வசித்ததினால் இதுவும் குஜராதி யென்று வழங்கலாயிற்று.

கி. பி. 670-ல் சிலாதித்தியர் என்ற ஹர்ஷ மஹாராஜா டௌண்டவ்ய கோத்திரத்தில் பிறந்த வாஜஸநேயி தனபதி, பட்டீஸ்வரர் என்னும் இரண்டு சகோதார்களுக்கு ஸௌராஷ்ட்ர தேசத்தில் மதுமதீதுவாரத்தில் தேசேனக கிராமத்தின் கீழ் பாகத்திலிருக்கிற "ஆவர்த்த பரிசார" வென்னும் குளம் உள்பட 3-கிராமங்களை தானங்கொடுத்தார் பி. லே. மா 3—38

श्रीशीलादित्यः कुशली सर्वानेवसमाज्ञापयति-डौण्डव्यसगोत्र वाजसनेयि.... धनपति....भट्टीश्वराभ्यां सोदराभ्यां सुराष्ट्रेषु मधुमतीद्वारे देसेनकग्रामे पूर्वसीम्नि आवर्तपरिसरावापीसमन्वितंक्षेत्रखंडत्रयं.... उदकातिनिसर्गेण धर्मदायो निसृष्टः ॥ प्रा=ले=मा.॥ ३-३८.॥ १२ ॥

१ ॐस्वस्ति श्रीविक्रमशक.७९४.सौराष्ट्रमण्डलाधिपतिः।–श्रीजाईकदेवः चतुर्वेदविदे....मुद्गलगोत्राय....ईश्वरनाम्ने ब्राह्मणाय तद्धेनिकानाम ग्रामं....उदकपूर्वकं भूमिलाकामध्ये दत्तवान् ॥ सन ॥ ८५१ ॥ १३॥

1. கி. பி. 851-ல் ஸ்ரீஜாயீகதேவரென்னும் அரசன் முத்கல கோத்திரத்தில் பிறந்த ஈஸ்வரனென்னும் பிராமணனுக்கு ஸௌராஷ்ட்ர தேசத்தில் பூமிலாகா ராஜ்யத்திலிருக்கிற தத்தேனிகா வென்னும் கிராமத்தை தானஞ்செய்தார் (ஷி 2—22.)

கி. பி. 1024-ல் கஜினி மஹம்மது யென்பவன், இந்த ஸௌராஷ்ட்ர தேசத்திலுள்ள சோமநாதஸ்வாமி ஆலயத்தில் பிரவேசித்து சோமநாத விக்ரஹத்தை தன் இரும்பாயுதத்தால் உடைத்து அதிலிருந்து பல பல வென்று உதிர்ந்த இரத்தினங்களைக் கொள்ளையடித்துப் போகும் போது தன் தளகர்த்தரில் ஒருவனை நியமித்துப் போனான். ஆனால் அவன் இரண்டு வருஷந்தான் அங்கிருக்க முடிந்தது.

பிறகு சுதேச அரசர்கள் அரசாக்ஷி செய்திருந்தார்கள். 2. கி. பி. 1259-ல் சௌராஷ்ட்ர தேசத்தில் மங்களபுரத்தில் (Mangrol) அரசு செய்திருந்த சோமராஜ மஹாராஜாவின் சகோதரர் ஸ்ரீமூலுகரென்பவர் ஸ்ரீசோமநாதஸ்வாமி தேவாலய கைங்கர்யத்திற்கு தேகயாவாவீ யென்னும் பெயருள்ள தோட்டத்தை தர்மசாஸனஞ் செய்தார். (பி. லே. மா. 2—23-24).

மேற்சொன்ன சாஸனம் முதலான ஆதாரங்களால் ஸௌராஷ்ட்ர தேசத்தின் எல்லைகளும், அந்த தேசத்தின் செல்வமும் சிறப்பும், அதில் அரசு செய்தவர்கள் சந்திரவம்சத்து அரசர்கள் என்றும், தெளிவாக விளங்குகிறதல்லவா?" என்றார்.

---

२ ....अवनौ सौराष्ट्ररक्षाक्षमः ॥....सोमराज इति क्षितौ ।
श्रीसोमनाथ देवस्य जगत्यां पुण्यवृद्धये ॥ १४ ॥
पूजार्थ मस्य देवस्य भ्राता ज्येष्ठोस्य मूलुकः ॥
सुराष्ट्रानायकः [दिगयावाविंवापिं] प्रादाच्छासनं कुलशासनम् ॥ १२ ॥



3. சேதுராமன்:—"ஸ்வாமி! தாங்கள் சொல்லுவதெல்லாம் ப்ரமாண பூர்வகமாகயிருப்பதால் நான் அவற்றை சத்தியமாக நம்புகிறேன்; இப்பொழுது, ஸௌராஷ்ட்ர தேசத்தை யார் அரசாக்ஷி செய்கின்றார்கள்? இவ்வளவு ஐஸ்வர்யமுள்ள தேசத்தை விட்டு ஸௌராஷ்ட்ரப் பிராஹ்மணர் இந்தப் பிராந்தங்களுக்கு வரவேண்டிய காரணமென்ன?" என.

சிரௌதிகள்:—"குழந்தாய்! ஸௌராஷ்ட்ர தேசத்தை இப்பொழுது க்ஷத்திரிய (ரஜபுத்ர) அரசர்கள் பிரிட்டிஷ் ராஜாங்க ஆதாவின் மேல் அரசியற்றுகின்றனர். ஸௌராஷ்ட்ர தேசம் இப்பொழுது அநேக பாகங்களாகப் பிரிந்திருக்கிறது; அவற்றில் சில முக்கிய பட்டணங்களைச் சொல்லுகிறேன் கேள்; 1. ஜூனாகரா:—இது பூர்வத்தில் ஜவநகர் அல்லது தேவநகரம் என்று வழங்கியது; இதுதான் ஸௌராஷ்ட்ர தேசத்தின் பூர்வீக ராஜதானி; இது கத்தியவாரின் முக்கிய பட்டணம்; இதற்குப்போக பம்பாயிலிருந்து அஹமடாபாட் வழியாக (B. G. J. P. Ry.) 559-மைல் தூரமிருக்கிறது, 3-வது வகுப்பு ரெயில் சார்ஜ் ரூ 5—15—0.

இதற்குக் கிழக்கு 10 மைல் தூரத்திலுள்ளது கிரிநாராயண மலை. (Girnar Hill) இந்த மலையடிவாரத்துப் பாறையில் கி. மு. 250-ல் அசோக மஹாராஜாவினால் செதுக்கப்பட்ட கல்லெழுத்துக்கள் நிறைந்திருக்கின்றன. இம்மலையில், முக்கியமான 16 தேவாலயங்களிருக்கின்றன. அவை மலையினுச்சிக்கு 600 அடிக்குக்கீழிருக்கின்றன. அவற்றில் பெரிதும், புராதனமுமானது நேமி நாதராலயம்.

விக்ரம சகாப்தம் 1288-க்கு கி. பி. 1232-ல் அநஹல்வாரியில் அரசுபுரிந்த பிராக்வாட வம்சத்தில்பிறந்த "வஸ்துபாலர் தேஜபாலர்" என்னும் இரண்டு சகோதரர், நேமிநாதராலயத்தை ஜீர்ணோத்தாரணம் பண்ணின விவரம் 6 சிலாஸாஸனங்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன. (பி. லே. மா. 3. 185—203.)

இவ்வாலயத்தின் முன் புறத்தில் 70-குகைகளிருக்கின்றன. இவ்விடம் போக மலையடிவாரத்திலிருந்து படிக்கட்டுக

ளும் இடையில் அங்கங்கே சிரமபரிகார சாவடிகளுமிருக்கின்றன. இம்மலையால், இங்கு வசித்த பிராமணர்களுக்கு; கிரிநாராயணப்பிராமணரென்ற ஓர்பெயரும் வழங்கியிருந்தது.

2. சோமநாதபுரம்:—இது ஜூனாகாராவுக்கு ஐக்கியமானது; இது புராதனமானது; இங்கே தான் சோமநாதஸ்வாமி தேவாலயமிருக்கிறது; சோமநாதாலயம் சமுத்திரக்கரையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாலயத்து லிங்கம் துவாதசஜ்யோதிர் லிங்கங்களிலொன்று; ஆலயத்தின் சிலகஜங்களுக்குப்பின் புறத்தில் "பாத்குண்டா" என்ற தீர்த்தமிருக்கின்றது; 1. "இங்கே தான் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா விதேஹமுக்தியடைந்தார்" என்று ஸ்ரீமத் பாகவதம் 11-வது ஸ்கந்தம் 31-வது அத். 1—6-சு. ல். சொல்லியிருக்கிறது.

இதற்கு தேவிபட்டணம், ப்ரபாச பட்டணம் விராவல் பட்டணமென்ற பெயர்களுண்டு.

இது விசேஷமான புண்ணியஸ்தலம். குருக்ஷேத்திரத்தில் கௌரவபாண்டவாள் யுத்தம் செய்து மடிந்தால் வீரஸ்வர்க்கங்கிடைக்குமென்று அந்த க்ஷேத்திரத்தில் யுத்தம்செய்தது போல யாதவாள் பிரபாஸ க்ஷேத்திரத்தில் பரஸ்பரயுத்தத்தில் இறந்து உத்தமகதியடைந்தார்கள். (மகாபாரதம் மௌசலபர்வம்.) 2. "பகவானான கிருஷ்ணனாஜ்ஞையால் யாதவர்கள் துவாரகையை விட்டு வண்டிகளினாலும் குதிரைகளினா

---

१ वयं प्रभासं यास्यामो यत्र प्रत्यक्सरस्वती । ....अथ तत्रा [प्रभासे] गमद्ब्रह्मा मुनयः सप्रजेश्वराः । द्रष्टुकामा भगवतो निर्याणं परमोत्सुकाः

॥ भगवानपि तान् वीक्ष्य विभूतीरात्मनो विभुः ।

संयोज्यात्मनि चात्मानं पद्मनेत्रे न्यमीलयत् ॥ लोकाभिरामां स्वतनुं धारणाध्यानमंगलम् । योगधारणयाग्नेय्या दग्ध्वा धामाविशत्स्वकम् ।१५

२ ततः सीधुषु सक्ताश्च निर्ययुर्नगराद्बहिः । यानैरश्वैर्गजैश्चैव श्रीमन्तस्तिग्मतेजसः ॥ ततः प्रभासे न्यवसन्यथोद्दिष्टं यथासुखम् । प्रभूतभक्ष्यपेयास्ते सदारा यादवास्तदा ॥१६॥ भारतम्, मौस०,४,१०–११.



லும், யானைகளினாலும் நடுவழியைக்கடந்து பிரபாசம் (சோமநாதபுரம்) அடைந்து தங்களுக்கிஷ்டமான விடங்களில் சதுர்விதான்ன சகிதமாய் தங்கள் தங்கள் மனைவிகளுடன் சுகமாக வசித்தார்கள்." (பார. மௌ. பர். 4-10-11.)

* சந்திரபகவான் தக்ஷப்பிரஜாபதியின் புத்திரிகள்-27 பேரைக்கல்யாணம் பண்ணிக்கொண்டார். அவர்களில் ரோஹிணியிடம் அதிகப்பிரீதிவைத்து மற்றமனைவிகளை உபேக்ஷித்தார். அதனால் அவர்களுக்குப் பொறாமையுண்டாகித் தங்கள் பிதாவான தக்ஷப்பிரஜாபதியிடம் போய் தங்கள் குறையைச்சொல்லி முறையிட்டார்கள்; அதைக்கேட்ட தக்ஷப்பிரஜாபதிக்குக் கோபமுண்டாகி சந்திரனுக்கு க்ஷயவியாதி சம்பவிக்கும்படி சபித்தார்.

பிறகு, சந்திரனுக்கு க்ஷயவியாதியுண்டாகிநாளுக்குநாள் கலை தேய ஆரம்பித்தது; அதனால் உலகத்திலுள்ள தேவதிர்யங் மனுஷ்யாதி பிராணிகளுக்கு க்ஷயமுண்டாயிற்று. அது கண்ட தேவர்கள் தக்ஷப்பிரஜாபதியிடம் போய் சந்திரனுக்குண்டான க்ஷயவியாதியால் உலகத்திற்கு நேர்ந்திருக்குந்தீங்கைச்சொல்லி சோமனுக்கு அச்சாபம் நிவர்த்தியாகும் உபாயஞ்சொல்லும்படி பிரார்த்தித்தார்கள்.

அதற்கு தக்ஷப்பிரஜாபதி, சந்திரன் பிரபாச க்ஷேத்திரத்தில் சரஸ்வதீ சங்கமசமுத்திரத்தில் அமாவாசையன்று ஸ்நானஞ்செய்து அங்கெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீசோமநாதஸ்வாமியை தர்சித்து அங்கு ஓர் யஜ்ஞஞ் செய்து பிராமணர்களுக்கு விசேஷதானங்கள் கொடுத்தால் க்ஷயவியாதி தீருமென்று தேவர்களுக்குச் சொல்லியனுக்கிரகித்தார். (பாரதம்சல்யபர். அத். 36.)

"1. அப்படியே சந்திரபகவான், ரிஷியினாஜ்ஞைப்படி பிரபாசக்ஷேத்திரத்தில் சரஸ்வதீ நதி சமுத்திர சங்கமமாகுமிட

---

१ सरस्वतीं ततः सोमः स जगामर्षिशासनात् । प्रभासं प्रथमं तीर्थं स

---

* இது ஒரு அத்தியாயத்திலுள்ள சில சுலோகங்களின் கருத்து.

த்தில் அமாவாசையன்று விதிப்படி ஸ்நானஞ்செய்து தன் க்ஷயவியாதி தீர்ந்து உலகத்திற்கும் குளிர்ந்த காந்தியினால் பிரகாசங்கொடுத்தார்." (பார. வனபர். அத். 36. சு. 34. 35.)

2. "சந்திரபகவான் தன் க்ஷய ரோகத்தை நிவர்த்தித்துக்கொள்ளும்பொருட்டு மஹாதேஜஸ்விகளான (ஸௌராஷ்ட்ர) பிராம்மணர்களை ரித்விக்குகளாகவரித்துக்கொண்டு ஸௌராஷ்ட்ர தேசத்தில் ஸ்ரீசோமநாதஸ்வாமி தேவாலயத்தின் சமீபத்தில் ஓர் யஜ்ஞஞ்செய்தார். யஜ்ஞமுடிவில் அந்தப்பிராமணர்களுக்கு வசிக்கும் பொருட்டு சோமபுரியை தானங்கொடுத்தார்; கூடஸ்வர்ணம் ரத்தினம் முதலான தக்ஷிணைகளுடன் அநேக தானங்களைக்கொடுத்தார். அந்தப்பிராமணர்கள், சந்திரபகவானால் சோமபுரியில் ஸ்தாபிக்கப்பட்டபடியால் அவர்களை சோமபுரி பிராமணாள் என்று அறிய வேண்டியது" (பி. மா. பக். 556.)

சோமநாதபுரத்திற்கு சமீபத்தில் விராவல் துறைமுகமிருக்கிறது. அது ஒரு ரெயில் ஸ்டேஷன் பாவநகரிலிருந்து விராவலுக்கு 3-வது வகுப்பு ரெ சா. ரூ.2—9—0. 178-மைல் தூரம்.

3. மங்களபுரம்:—(Mangrol) இது ஒரு கடல் துறைமுகம். இது கி. பி. 1259-ல் சோமராஜ மஹாராஜாவுக்கு இராஜதானியாயிருந்தது.

---

रस्त्वा जगाम ह ।। अमावास्यां महातेजाः तत्रामज्जन्महाद्युतिः । लोकान्प्रभासयामास शीतांशुत्वमवाप च ।। १७ ।। भार०,वन,३६,३५-३६.
१ सौराष्ट्रे सोमपुर्यां वै सोमेशस्य समीपतः । सोमेन च कृतो यज्ञः स्व पापस्य विशुद्धये । तत्र यज्ञे वृता ये च ब्राह्मणाः परमोज्वलाः ।। तेभ्यः सोमपुरं सर्वं निवासार्थं ददौ मुदा । दाक्षिणां स्वर्णरत्नाढ्यां दानानि विविधानि च ।। सोमेन सोमपुर्यां वै स्थापिता ये द्विजोत्तमाः । ते वै सोमपुरा विप्रा विज्ञेया नात्र संशयः ।। १८ ।। ब्राह्मणो०,मार्तण्ड.पृष्ठं,५५६.



4. போர்பந்தர்:—(Porbandar) இதுவுஞ் சமுத்திரக்க
றைத்துறைமுகப்பட்டணம். இங்கே பி. ஜி. ஜே. பி. ரயில்
வே (B. G. J. P. Ry.) முடிகிறது. பம்பாயிலிருந்து பிரி
ட்டிஷ் இந்தியன் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி ஸ்டீமர் வார
த்திற்கொருமுறை இங்குவந்து தங்கி, கராச்சிக்குப்போகிறது.
நகரம் முழுமையும் கற்களால் அமைந்திருக்கிறது. ஒரு நேர்த்
தியான கற்களினால் கட்டப்பட்ட மஹால் இங்கேயிருக்கிறது.
இது ஒரு நல்ல ஸௌக்கியமான வாசஸ்தலம். இங்கு சுமார்
15000-ஜனங்கள் வசிக்கிறார்கள்.

5. துவாரகை:—(Dwaraka) இது கத்தியாவார் தீபகல்ப
த்தின் மேற்கோடியிலுள்ளது; இது விசேஷமான யாத்திரை
ஸ்தலம்; இங்கே தான் பகவான் கிருஷ்ணமூர்த்தி பிற்காலத்
தில் யாதவர்களுடன் வாழ்ந்ததாக விஷ்ணு புராணம் பாக
வதம், பாரதம் முதலான கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கி
றது.

1. பகவான் தாருகனைப்பார்த்து, "என்னால் விடப்பட்
டதுவாரகை (யதுபுரி) யை சமுத்திரம் அமிழ்த்திவிடும்"
என்று பாக. 11. 30. 47-ல் சொல்லியிருக்கிறார். இக்காலத்
தில் சொல்லப்படுகிற துவாரகைக்கு மேற்கில் பூர்வதுவாரகை
சமுத்திரத்தில் மூழ்கி யிருக்கலாமென்று யாத்திரிகாளும் ஊ
ஹிக்கின்றார்கள். இங்கே பகவானுடைய நடவடிக்கைகளைக்
குறிப்பிடும்படியான அதிசயங்கள் இன்றைக்கும் காணப்படு
கின்றனவாம்.

பெடி பந்தரிலிருந்து துவாரகைக்கு ஸ்டீமர் செல்கிறது.
ஜாம்நகரிலிருந்து பெடிபந்தர் 4-மைல் தூரமுள்ளது.

6. ஜாம்நகர்:—(Jamnagar) இது ஓர் மஹாராஜாவினு
லராசாளப்படுகிறது. அவர் பட்டப்பெயர் "ஜீ" என்று வழங்
கிறது. அவர் க்ஷத்ரிய (ரஜபுத்ர) வம்சத்தைச்சேர்ந்தவர்
இவ்வூரில் ஓர் அரண்மனையிருக்கிறது. இது ஒரு பெரிய வியா
பாரஸ்தலம். இப்பட்டணத்தில் போஸ்டாபீஸ் ஸ்கூல் ராணுவ
ஆபீஸ் முதலியனவிருக்கின்றன. பம்பாயிலிருந்து 517 மைல்

---

१ मया त्यक्तां यदुपुरीं समुद्रः प्लावयिष्यति ।१९। भाग, ११,३०,४७.

தூரமிருக்கிறது. 3-வது வகுப்பு மெயில் வண்டிக்கு சார்ஜ் ரூ. 7—12—0. இந்நகரில் 40000 ஜனங்கள் வசிக்கிறார்கள்.

7. நவநாகர் (Navanagar) இது ஜாம்நகரின் பூர்விக ராஜதானி. ஜாம்நகருக்குக்கிழக்கு சுமார் 15-மைல் தூரமுள்ளது.

8. ராஜகோட்டை:—(Rajkot) இங்கே கத்தியவாரிலுள்ள சுதேசராஜ்யங்களின் ரெஸிடெண்ட் வசிக்கிறார். முக்கியமான சர்க்கார் உத்தியோக ஆபீஸ்கள் இங்கிருக்கின்றன இவ்விடத்தில் ஓர் ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல் மிஸ்டர் (G. N. Pandit) ஜி. என். பண்டிதர் தலைமையின் கீழ், நடைபெறுகிறது. இங்கே தர்மசாலைகளும் பங்களாக்களுமுண்டு. இது ஒரு ரெயில்வே ஜங்கிஷன் ஸ்டேஷன்.

9. வாத்வான்:—(Wathwan) இங்கே ஒரு கற்கோட்டைச்சுவர் இருக்கிறது. இங்கு 72 அடி உயரமும் 4 அடுக்குகளுமுள்ள ஓர் மஹால் பட்டணத்திற்கு நடுவிலிருக்கிறது. இங்கே ராஜகுமாரர்கள் வாசிக்கும் காலேஜ் ஒன்றுண்டு. இதுவும் ரெயில் ஜங்கிஷன் ஷ்டேஷன்.

10. பாவநகர்:—(Bhavnagar) இது முக்கியமான கடல் துறைமுகப்பட்டணம். இது பாவநகரமென்ற சுதேசராஜ்யத்தின் ராஜதானி. அநேக ஆபீஸ்களும் ஸ்கூல்களும் இதர முக்கியமான கட்டடங்களும் இங்குண்டு. இதையாளுகிற அரசருக்கு பட்டப்பெயர் "ஸிங்ஜீ" என்று வழங்குகிறது.

11. கோஹில்வாரி. (Ghoghi) இது பாவநகருக்குச் சமீபத்திலுள்ளது.

12. அநஹல்வாரி:-(Anroli) இது கிரிநார் மலையிலுள்ள நேமிநாதராலயத்தை, கி. பி. 1232-ல் ஜீர்ணோத்தாரணம் பண்ணின வஸ்துபாலர் தேஜபாலருக்கு இராஜதானியாயிருந்தது. இது வலபிபுரத்திற்குச் சமீபத்திலுள்ளது. வலபியென்ற பெயர் இப்பொழுது வழக்கத்திலில்லை; ஆனால் அது சரித்திரப் பிரசித்தமானது.



13. பூஜ் (Bhooj) இது கச்சு தீவின் முக்கியபட்டணம். பம்பாயிலிருந்து மாண்டவிக்கு ஸ்டீமர் வருகிறது. மாண்டவியிலிருந்து பூஜுக்கு நல்லசாலை (Road) யிருக்கிறது. (மாண்டவியென்பது கச்சு தீவிலுள்ள ஒரு துறைமுகம்) இது பூர்வத்தில் 'ரோஹுர' என்று வழங்கியது.

லெஸ்ஸர் ரன் ஆப் கச் (Lessur run of Cutch) முதல் காம்பே வரை கிரிய வரியின் தென்மேற்கில் கத்தியாவார் தீபகல்பத்தின் எல்லைப்படி சரியாய்க் குறித்திருக்கிற அளவு விஸ்தீரணத்தை ஸௌராஷ்ட்ர தேசத்தின் எல்லை யென்று பூர்வத்தில் அலெக்ஜாண்டர் கனிங்காம் எழுதிய பூகோளசாஸ்திரம 324-ம் பக்கத்தில் சொல்லியிருக்கிறது.

மேற்சொல்லி வந்த விவரங்களால் தற்காலத்திலும் சௌராஷ்ட்ர தேசம் மிகவும் செல்வம் பொருந்தியதென்று தெளிவாகவிளங்கும். இராமாயணத்தில் இலங்கையை மஹாமேருமலையின் சிகரங்களென்று வர்ணித்திருப்பதுபோல, மாககாவ்யம் 3 வது சர்க்கத்தில் துவார்கையை (துவாரகையுடைய ஸௌராஷ்ட்ர தேசத்தை) மேருசிகரம் முன்காலத்தில் கிருஷ்ண பகவானுக்கு சந்தோஷமுண்டாகும்பொருட்டு தேவர்களால் ஸ்தாபிக்கப்பட்டதாக வர்ணித்திருக்கிறது.

ஸௌராஷ்ட்ரர்கள் இவ்வளவு மஹிமைபொருந்திய தேசத்தைவிட்டு வெளிப்படவேண்டியகாரணம்:—கி. பி .1024-ல் கஜினி மஹமது கலகம்முதல் அலாவுடீன், டோக்ளாக், டைமூர், முதலிய அன்னியமதஸ்தர்கள் சுமார் கி. பி. 1500-ம் வருஷம்வரையில் பஞ்சாப், மாளவம், மஹாராஷ்ட்ரம் ஸௌராஷ்ட்ரம் சூரசேனம், முதலிய தேசங்களின்மீது, படையெடுத்துவந்து, கோயில்களையிடித்தும், ஜனங்களைக்கொன்றும் இன்னம் அநேகவிதமான கொடுமைகளைச்செய்தது சரித்திரப்பிரசித்தமல்லவா? அப்பொழுது மஹாராஷ்ட்ரம் முதலிய அநேகதேசத்தார் தங்கள் உயிர்தப்பினால் போதுமென்று வெளிதேசங்களுக்குப்போனார்கள். அப்படியே ஸௌராஷ்ட்ர தேசத்தாரும் தங்கள் தேசத்தைவிட்டு வெளிக்கிளம்பினர். சிலகாலம், தேவகிரி (Doudalabad) யில் வசித்தார்கள். பிறகு

அவ்விடத்தில், கலகமேற்பட்டதால் தெற்கு முகமாக வந்து கொஞ்சகாலம் விஜயநகரில் வசித்தார்கள்.

தேவகிரி:—பம்பாயிலிருந்து மன்மாட் (Manmad) வழியாக நிஜாம் ரெயில் லயனில் 178-வது மைலிலுள்ள ஔரங்கபாத்திற்கு வடமேற்கில் 8மைல் தூரத்தில் "தௌதலாபாத்" (Doudalabad) என்ற பெயருள்ள ஸ்தலம்.

கி. பி. 1017-ல் கஜினிமஹமது, மதுரா (Mutra.)வைத் தாக்கி கோவில்களையிடித்தும், பொருள்களைக் கொள்ளையடித்தும் ஜனங்களை ஹிம்ஸித்தபோது, அங்கிருந்த 'யாதவர்" தேவகிரிக்கு வந்து சுகமாக வசித்தனர்.

வடஇந்தியாவிலிருந்து தேவகிரிக்கு வரவேண்டுமானால் நடுவிலுள்ள விந்திய மலையைக் கடப்பது இலேசான காரியமல்ல; அதனால், வட இந்தியாவில் கலகஞ் செய்த மகமதியர் வெகுநாள் தேவகிரிக்குவராமலிருந்தனர்; இப்பட்டணம் சமுத்திர மட்டத்திற்குமேல் 2289. அடி உயர்ந்திருப்பதனால் ஸௌக்கியமான வாசஸ்தானமாயிருக்கிறது.

இங்கு குடியேறின யாதவர், ஸௌரஸேனியின் மிசிரமான வ்ரஜ பாஷையைப் பேசி வந்தனர்.

ஸௌராஷ்ட்ரப் பிராமணர், இங்கு வந்தபோது யாதவர் பேசிய வ்ரஜபாஷை தங்களுக்குச்சொந்த பாஷையின் சம்பந்தம் விசேஷித்திருந்தமையால் அப்பாஷையின் சில பதங்களைத் தங்கள் பாஷையில் சேர்த்துக்கொண்டனர்.

"சாளுக்ய வம்சத்தில் பிறந்த "விக்ரமார்க்கன்" என்னும் அரசன், கி. பி. 1076 முதல் 1126 வரை கல்யாணியிலிருந்து தக்ஷிண முழுமையும் அரசாக்ஷி செய்தார். அதன்பிறகு முன் சொன்ன யாதவர், தேவகிரியிலிருந்து அரசியற்றினர். (யாதவர்:—யயாதி மஹாராஜாவின் முதல் மனைவியும் சுக்ரன் புத்திரியுமான தேவயானையின் ஜேஷ்ட புத்ரன் யது; அவனுடைய சந்ததியார் யாதவர்; இந்த வம்சத்தில் வசுதேவருக்கும் தேவகீ தேவிக்கும் புத்திரராக பகவான் கிருஷ்ணனுக அவதரித்தது.)



கி. பி. 1294-ல் அலாவுடீன், வட இந்தியாவிலிருந்து மஹா பிரயாசைப்பட்டு விந்திய மலையைக்கடந்து தேவகிரிக்கு வந்து அரசனைச் சிறையில் வைத்து அங்குள்ள பொருள்களைக் கொள்ளையடித்து ஜனங்களைப் பலவாறு ஹிம்ஸித்துத் திரும்பி, தன்னை யெதிர்கொண்டழைக்க வந்த தன் பெரியப்பனும் தனக்குப் பெண்கொடுத்த மாமனுமான "ஜலால்உத்தீனைத்" துரோகமாகக்கொன்று தானே சக்கிரவர்த்தியானான். என்று இந்துதேசசரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது."

இச்சம்பவத்தில் ஸௌராஷ்ட்ரப் பிராமணர்கள், அங்கிருந்து தெற்குமுகமாகத்திரும்பி விஜயநகரத்திற்கு வந்தார்கள்.

விஜயநகரம்:—இது பூர்வத்தில் வித்யாரண்ய நகரமென்றபெயருடன் பிரஸித்தி பெற்றிருந்தது. வித்தியாரண்யஸ்வாமிகளால் ஸ்தாபிதமானபடியால் அப்பெயர் வழங்கியது. பின்னால் வந்த அரசர்கள் ஜயசீலர்களாக விளங்கியதனால் விஜயநகரமென்றும் பிரக்கியாதியடைந்தது.

இப்பட்டணம் பல்லாரி ஜில்லாவில் துங்கபத்திரா நதிக்கரையில் ஹம்பி என்ற கிராமத்தினருகில் இருந்தது. அது இடிந்த பிரம்மாண்டமான கட்டங்களால்காட்டுகிறது. இதை கிஷ்கிந்தையென்றும் பம்பாதீரமென்றும் சொல்லப்படுகிறது.

இங்கே கி. பி. 1312 முதல் விஜயாப்தமென்ற ஓர் சகாப்தமாரம்பமாயிருந்தது.

*ஸித்தம் சாரஸ்வதம் என்பது முதலான பிருதுகளால் அலங்கரிக்கப்பட்டவரும், காம்பீர்ய வீர்ய பராக்ரமௌதாரியாதி குணங்களுடன்கூடியவரும், தசதிசைகளி

---

* सिद्धसारस्वतेत्यादिविरुदावलिभूषित:, स खलु श्रीवीरप्रतापहरिहरदेवमहाराय:. । श्रीतुंगभद्रापरिखे नगरे विजयाह्वये। पम्पायां भास्करक्षेत्रे श्रीविरूपाक्षसान्निधौ ॥ (१३२१.मिते शालिशके.) औमळाध्वरिव-

னும் பாவிய கீர்த்தியடைந்தவருமான 'ஸ்ரீ ஹரிஹர தேவ மஹாராய' ரென்னும் அரசர், கி. பி. 1399-ல் (சாலிவாஹன சகாப்தம் 1321) ஸ்ரீ துங்கபத்திரா நதிக்கரையிலிருக்கிற விஜயநகரத்தில் (பம்பா நதிக்கரையிலிருக்கிற பாஸ்கரக்ஷேத்திரத்தில்) ஸ்ரீ விரூபாக்ஷ சுவாமி சந்நிதியில் ஸ்ரீமத் பாரத்வாஜகோத்திரத்தில் பிறந்த நாராயணன் புத்திரர்களான "ஔமளாத்வரி" என்பவருக்கும், அவர் தம்பியும், ஸ்ருதிசாகர பாரகரும் மஹா தேஜஸ்வியுமான "நரஸிம்ஹயாஜி"க்கும் 'ஸ்ரீ நலூர்' என்னும் கிராமத்தை தானங்கொடுத்தார். அவ்விரு சகோதரர்களும் அந்த தானத்தைப்பெற்று அத்யயனாதி ஷட்கர்ம நிரதாளாயிருந்தார்கள். (பிரா. லே. மா 3,96—100).

*விஜயநகரத்தில் 'கிருஷ்ண தேவராய' ரென்னும் அரசரால் விரூபாக்ஷரென்னும் பெயருள்ள பரமேஸ்வரருக்கு நைவேத்தியத்திற்காக, சிங்கேநாயனஹல்லி, யென்னும் பெயருள்ள கிராமத்தை தருமசாஸனஞ் செய்யப்பட்டது. சாலிவாகன சகம் 1430. (பி. லே. மா. 2-168.)*

இங்கு சௌராஷ்ட்ரப் பிராம்மணர் சிலகாலம் ஸ்திரமாக வசித்திருந்தார்கள்; இது தெலுங்கு ராஜ்யமானபடியால்' தேசபாஷையான தெலுங்கு லிபி எழுதவும் படிக்கவும் பேசவும் கற்றுக்கொண்டார்கள். இதனாலும் காலாந்தரத்தில் தங்கள் ஸௌராஷ்ட்ர பாஷையில் சில தெலுங்கு பதங்கள் கலக்கலாயின.

"கி. பி. 1530-க்குமேல் கிருஷ்ணதேவராயதேவருடைய சந்ததியாருடன் மஹம்மதியர் பலமுறை எதிர்த்துக்கடைசி "தாளிக்கோட்டை" யுத்தத்தில் விஜயநகரத்தரசரை ஜெயித்து, பட்டணத்தில் பிரவேசித்துக் கொள்ளையடித்து, ஜனங்களைப் படுகொலைசெய்து, முக்கியமான கட்டடங்களையிடித்தும், கொளுத்தியும் ஐந்துமாதகாலம் நாசஞ்செய்தார்கள்." (இந்துதேச சரித்திரம்.)

இச்சமயத்தில் சௌராஷ்ட்ரப் பிராமணர் தெற்குமுகமாகத்திரும்பி சோளபாண்டிய தேசங்களில் குடியேறினார்கள்.

சோளபாண்டிய தேசங்களில் அப்பொழுது அரசு செலுதிக்கொண்டிருந்த சுதேச அரசர்கள் இவர்களை வெகு பக்ஷமாகக் காப்பாற்றிவந்தார்கள். ஆனால், சிறுகொள்ளைக் கூட்டத்தார் முதலிய துஷ்டர்களின் வழிபறி முதலிய தொந்தரவுகளும், காலமழை பெய்யாமற்போனால் ஓரிடமிருக்கும் உணவுப்பொருள்களை மற்றோரிடத்திற்கு தருவித்துக்கொள்ள ரயில்வழியும் நல்ல ரஸ்தாக்களும் இல்லாமையால் அடிக்கடி பஞ்சமுண்டாகும் கஷ்டமும், சிற்றரசர்களால் உண்டாகும் உள் நாட்டுக்கலகங்களும் பொதுவாக ஜனங்களெல்லோரையும் வருத்திக்கொண்டிருந்தன.

தெய்வாநுகூலத்தால் பிரிட்டிஷ் இராஜாங்கம் இந்தியாவில் வேரூன்றிய பிறகு மேற்சொன்ன குறைவுகளில்லாமலும், ரயில் ஸ்டீமர் தபால் தந்தி அச்சுயந்திரங்கள் கைத்தொழில் இயந்திரங்கள் சர்வகலாசாலைகள் முதலிய ஜனானுகூலங்களுண்டாகி, ஜனங்கள் தங்கள் உயிருக்கும் பொருளுக்கும் யாதொரு பயமின்றி சுகமாக வாழ்ந்துவருகிறார்கள். இத்தனையிலும் "இந்துக்கள் அவரவர்களுடைய மதங்களை



---

र्याय सानुजाय विपश्चिते । अदाद्ग्राममरं रम्यं श्रीनलूरिति संज्ञितम् ।
श्रीभरद्वाजगोत्रीय वरनाराणात्मजः। आर्च औमळयज्वातु पड्वृत्तिमिह
चाश्नुत ॥ तस्यानुजो महातेजा श्रुतिसागरपारगः। नृसिंहयज्वा च कृती
श्चत्तिपद्क्रमवाप्तवान्. प्राचीनलेखमाला,३,९६-१००. (२०)
*. विजयनगरे ....कृष्णदेवरायेण....विरूपाक्षाभिधानाय....शूलिने—
नैवेद्याय सिंगेनायकनहल्लीतिविख्यातनामा-ग्रामः दत्तः.(२१)

---

இந்த சாஸனத்திற்காதார சாஸனம் இப்பொழுது பாழடைந்திருக்கிற விஜயநகரத்திற்கு வடமேற்கில் துங்கபத்திரை நதிக்கரைக்குச் சமீபத்திலிருக்கும் 'ஹைம்ய' மென்ற கிராமத்திலிருக்கிற சிவன் கோவில் மண்டபத்தினெதிலிருக்கிற கல்மண்டபத்தில் செதுக்கப்பட்டிருப்பதை Dr. Pigsan என்பவரால் போட்டோகிராப் பிடித்து வெளியிடப்பட்டது. (A. D. 1509.)

யனுஷ்டிப்பதில் நாம் தலையிட்மாட்டோம்" என்ற லோக
மாதாவான காலஞ்சென்ற விக்டோரியா மஹாராணியார்
அவர்களுடைய அபயப்பிரதமான வாக்கியம் அநேக வழி
களில் இந்துக்களை நிம்மதியாக வாழச்செய்வது மறத்தற்
பாலதன்று.

இந்துக்கள், தங்கள் உயிரினும் பெரியது மதம் என்ற
கொள்கையுள்ளவர்களன்றோ!

நம் ஸௌராஷ்ட்ரப்பிராம்மணரும் கவர்ன்மெண்டாரால்
அடைந்திருக்கும் நன்மைகளை மறவாமல் ராஜபட்டாபிஷே
கம் முதலிய காலங்களில் காட்டிய ராஜவிஸ்வாசத்தைப்போல
எப்பொழுதும் பொது விஷயங்களில் கவர்மெண்டுடன் ஒத்து
ழைத்து வருவார்களாக. பிரிடிஷ் ராஜ்யம் நீடூழி வாழ்க.

ஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து வடக்கு, கிழக்கு, திசை
களில் சென்றவர்கள், அந்தந்த தேசத்து ஆசாரம் அவர்களு
க்கு ஒத்திருந்தபடியால் அவர்களுடன் கலந்துவிட்டார்கள்.

தக்ஷிணத்தில் வந்தவர்களுக்கோ, இந்ததேசத்து ஆசா
ரம், பாஷை முதலியன ஒவ்வாதிருந்தமையால், இந்ததேச
த்து பிராமணர்களுடன் பரஸ்பர சம்மந்தமுண்டாகவில்லை;
சௌராஷ்ட்ர பாஷை இத்தேசத்தவற்குத் தெரியாமையால்,
இவர்களுடைய பூர்வோத்தரங்கள் அவர்களுக்கு ஸ்பஷ்ட
மாகத்தெரிய ஹேதுவில்லாமற்போயிற்று. அதனால் தனிச
மூகமாகயிருந்தார்கள். அங்கங்கே ஏற்பட்ட வியாபாரம்,
வஸ்திரநிர்மாணம், ஜோதிஷம், வைத்தியம், புரோஹிதம்,
வித்யாப்பியாசம் பண்ணுவித்தல் முதலிய தொழில்களைச்
செய்துகொண்டு, ஜாத்யாசாரத்திற்கு முக்கியமான கர்ப்பா
தானுதி சம்ஸ்காரங்களும், சந்த்யாவந்தனாதி நித்ய நைமித்ய
கர்மங்களும் அனுஷ்டித்துவந்தார்கள்." என்றார்.

---

4. சேதுராமன்:—"ஸ்வாமி! இவர்களுக்கு கிரி நாரா
யணப்ராமணரென்று பெயர்வந்த காரணமென்ன" என,
சிரௌதிகள்:—"அப்பா! நீகேட்ட விஷயமாக பூர்வம்
ப்ரம்ஹதேவருக்கும் நாரத மஹரிஷிக்கும் நடந்த ஓர் சம்பா



ஷணை உனக்குச் சொல்லுகிறேன் கேள்." அஃதாவது:—

*திரிலோக சஞ்சாரியான நாரதமஹரிஷி ஒருக்கால் சத்ய
லோகஞ்சென்று பிரம்ஹதேவரை வணங்கி "ஓ! பிதாமஹ!
மஹாபுண்ய க்ஷேத்ரமாயும், கிரிநாராயண பர்வதத்தை
யாசிரயித்ததாயுமுள்ள வஸ்த்ராபத க்ஷேத்திரத்தில் வசிக்
கும் கிரிநாராயண ப்ராஹ்மனர்கள் எப்படி அங்கு சென்றார்
கள்? அவர்கள், எவருடன் சம்மந்தஞ்செய்தார்கள்." என
ப்ரஹ்ம தேவர் ஹே! நாரத! பூர்வத்தில் சாக்ஷாத் மஹா
விஷ்ணுவும், பரமசிவனும், சந்த்ரகேதுவென்னும் அரசனு
க்கு அநுக்ரகிக்கும்பொருட்டு, ரைவதகிரிக்குச் சென்றனர்.
அப்பொழுது அம்மலையில் ஜனசஞ்சாரமின்றி சிம்ஹவ்யாக்
ராதி துஷ்டமிருகங்கள் நிறைந்திருந்தன.

அச்சமயம், பகவானான விஷ்ணுவானவர், தன் ஸ்வ
ரூபமான தாமோதரரென்னும் பிராஹ்மணரை ஸ்மரித்தார்.
கிரிநாராயணனென்ற தாமோதரனென்னும் பிராம்மணர் விஷ்
ணுவிடம்வந்து அவராஜ்ஞைப்படி (ஆர்யாவர்த்தஞ்சென்று)
ஹிமாலய சமீபமாக தபஸ்செய்துகொண்டிருந்த ப்ராஹ்ம
ஙிஷ்டர்களைநோக்கி ஓ! பிராஹ்மணோத்தமர்களே! ரைவதபர்வ
தத்தில் ஹரிஹரர் எழுந்தருளியிருக்கின்றார்கள். தர்சிக்க

---

* उक्तं च प्रभासखण्डान्तर्गते वस्त्रापथक्षेत्रमाहात्म्ये ॥ नारदउवाच ॥
महापुण्यतमे क्षेत्रे शुचौ वस्त्रापथे द्विजाः । गिरिनारायणास्तें वै निवसंति
पितामह ॥ गिरिनारायणाख्या वै कथमेषामभूत्किल । तत्र संबन्धिनः के
न कृतास्ते ब्रूहि मेऽनघ ॥ ब्रह्मोवाच ॥ पुरा हरिहरौ देवौ चन्द्रकेतौ कृपा
करौ । रैवतं ययतुः साक्षान्मूर्तिमन्तौ महाचलम् ॥ निर्जने च तपोदेशे
भगनानित्यचिन्तयन् । ब्राह्मणेन विनात्रैव कथं स्थास्ये च निर्जने ॥
ततो नारद संस्मार ब्राह्मणं स्वात्मरूपिणम् । इति संचिन्त्य भगवान्
गिरौ रैवतके वसन् ॥ गिरिनारायण इति विप्रो दामोदरो ययौ । तदा
नारद गंगायास्तटे हिमवदादिषु ॥ ऋषयो निवसन्ति स्म ब्रह्मघोषपरा

வாருங்களென; அவர்கள் பரமசந்தோஷத்துடன் ரைவத கிரிக்குவந்து சேர்ந்தார்கள். நாநாவிதபக்ஷிகளும், மரங்களும், மிருகங்களும் நிறைந்த ரைவதமலையின் உத்தியான வனத்திலிருக்கிற தாமோதரருடைய ஆலயத்தில் பிரவேசித்தார்கள். (கூடவந்த பிராமணர் அந்தர்த்தானமானதைக் கண்டு அவரே விஷ்ணுவென்றறிந்து) மிகுந்த ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்த பிராம்மணர்கள் விஷ்ணுவைக்குறித்து ஹே! பகவந்! பூதபவ்யேச! சர்வப்பிராணிகளாலும் பாவிக்கப் (நினைக்கப்) படுகின்றவரே! தேவேச! விபோ! எங்கள்மேல் தயவுவைத்து எங்களுக்குத் தர்சனங்கொடுத்தருள்வாய், என்று ஸ்தோத்திரஞ்செய்தார்கள். பிரம்மதேவர் வாக்கியம். ஓ நாரத! இப்படி பிராம்மணர்கள் ஸ்தோத்திரம்பண்ணவும் மஹாவிஷ்ணு பிரத்தியக்ஷமாகி பிராம்மணர்களைநோக்கி "ஓ பிராம்மணோத்தமர்களே! வர்ணாஸ்ரமதர்மங்களைக் காப்பாற்றும்பொருட்டு நாம் இங்கு இந்தரூபத்துடன் பிரகாசிப்போம். நீங்கள் ஸ்திரமான மனதுடையவர்களாக என் சமீபத்தில் வசித்திருக்கவேண்டுமென்று முன்னமேயே நாம் நினைத்திருந்தோம். அந்த எண்ணப்படி இப்பொழுது உங்களை அழைத்துவந்தோம். அதனால் நீங்கள் இவ்விடத்தில் வசியுங்கள்.

---

यणाः । तत्र तेषां निवसतां ह्याजगाम महातपाः ॥ ऋषिस्तेनैव कथि-
तो गिरौ रैवतके हरिः । भवश्चापि महादेव मूर्तिमन्तावुभावपि ॥ निव-
सन्तौ हरिहरौ विश्वस्थित्यन्तकारकौ । तदा ते ऋषयः सर्वे श्रुत्वा त
स्य मुनेर्वचः ॥ तेनैव सत्यतपसा हर्षनिर्भरमानसाः । विमलास्ते
समायाता रैवतोद्यानमुत्तमम्. [१०] नानावृक्षलताकीर्णं पशुपक्षिगणा-
न्वितम् । सम्प्राप्य रैवतोद्यानं दामोदरगृहं ययुः ॥ गिरिनारायणं स्मृ
त्वा तुष्टुवुस्ते द्विजोत्तमाः । ऋषय ऊचुः । भगवन् भूतभव्येश सर्वभूत
विभावन ॥ प्रसादं कुरु देवेश दर्शनं देहि नो विभो । ब्रह्मोवाच । इति
संस्तुवतां तेषां दृश्यो भूत्वाब्रवीद्वचः ॥ वर्णानामाश्रमाणानां रक्षा वै
विधृता मया । स्थातव्यमत्र सततमिति पूर्वं ममेप्सितम् ॥ भवन्तो मम



இன்றுமுதல் உங்களுக்கு கிரிநாராயணப் பிராம்மணரென்று நாமம் விளங்கும். நமக்கு கிரிநாராயணரென்று பெயர் விளங்கியிருந்ததை எமக்குச் சமமான உங்களுக்கு அந்தப்பெயர் எம்மால் கொடுக்கப்பட்டது. நீங்கள் இவ்விடத்தில் சுகமாக தபஸ்செய்யுங்கள். யாராவது உங்கள் தபஸ்ஸைக்கெடுத்தால் அவர்கள் நம்முடைய கோபாக்னியால் பஸ்மமாய்விடுவார்கள். எந்தப்பாபிகள் உங்களைக்குறித்து துவேஷிப்பார்களோ அவர்களை நாம் சத்தியமாக எப்பொழுதுந் தண்டிப்போம்." என்றார்.

பிரம்மதேவர் வாக்கியம். ஓ! நாரத! பகவானான மஹாவிஷ்ணுவானவர் இப்படி சொன்னமாத்திரத்தில் பிராம்மணர்கள் சந்தோஷத்தினால் தளதளத்த குரலுடன் பகவானை நோக்கி மஹா பயபக்தி விஸ்வாசத்துடன் கைகூப்பி வணங்கி "ஹே! தேவதேவ!! ஜகந்நாத! நாராயண; பராத்பர! சிம்ஹம் புலி முதலான துஷ்டமிருகங்கள் நிறைந்திருப்பதும், நாநாவிதமான பக்ஷிகள் வசிக்கிறதுமான இந்த ரைவதகிரிப் பிராந்தத்தில் நாம் எப்படி வசிப்போம்; தங்களாஜ்ஞைப்படி இங்கு வசித்தால் நமக்கு என்ன அநுகூலங்களுண்டாகும்?

---

सामीप्ये तिष्ठन्तु स्थिरमानसाः । गिरिनारायणा इति ममाख्या कथिता
मया [१५] यथाप्यहं तथाप्येते गिरिनारायणाः कृताः । तपसो भवतामत्र
कियन्तो विघ्नकारिणः ॥ ते तु भस्मी भविष्यन्ति ममक्रोधदवानलात् ।
युष्मान्प्रति हि ये चान्ये द्वेषं कुर्वन्ति पापिनः ॥ द्वेष्टारस्तेऽपि मे सत्यं
शास्ता तेषामहं सदा । ब्रह्मोवाच । इत्युक्ता ऋषयस्सर्वे हर्षगद्गदया-
गिरा ॥ ऊचुः प्राञ्जलयो भूत्वा गिरिनारायणं हरिम् । गिरिनारायणा
विप्रा ऊचुः । देवदेव जगन्नाथ नारायण परात्पर ॥ अत्रैव विधिना के-
न स्थास्यामो रैवतं गिरिम् । सिंहव्याघ्रसमाकीर्णं नानापक्षिविहंगमम्.
[२०] अत्रैव वसतां देव किमस्माकं भविष्यति । तद्वदस्व जगन्नाथ-
ततो दामोदरोऽब्रवीत् । दामोदर उवाच । गिरिनारायणाः सर्वे श्रूयतां
गदतो मम ॥ भाव्यं तु भवतां यच्च भविष्यं कथयामि तत् [२२]

எங்கள் மீது கிருபைகூர்ந்து அவற்றைச் சொல்லவேண்டுமென்று" பிரார்த்திக்க, பகவான் ஓ! கிரிநாராயணப்பிராமணர்களே! உங்களுக்கு இனிமேல் நடக்கும் விஷயங்களைச் சொல்லுகிறோம் கேளுங்கள்: நீங்கள் இங்கே வசிக்கும்பொழுது பக்கத்திலிருக்கிற ரிஷிகள் தங்கள் புத்ரிகளுக்கு வரர்கள் வேண்டும்பொருட்டு இவ்விடம் வந்து உங்களுக்கு அலங்கார கன்னிகாதானம் கொடுப்பார்கள். அப்பொழுது சந்திரகேது மஹாராஜா என்னுத்திரவுப்படி இங்கு வந்திருந்து உங்களுக்கு அநேக கிராமங்களை தானங்கொடுத்து சாஸனங்களையெழுதிக்கொடுப்பார். அந்த சாஸனங்களைப் பெற்று, அநேக சாஸ்திரங்களைக் கேட்டறிந்த சுரோத்திரியாளராயும், யஜ்விகளாயும், தாதாக்களாயும், இதிகாசபுராணங்களைப் பிரசங்கம் பண்ணுகின்றவர்களாயும் சுகமாகக் காலங்களிப்பீர்கள். இது நிச்சயம்.

பிறகு வெகு காலஞ்செல்ல சுவர்க்கத்தில் தேவாசுரயுத்தமுண்டாகும்; அதில் தேவர்கள் என்னால் கொடுக்கப்பட்ட அமிருதபானம்பண்ணின பலத்தால் அசுரர்களைக் கொல்லுவார்கள். அந்தராக்ஷஸர்கள் இந்த பூமியில் பிறந்து ரிஷிகளையும் யாகஞ்செய்யும் மஹாத்மாக்களையும் விரோதிப்பார்கள் அப்பொழுது நம் பக்தனான சந்திரகேது புத்திரனில்லாமல் துக்கிப்பான். அவர் துக்கத்தை நிவர்த்திக்கும்பொருட்டும், அசுரர்களை வதஞ்செய்யும் பொருட்டும் நாம் யோசித்து சந்தி

---

भवद्भ्यो निवसद्भ्योऽथ ऋषयोऽन्ये वरार्थिनः । कन्यास्त्वलंकृताः सर्वा प्रदास्यंति यथोचिताः ॥ तत्र राजा चन्द्रकेतुर्विवाहसमये ध्रुवम् शासनानि तथा ग्रामान्प्रदास्यन्ति ममाज्ञया ॥ तैः शासनपदैस्सर्वे सुखिनोऽत्र भविष्यथ । श्रोत्रिया यज्विनो नित्यं दातारो नात्र संशयः ॥ इतिहासपुराणानि वक्तारो नात्र संशयः । ततो बहुगते काले स्वर्गे दैवासुरे युधि ॥ सुरा दैत्यान्हनिष्यन्ति बलिनो मे सुधाभृतः । जनलोके भविष्यंति हतास्ते दैत्यदानवाः ॥ ऋषीणां यज्विनां चैव सर्वे विद्वेषकारिणः ॥ भविष्यति स मद्भक्तो ह्यपुत्रश्चातिदुःखितः । तदाहं



ரகேது மஹாராஜாவை ரைவதகிரியில் புத்திரோத்பத்திக்காக ஓர் யாகம் பண்ணும்படி ஆஜ்ஞாபிப்போம். அவர் அப்படியே யாகஞ் செய்வார். அப்பொழுது அவருக்குஎன் அமசமான ஒரு புத்ரன்பிறந்து, ராஜவேஷத்துடன் ஜனித்து பிரஹ்மகர்மங்களைக் கெடுப்பவர்களான அந்த துஷ்டராக்ஷஸர்களை அநேகபில்லம்பாணம்முதலான ஆயுதங்களால் கொன்று அந்த ராஜகுமாரர் ஓர் அஸ்வமேதயாகம் பண்ணுவார். அப்பொழுது கிரிநாராயணப பிராமணர்களான உங்கள் வம்சத்தாரை ரித்துவிக்குகளாக வரிக்க; அவர்கள் நம் தியானத்துடன் யாகம் பண்ணிவைப்பார்கள்.

இந்த வஸ்திராபத க்ஷேத்திரத்தில் யாகயஜ்ஞம் தானம் முதலான கிரியைகளை கிரிநாராயணப் பிராமணர்களை விட்டு (அழைக்காமல்) எவன் செய்கிறானோ அவன் அசுரனாவான். அசுரர்களுடன் சாப்பிடுகிறவனே யாவான் இதில் சம்சயமில்லை.

அரசன் யஜ்ஞமுடிவில், எவர்களுக்கு ஜீவன் குறைவுபட்டிருக்கிறதோ அவர்களுக்கு அந்தக் குறை தீர்த்து தர்மஸாசனங்களைக் கொடுப்பார்.

---

ब्राह्मणार्थं वै राज्ञस्तस्य च धीमतः ॥ उभयोः कार्यमन्विच्छन्करिष्यामीति चिंतयत् । ततो राजा मदंशेन प्रेरितो रैवतं किल । आगमिष्यति यज्ञं तु करिष्यति सुतेच्छया [३०] तदा मदंशपुत्रोऽसौ हनिष्यति दुरासदान् । राजन्यवंशजान् दुष्टान् ब्रह्मवृत्तिविलोपकान् । ब्रह्मस्वपरितुष्टांगान् भिल्लानंतकसन्निभैः । हनिष्यति च बाणैस्तान् स्थिते राजनि तत्र वै । हत्वा तान् भिल्लजातीयान् वाजिमेधं करिष्यति । यदा ते ऋत्विजः सर्वे गिरिनारायणा द्विजाः ॥ याजयिष्यंति राजानं वाजिमेधे न मां स्मरन् । यज्ञदानादिकं कर्म गिरिनारायणैर्विना ॥ योत्र वस्त्रापथे क्षेत्रे करिष्यति स चासुरः । असुरैस्सह संभोक्ता भविष्यति नसंशयः । यज्ञावसाने विप्रेभ्यो राजा दास्यति शासनम् । यस्य यस्य विलुप्तं हि

4

64 கோத்திரஸ்தர்களான உங்கள் சந்ததியாருக்கு 64 கிராமங்களை அநேக சுவர்ணரத்ன தக்ஷிணையுடன் தானஞ் செய்து 64 தர்மசாஸனங்களைக் கொடுப்பார். அதனால் 64 கோத்திரஸ்தர்களாக நீங்கள் பிரஸித்தியடைவீர்கள். பிறகு நாம் கர்காசாரியரோடு யோசித்து சோமநாதஸ்வாமிக்குச் சமீபமாக ஒரு பிரம்மாண்டமான பட்டணத்தை நிர்மாணிப்போம்; நாம் வாமனரூபத்துடன் அதையுண்டாக்குவதால் அந்தப்பட்டணத்திற்கு வாமனஸ்தலமென்று நாமம் விளங்கும்.

பின்பு சிலகாலஞ் செல்ல, தைத்யர்கள் அந்த வாமனஸ்தலத்தை ஆக்ரமித்து விடுவர். அது கண்ட மஹா பலசாலியான தசரத சக்கிரவர்த்தி அங்கு வந்து அந்த தைத்யர்களை வதஞ்செய்து அலங்காரமான வாமனஸ்தலத்தை உங்களுக்கு மீட்டிக் கொடுப்பார்.

அதிதி பூஜை, வைஸ்வதேவம், வேதாத்தியயனம், அக்நிஹோத்திரம், தபஸ், ஸத்யம் ஆகியயிவை இஷ்டமென்றும் (கிணறு குளம் வெட்டிவைத்தல், தோட்டம் நந்தவனம் உண்டாக்கல், தேவாலய பிரதிஷ்டை ஆகிய யிவற்றிற்குப் பூர்த்தமென்றும் சொல்லப்படும்.)

---

तस्य तस्य तदैव च ॥ चतुःषष्टीति गोत्राणां चतुःषष्टी च शासनैः । त्तसहैवयं तु विप्राणां इति संख्या भविष्यति । तेभ्यःप्रत्येकमेकैकं ग्रामं सुवहुभूमिकम् । हिरण्यरत्नसंयुक्तं राजा दास्यति शासनम् । गर्गेण सह संचिंत्य सोमनाथसमीपतः । अहं वामनरूपेण करिष्यामि महत्पुरम् । भविष्यति ममाख्यातनाम्ना सा वामनस्थली । तां हि दैत्यजनाक्रान्तां दृष्ट्वा दशरथो वली । कृत्वा दैत्यवधं तां तु राजा दास्यति भूषिताम् । गिरिनारायणेभ्योऽथ राजा श्रीवस्तुसंभृतम् । आतिथ्यं वैश्वदेवं च वेदानां चानुपालनम् । अग्निहोत्रं तपस्सत्यं इष्टमित्यभिधीयते । इष्टापूर्तेषु धर्मेषु योज्या विप्रा मदाश्रयाः । गिरिनाराय-



நீங்கள் இஷ்டா பூர்த்தங்களான மேற்சொன்ன தர்மங்களைப் பலாபேக்ஷையின்றி செய்வீர்கள்; அதனால் நீங்கள் என்னையாஸ்ரயித்தவராவீர்கள். உங்களை என் சம்மந்தமுள்ளவர்களாக்குவேன்.

ஓ! கிரிநாராயணப்பிராஹ்மணர்களே! இந்தப் பரிசுத்தமான ஸௌராஷ்ட்ரதேசத்தில் என்னுத்திரவுப்படி வசியுங்கள்; உங்களுக்கு பூஜ்யதையுண்டாகும். பிற்பாடு, தசரதர் இங்கு வந்து உங்களை ரித்துவிக்குகளாக வரித்துக்கொண்டு ஓர் அஸ்வமேதமென்னும் மஹாயாகத்தைச் செய்து ஹவிசுகளால் தேவர்களையும் அநேக வஸ்திராபரணாதிகளால் உங்களையும் சந்தோஷப்படுத்துவார்.

பிறகு, * யாகயஜ்ஞாதி சத்கர்மங்களை விக்னஞ் செய்யும் தைத்யரை வதஞ்செய்து அயோத்யைக்குத் திரும்புவார். அதன் பிற்பாடு, அந்த அஸ்வமேத யாகத்தின் விசேஷத்தி

---

* யாகம்:— இது அக்நிஷ்டோமம் ஜ்யோதிஷ்டோமம் வாஜபேயம் புத்ரகாமேஷ்டி அஸ்வமேதம் முதலான பலநாமங்களுள்ளது.

யஜ்ஞம்:—இது அன்னம் பாயஸம் முதலிய சமைத்த பதார்த்தங்களால் ஆஹுதி கொடுக்கப்படுவது பாகயஜ்ஞமென்றும், நெய் முதலியவற்றால் ஆஹுதி செய்யப்படுவது ஹவிர் யஜ்ஞமென்றும் ஸோமாஸத்தால் ஆஹுதி கொடுக்கப்படுவது ஸோமயஜ்ஞமென்றுஞ் சொல்லப்படும்.

அவை நித்ய நைமித்திக காம்யங்களெனப் பின்னையும் மூன்று பிரிவுள்ளவை. ஆனால் நித்ய கர்மங்களில் பஞ்சயஜ்ஞங்களென்னும் ஐவகைக் கர்மாக்களுண்டு. அவையாவன:—

---

णास्सर्वे मया संवन्धिनः कृताः । सौराष्ट्रे विमले देशे पूज्याः स्त मम शासनात् ॥ ततो दशरथो राजा ह्यश्वमेधं महामखम् । कृत्वा सुरादिकान् तोष्य नानावस्त्रैर्हुतैरसैः ॥ हत्वा दैत्यगणांस्तत्र कृत्वा दानान्यनेकशः ।

ஞல் தசரதருக்கு நாம் புத்திரராக (ஸ்ரீராமனாக) அவர் கிருஹத்தில் அவதரிப்போம். ராவணாதி ராக்ஷஸரை ஹதஞ் செய்வோம். வர்ணாஸ்ரம தர்மங்களை யதா விதிப்படி நிலை காட்டுவோம். இப்படி இனிமேல் நடக்கும் விஷயங்களை உங்களுக்கு என் கிருபையால் சொல்லப்பட்டது. நீங்கள் என்னாஜ்ஞைப்படி இங்கே வசியுங்கள்; உங்களுக்கு மங்களமுண்டாகக்கடவது.

---

1. பிரஹ்மயஜ்ஞம்=அத்யயனம் பண்ணல்.
2. தைவ யஜ்ஞம் =அக்நி ஔபாஸனம்.
3. பித்ரு யஜ்ஞம் =நித்ய பித்ரு தர்ப்பணாதிகள்.
4. மனுஷ்யஜ்ஞம் =அதிதி பூஜை.
5. பூதயஜ்ஞம =காகபலி.

கிரஹஸ்தராயிருப்போர்க்கு, தம் மனையாள் செய்யும் கிரஹகர்மங்களில் மெழுகல், குத்தல், அரைத்தல், எரித்தல் பெருக்கல் ஆகிய ஐந்து வயைால் உண்டாகும் ஜீவஹிம்ஸைக்குப் "பஞ்சசூனு" என்று பெயர். (பஞ்ச=ஐந்து, சூனு=பாபம்) அப்பாப நிவாரணத்தின் பொருட்டுப் பிரதிதினங்களிலும் மேற்கூறிய பஞ்சயஜ்ஞயங்களையநுஷ்டிக்கவேண்டுமென்பது வேதவிதியாம்.

இப்பஞ்சயஜ்ஞயங்களின் பொருட்டல்லாமற் செய்யப்படுங்காரியங்களால் இவ்வுலகம் கர்மபந்தத்திலகப்படுகிறது யஜ்ஞ சேஷத்தைப் புஜிக்கிறவர்கள் ஸகலபாபங்களிலிருந்தும் விடுபட்டு நாசமற்ற பிரஹ்மத்தை யடைவார்கள். என்பன பகவத் வாக்கியங்கள்.

'यज्ञार्थात्कर्मणोन्यत्र लोकोऽयं कर्मबन्धनः' ।
'यज्ञशिष्टाशिनः सन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः' ।

---

पुनर्यास्यत्ययोध्यां वै राजधानीं स्वकां प्रति । ततोऽहं तद्गृहे जन्म धृत्वा दशमुखादिकान् ॥ हत्वा वर्णाश्रमाणां स्थापयिष्ये स्थितिं पराम् । इति वोऽखिलमाख्यातं कथितं कृपया मया ॥ भाविष्यं भवितव्यं च.... भवद्भ्योऽस्त्विह कल्याणं स्थीयन्तां मम शासनात् ॥ [४८] गिरिना-



கிரிநாராயணப் பிராஹ்மணர்கள் வாக்கியம்:—

ஜய விச்வேச்வர! ஜயகோபபராயண! ஹே! விபுவே! பரேசனும் நிர்குணனும் சிதாத்மாவுமான உமக்கு நமஸ்காரம் பண்ணுகின்றோம். தேவ! உமது ஆஜ்ஞைப்படி உம்மை தியானம் பண்ணிக்கொண்டு பயமற்றவர்களாயிந்த ரைவத மலைப்பிரதேசத்தில் உம்மால் ஸ்தாபிக்கப்பட்டவர்களாய் வசிக்கிறோம்.

பிரஹ்மதேவர் வாக்கியம்:—

ஹே! நாரத! பகவான் கிரிநாராயணப் பிராஹ்மணர்களை, இப்படி உத்தரவு செய்து பிரம்ஹத்தினிடத்தில் அந்தர்த்தானமானார். பிறகு கிரிநாராயணப் பிராஹ்மணாள் பகவானுத்தரவுப்படி ரைவதகிரியினுத்யான வனத்தில் வாசம் பண்ணினார்கள். பக்கத்திலிருந்த ரிஷிகள் தங்கள் கன்னிகைகளை கிரிநாராயணப்பிராம்ஹணர்களுக்கு பிராஹ்மவிவாஹ விதிப்படி கல்யாணம பண்ணிக்கொடுத்தனர். அப்பொழுது சந்திரகேது மஹாராஜா, அங்கு வந்து கிரிநாராயணப் பிராம்ஹணர்களுக்கு அநேக ஸ்வர்ண வஸ்திராதிகளுடன் பூமிதானங்கொடுத்து, அநேக கிராமங்களை அவர்கள் பேருக்கு தர்மசாஸனம் பண்ணிவைத்தார். அதனால் பிராம்ஹணர்கள் பரமசந்தோஷமடைந்தார்கள்; அரசனால் மிக்க மரியாதையுடன் பூஜிக்கப்பட்டு, கிரிநாராயணப் பிராஹ்மணர்கள் ரைவதகிரியில் சுகமாக வசித்தார்கள் (65,) இனி சில

---

रायणा ऊचुः । जय विश्वेश्वर विभो जय गोपपरायण । नमो नमः परेशाय निर्गुणाय चिदात्मने ॥ त्वया संस्थापिता देव निवसामोत्र निर्भयाः । रैवतोद्यानविषये त्वद्ध्यानस्थितमानसाः ॥ ............... (६०)
ब्रह्मोवाच ॥ इति तान् ब्राह्मणांस्तत्र संस्थाप्य हरिरीश्वरः । गिरिनारायणश्चैव ब्रह्मण्यन्तरधीयत ॥ ततस्ते ब्राह्मणास्सर्वे स्थाने रैवतकाचले । ततोऽन्ये ऋषयस्तेभ्यः कन्यादानं ददुः किल ॥ विवाहसमये राजा चंद्रकेतुः पुरातनः । शासनानि विचित्राणि ग्रामान्वै बहुभूमिकान् ॥ अदादतीव सुमना भूपयित्वा द्विजोत्तमान् । ततस्ते ब्राह्मणास्सर्वे हर्षनिर्भर-

காலஞ் செல்ல தசரதமஹாராஜா கார்த்திகை மாதத்தில் தீர்த்தஸ்னானத்திற்கு அங்கு வந்து பிராஹ்மணர்களுக்கு பட்டணத்தை ஜீர்ணோத்தாரணம் பண்ணிக்கொடுப்பார்.

ரைவதகிரியும், ரேவதியுடன்கூடிய பலராமரும், கிரிநாராயண தாமோதரஸ்வாமியும் கிரிநாராயணப் பிராஹ்மணர்களுங்கூடின (ஜுனாகரா) க்ஷேத்திரம் உலகத்தாருக்கு துர்லபமானது.

அந்த க்ஷேத்திரத்தில் சாந்தமனதுடன் ஹரி பூஜை செய்து அவ்விடத்திய பிராம்ஹணர்களுக்கு, தானங்களைக் கொடுத்தால் பரமோத்தம பலனுண்டாகும். குழந்தாய்! (நாரத!) இப்படியுனக்கு ரைவதபர்வதத்தின் மஹிமையையும் கிரிநாராயணப் பிராஹ்மணருத்பத்தியையும் என்னால் சொல்லப்பட்டது.

ரைவதகிரியில் ரவிவாரத்தில் ரேவதிக்ஷேத்திரத்தில் ரேவதி குண்டத்தில் ஸ்னானஞ்செய்து ராதாதாமோதரரை தரிசித்தால் மஹத்தான பாபங்கள் நசிக்கும். பஞ்சரகாரம் துர்லபமென்று பிரமஹதேவர் நாரதருக்கு வுபதேசித்தார். (70)

இப்படி பிரபாஸகண்டாந்தர்கதமான வஸ்த்ராபத க்ஷேத்ர மாஹாத்மியத்தில் பிரம்மநாரத சம்வாதரூபமான கிரிநாராயணப் (ஸௌராஷ்ட்ரப்) பிராஹ்மண உத்பத்திப் பிரகரணம் சம்பூர்ணம். (பிராஹ்மணோத்பத்திமார்த்தாண்டம், பக்கம், 287-295.)

---

मानसाः ॥ पूजिता राजाभिः सर्वे संतस्थूरैवते गिरौ । राजा दशरथस्तावत्पुनस्तेषां द्विजन्मनाम् । कार्तिके मासि संस्नातो जीर्णोद्धारं करिष्यति ॥ रैवतं रेवतीसार्द्धं गिरिनारायणं तथा । गिरिनारायणास्तत्र दुर्लभास्तोपसंयुताः ॥ तेभ्यो दानमशेषं तु हरिपूजनमुत्तमम् । इति ते कथितं वत्स गिरिरैवतकं तथा ॥ गिरिनारायणानां चोत्पत्तिर्वै कथिता मया । रेवत्यां रेवतीस्नानं रैवतं रविवासरे ॥ राधादामोदरं दृष्ट्वा रकाराः पञ्चदुर्लभाः ॥ इति गिरिनारायणब्राह्मणोत्पत्तिप्रकरणं संपूर्णम् (२२)



இவ்வுபாக்கியான நிகழ்ச்சி, வாமன ஸ்ரீராமாவதாரங்களுக்குப் பூர்வமாயிருப்பதால், சுமார் கிருதயுக காலமாகக் கொள்ளலாம். நாராயணன் கிரியில் வசித்த காரணப்பெயர் கிரிநாராயணன்; அவரால் ரைவதமலைக்குக் 'கிரிநாராயண மலை' யென்றும் பிராஹ்மணருக்கு 'கிரிநாராயணப்பிராஹ்மணர்' என்றும் ஆர்யாவர்த்தத்தினின்று வந்து ஸௌராஷ்ட்ரதேசத்தில் வசித்தபடியால் 'ஸௌராஷ்ட்ர' ரென்றும், சந்த்ரபகவானிடம் தானம் பெற்று சோமபுரத்திலிருந்ததனால் 'ஸோமபுரிப்பிராஹ்மணரென்றும் பெயர்வந்தகாரணங்களறிக.

அதனால் ஸௌராஷ்ட்ரர், ஆர்யர்களில் ஓர் பிரிவினரென்று சொன்னேன். இப்படியே இந்தியாவிலும் கிரேட்பிரிட்டன் பிராஞ்சு முதலிய தேசங்களிலுமுள்ள ஒவ்வொரு சமூஹ வரலாற்றையாராயப் புகின், அநேகமாக ஒப்பற்ற மேன்மக்களான ஆர்யர் சந்ததியாரெனப் புலப்படும் *அதனால் பகுப்பாரென்று பதிந்திருக்கிற வேற்றுமையொழிந்து ஒற்றுமையுண்டாகும்.

அவர் வேற்றூர், இவர் வேற்றூர், என்ற எண்ணத்தினால் மனதிலுண்டாகும் பரபரப்புக்குச் சத்ருவாயிருக்கிறது ஐக்ய புத்தி; சாந்தமெனவும்படும். சாந்தமே புண்யங்களுக்குக் காரணம். அதனால் மனோவமைதி கொடுக்கும் சமாசாரங்களுக்குப் புண்யசரித்ரமெனச் சிறப்புப் பெயர் வழங்கும். ஆகையால், சேதுராமா! இது மிகுந்த புண்யசரித்திரம்; இதைப் படிப்போரும் கேட்போரும் இகபர சுகமடைவார்கள்" என்று ச்ரௌதிகள் சொன்னார்.

பூர்வபாகம் முற்றிற்று.

---

*இப்பொழுது துருக்கிஸ்தானமென்று வழங்குகிற பிரதேசத்திலிருந்த ஆர்யர், ஐரோப்பா பெர்ஷியா இந்தியா கிரீஸ் முதலான தேசங்களிற் பரவினார்களென்பது சில நூலாசிரியர் கருத்து.

## உத்தர பாகம்.

1. சேதுராமன்:—ஸ்வாமி! ஸௌராஷ்ட்ரப் பிராஹ்மணர்களுடைய ஆசாரம் இத்தேசத்தவருக்கு அப்பிரியமாயிருக்கிறதே! அதன் காரணமென்ன? ஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து பிராஹ்மணர்கள் மட்டுமா இத்தேசத்திற்கு வந்தார்கள்? மற்ற வர்ணத்தார் ஒருவரும் வரவில்லையா? அப்படி வந்திருந்தால் அவர்கள் எங்கே வசிக்கிறார்கள்? என்றுகேட்க, சிரௌதிகள் சேதுராமா! பம்பாய் புனா முதலானவிடங்களில் இன்றைக்கும் திருஷ்டிதோஷம் பந்திவித்தியாசம் பாராட்டுவதில்லை.

அது ஏனென்றால், முன்பு ஓரே ஜாதியாயிருந்தவர்களிலேயே குணத்தினாலும் கர்மத்தினாலும் ஜாதிவித்தியாசமேற்பட்டது. * "என் அம்சமான ஸ்வாயம்புமனுவால் சத்துவாதி குணஸ்வபாவமான அத்தியயனம் முதலான கர்மங்களுடன் கூடிய பிராஹ்மணாதி சதுர் வர்ண தர்மங்களையும் உண்டாக்கப்பட்டது. (பகவத் கீதை, 4—13.)

†"ஸ்ருஷ்டியினாரம்பத்தில் பிராஹ்மணரென்ற ஓரேஜாதிதானிருந்தது." என்ற சாஸ்திர வாக்கியமே இதற்குப் பிரமாணம். ஒரு தேசத்து ஆசாரம் மற்ற தேசத்தாருக்கு அநாசாரமாகத் தோன்றினாலும், அந்தந்த தேசாசாரம் அவரவர்களுக்கு விஹிதமானது.

‡" அந்தந்த தேசத்துப்பிராஹ்மணர் அந்தந்த தேசத்திலேயே பூஜிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு அந்யதேசத்தில் பூஜிதையுண்டாவதில்லை; எந்த தீர்த்தத்தில் எந்த தெய்வமோ! எந்த க்ஷேத்திரத்தில் எந்தப்பிராம்ஹணர்களோ! அந்தந்த தெய்வங்களையும் பிராஹ்மணர்களையும் ஒருக்காலும் இகழாமல் பூஜிக்கவேண்டும்" என்றும், ஐந்து குரோசத்திற்கு (10 மைலுக்கு) வெவ்வேறு ஆசாரமும் வெவ்வேறு பா

---

* चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः । †सृष्ट्यारम्भे तु विप्राणां जातिरेका प्रकीर्तिता । ‡स्वे स्वे देशे प्रपूज्यन्ते नान्यदेशे विशेषतः ॥ येषु तीर्थेषु ये देवा येषु क्षेत्रेषु ये द्विजाः । पूजनीया विशेषेण नावमान्याः कदाचन ( २५ ) "पञ्चक्रोशेषु विविधा आचाराश्च व्यवस्थिताः ।



ஷையுமாக உலகம் முழுமையும் வியாபித்திருக்கிறது." "சிலர் உத்தமாசாரத்தை விட்டவர்களாயிருக்கிறார்கள்; சிலர் சத்கர்மங்களை யொழித்திருக்கிறார்கள்; சிலர் பிறருக்கு சன்மார்கோபதேசம் பண்ணுகின்றார்கள்; அவர்களே துர்மார்க்கத்தில் பிரவர்த்திக்கின்றார்கள்." ஆகையால், ஜாதியினுடைய நிர்ணயமானது, தர்மாதர்ம விவேகத்தையும், பக்ஷ்யாபக்ஷ்ய விசேஷத்தையும், பாத்திராபாத்திரக் குறிப்பையும் பொறுத்ததாயிருக்கிறது; அப்படியே சொல்லிவிடலாமென்றாலும் முடியவில்லை. ஏனென்றால், "அகஸ்திய பகவான் ஜனங்களைக்கொன்றுகொண்டிருந்த வாதாபியைத்தின்றுவிட்டார்; அவர், மாம்ஸபக்ஷணம் பண்ணின காரணத்தினால், தோஷியென்று உலகத்தில் அபகீர்த்தியடையவில்லை" என்றால், அதே கார்யம் சாமான்ய ஜனங்கள் செய்திருந்தால் அவர்களை உலகம் நிந்திப்பதுடன் குற்றத்திற்கும் உட்படுத்தி தண்டித்திருக்கும்." அதனால்" அதிகாரிகளல்லாதார் செய்யும் இழிவானகார்யம் உலகத்தாரால் நிந்திக்கப்பபடும்; மேலோரால் (மஹாத்மாக்களால்) அனுஷ்டிக்கப்படும், (உலகத்தாருக்கு குரூரமாகத் தோன்றும்) துராசாரமும் லோகோபகாரமாயிருப்பதால் அது தோஷத்திற்கு ஹேதுவாகமாட்டாது. ஆனால், ஒரு தேசத்தாருக்குள் பழக்கத்தில் வந்திருக்கும் ஓர் அனுஷ்டானமானது அன்னியதேசத்தாருக்குஅநாசாரமாகத்தோன்றி அவர்கள் புகார்செய்தால், அவர்களின் அனுஷ்டானத்தில் வந்திருக்கும் சில ஆசாரம் இவர்களுக்கு அநாசாரமாகத் தோன்றி அதையெடுத்துக்காட்டி அவர்கள்மேல் புகார் செய்வார்கள். இது உலக இயற்கை. உதாரணமாகச் சிலதேசத்து ஆசாரம் எடுத்துக்காட்டுகிறேன். "பிராஹ்ம

---

भाषाश्च विविधा ज्ञेया एवं सर्वत्र वर्तते. आचारत्यागिनः केचित् सत्कर्मत्यागिनः परे, सन्मार्गस्योपदेष्टारः स्वयमुन्मार्गगामिनः. जातीनां निर्णयश्चापि धर्माधर्मविवेचनम्, भक्ष्याभक्ष्यविशेषश्च पात्रापात्रनिदर्शनम्." 'अगस्तिर्भक्षयामास वातापिं जनकंटकम्, दोषी नहि कृतो लोके मांसभक्षणकारणात्'. 'अधिकारमनादृत्य कृतं कर्म विगर्हितम्, महद्भिर्नैव दोषाय लोकोपकृतिहेतुना'. "जगन्नाथे मत्स्यभोजी मद्यपीति सपूर्वगः,

ணர்கள் ஜகந்நாதத்தில் மத்ஸ்யபோஜிகளாயும், பங்காளத்
தில் மத்யபானிகளாயும், நேபாளத்தில் மஹிஷமாம்சபோஜி
களாயும் ராஜபுடானுவில் .(மேற்கில்) தோல்பாத்திரத்தில்
ஜலங்கொண்டு வருபவர்களாயும், நர்மதைக்கு தக்ஷிணத்தில்
அம்மான் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்பவர்களா
யுமிருக்கிறுர்கள். * இவற்றை அங்கங்கே வசிக்கும் ஜன சமூ
ஹத்தார் அனுஷ்டிப்பதால் இதுவும் தர்ம மார்க்கமென்று
விவேகிகள் சிஷ்டாசாரத்தில் சேர்த்துக்கொண்டனர். இதே

---

उत्तरे मांसभोज्याश्च पश्चिमेतु जलदृतिः. मातुले विपरीणायानर्मदादक्षवा
सिनः; यद्वा जनगृहीतत्वात् धर्म एषोच्यते बुधैः. इतरेपामधर्मोऽसौ पा

---

* தாய்வழியில் ஏழுதலைமுறைவரை தாயாதிகளல்லாத [அன்னிய]
கோத்திரத்தில் பிறந்தவளும், தகப்பன் கோத்திரத்தில் பிறக்காதவளுமான க
ன்னிகை, பிராமணர்களுக்கு மனையாளாகத்தகுந்தவள். [மனுஸ்மிருதி,3,5.]

असपिंडा च या मातु रसगोत्रा च या पितुः ।
सा प्रशस्ता द्विजातीनां दारकर्मणि मैथुने ।। मनुस्मृ० ३,५.

இந்தஸ்லோகத்தின், குல்லூகபட்டர் வியாக்கியானத்தில், பிராமணர்
தாயாருடைய கோத்திரத்தில்பிறந்த [அம்மான்பெண்போன்ற]பெண்களைக்
கல்யாணம் பண்ணிக்கொள்ளவிரும்பார்,,என்றுவியாசராலும்,

'सगोत्रां मातुरप्येके नेच्छन्त्युद्वाह कर्मणि' व्यासः.

பிராமணன் தன்கோத்திரப்பெண்ணையாவது, தன்பிரவரசம்மந்தமான கோ
த்திரப்பெண்ணையாவது, அப்படியே தாய்மாமன் புத்திரியையாவது, தாயா
ரின் கோத்திரத்திலுதித்தவளையாவது மணந்தால் அதற்கு சாந்திரா
யணமென்னும் வ்ஹாவ்ரதத்தையாசரித்துப் பிராயச்சித்தஞ்செய்து கொள்
ளவேண்டும் என்று வசிஷ்டரென்று விளங்கிய மேதாதிதி யென்பவராலும்,
சொல்லப்பட்டிருக்கிற மேற்கோளை யெடுத்துக்காட்டியிருக்கிறது.

'परिणीय सगोत्रां तु समानप्रवरां तथा, तस्यां कृत्वा समुत्सर्गं द्विज-
श्चान्द्रायणं चरेत्. मातुलस्य सुतां चैव मातृगोत्रां तथैव च'. वसिष्ठः.

சாந்த்ராயணவ்ரதம்;— அமாவாசையன்று உபவாசமிருந்து, மறுநாள்
முதல் ஒவ்வொரு கவளமாக அதிகப்படுத்தி பவர்ணமியன்று 16கவளம்
அன்னம் புஜித்து. மறுபடிநாளொன்றுக்கு ஒவ்வொரு கவளமாகக் குறைத்து
அமாவாசையில் உபவாசமிருந்துவருவது.



தர்மம், அவ்வழக்கங்களில்லாத மற்றதேசத்தாருக்கு சனு
தன தர்மமல்லவெனத் தோன்றலாம்." அதனுல், * "உல
கத்தில் பிராஹ்மணர் எப்படியிருந்தாலும் அவர்களை நிந்திக்
கக்கூடாது; அவர்களுடைய குறையை வெளியில் பிரஸ்தா
பிக்கவுங் கூடாது. பக்தியுடன்கூடின விவேகிகளுக்கு அவ
ர்களுடைய குறையை யெடுத்துக்காட்டி சிக்ஷிப்பவர் அவர்
களுடைய குரு; துஷ்டர்களுடைய குற்றத்தை நிரூபித்து
அவர்களை தண்டிப்பவர் அரசர். இவ்வுலகத்தில் ரகஸ்யமாகப்
பாபஞ் செய்பவர்களை தண்டிப்பவர் வைவஸ்வதனுன யமதர்
மராஜா. எந்த ஜனங்கள் பிறருடைய தோஷத்தில் திருஷ்
வைத்து அதை வெளியிடுகிறுர்களோ அவர்கள் பிறர் செய்
வதாகச் சொல்லும் பாபகர்மம் உண்மையானுல் அந்தப்பா
பத்தில் சமபங்கு பாபமும், அது பொய்யானுல் அந்தப்பா
பத்தின் இரண்டு பங்கு பாபமுமடைகிறுர்கள். அதனுல் பா
தோஷப் பிரசங்கஞ் செய்யக்கூடாது. கலியுகத்தில் கர்த்
தாவே அப்பாபபலனையடைவான்." என்று பிராஹ்மணோ
த்பத்திமார்த்தாண்டம் பரிபாஷாப் பிரகரணத்தில் சொல்ல
ப்பட்டிருக்கின்றது.

மேலும், "†.கர்ப்பாதானம் உபநயனம் முதலிய சம்
ஸ்காரங்கள் செய்யப்பட்டவனுய், பிராஹ்மணருக்குரிய அத்
யயனம் முதலிய சத்கர்மங்களாசரியாதவனு யிருந்தாலும்
அவன் பிராஹ்மணன்தான்" (பிரா. மா பக் 15 சு. 126.)
என்றும், "பிராஹ்மணன், தன்னையாரென்று கேட்டவர்க
ளுக்குத் தன்னுடைய கோத்ரம், பிரவரம், சாகை, தைவம்,

---

तित्यात्पातको मतः' ※'न निंद्याद्ब्राह्मणांल्लोके कथं वापि चरंति ते'
'गुरुरात्मवतां शास्ता राजा शास्ता दुरात्मनाम्, इह प्रच्छन्नपापानां शा-
स्ता वैवस्वतो यमः' 'ये लोकाः परदोषांश्च व्याहरंत्यविचारिणः, मि-
थ्या च द्विगुणं प्रोक्तं सत्यश्चेत्समभागिनः. अत एव न वक्तव्यं कर्तैव
लिप्यते कलौ' †'गर्भाधानादिभिर्युक्तस्तथोपनयनेन च,न कर्मचित्तो ना-
धीतो स भवेद्ब्राह्मणब्रुवः' कृते प्रश्ने वदन्स्वेषामुत्तरं पण्डितो जनः, गोत्र-

சர்மன் முதலியவைகளை விவரமாகச் சொல்லவேண்டும்" என்றும், *"பிராஹ்மணன் ஓர் விருக்ஷம்; அதற்கு சந்தியாவந்தனம் மூலம்; வேதங்கள் கிளைகள்; உத்தமமான தர்மகாரியங்கள் இலைகள்; (ஒரு விருக்ஷத்திற்கு வேர் வெட்டிவிட்டால் அந்த விருக்ஷத்தின் கிளை முதலிய யிதர பாகங்கள் நசித்துவிடுவதுபோல) சந்தியாவந்தனமான வேர் வெட்டிவிட்டால் (அதாவது அனுஷ்டியாவிட்டால்) வேதங்களான கிளைகளெங்கே? தர்மகார்யங்களான இலைகளெங்கே? (நசித்துவிடும்.) அதனால் மூலமான சந்தியாவந்தனத்தை மிக்க சிரத்தையுடன் ஒவ்வொரு பிராஹ்மணனும் அனுஷ்டிக்கவேண்டும்" என்று (பிரா. மார். பக்-51 சு 55.) லும், ‡"யாகம் பண்ணுதல், ஆசாரமாயிருத்தல் இந்திரிய நிக்ரகம் பண்ணுதல் எந்தப் பிராணியையும் கொன்று தின்னாமலிருத்தல், கிரஹணாதி புண்யகாலங்களில் கோ பூ ஹிரண்யாதி தானங்கொடுத்தல், வேதங்களை சாங்கோபாங்கமாக அத்யயனம் பண்ணுதல், ஆகிய யிவை பிராஹ்மணருக்குரிய முக்கிய தர்மங்கள்; ஆனால் ஞானயோகத்தினால் ஆத்மதர்சனமாகிற ஜீவப்பிரஹ்ம ஐக்ய நிலையோ! மேற்கூறிய யாவற்றிலும் பரமோத்தமமானது" என்று யாஜ்ஞவல்க்யஸ்மிருதி 1-வது அத்யாயம் 8-வது சுலோகத்திலும், "பிராஹ்மணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்ராதிரர் என்னும் ஜாதிகள் நான்கு

---

प्रवरशाखादिगोत्रदैवतसंग्रहम्' * विप्रो वृक्षो मूलकं तस्य संध्या वेदाः शाखा धर्मकर्माणि पत्रम् । तस्मान्मूलं यत्नतो रक्षणीयं छिन्ने मूले नैव पत्रं न शाखाः ॥ ‡ इज्याचारदमाहिंसा दानस्वाध्यायकर्मणाम् । अयं तु परमो धर्मो यद्योगेनात्मदर्शनम् ॥ (३५)

ब्राह्मणाः क्षत्रिया वैश्याश्शूद्राश्चत्वारो वर्णास्तेषां वर्णानां ब्राह्मणो गुरुरिति वचनात्. निरूपितं तत्र चोद्यमस्ति । को वा ब्राह्मणो नाम? किं जीवः? १. किं देहः २. किं वर्णः ३. किं कर्म? ४. किं जातिः? ५, किं पाण्डित्यं? ६. किं धर्मः? ७. किं धार्मिक्यं? ८. इत्यष्टौ विकल्पाः । प्रथमं जीवो ब्राह्मण इति चेत्तर्हि, सर्व-



ண்டு. அந்த வர்ணங்களில் பிராம்ஹணர் மேலான வர்ணத்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது தர்மசாஸ்திரங்களினால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்விஷயத்தில் விசாரணையுண்டு. அது யெப்படி யெனில்:— பிராஹ்மணனென்பவன் எவன்? 1. ஜீவனா? 2. சரீரமா? 3. வர்ணமா? 4. கர்மமா? 5. ஜாதியா? 6. பாண்டித்யமா? 7. தர்மமா? 8. தர்மசம்பந்தமான விஷயமா? என்று 8 கேள்விகள் யேற்படுகின்றன. முதலில் ஜீவன் பிராம்ஹணனென்றால் எல்லா ஜனங்களுக்கும் ஜீவன் ஒரே தன்மையாயிருப்பதனால் ஜீவன் பிராஹ்மணனாகமாட்டான். 1.

2-வது சரீரம் பிராம்ஹணனென்றால் சண்டாளன் வரையிலுள்ள மனுஷ்யர்கள் எல்லோருடைய தேஹத்திற்கும் கிழட்டுத்தனம் மரணம் உண்டாவதைப் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றபடியினால் தேஹம் பிராம்ஹணனாகமாட்டாது. பின்னையும் தேஹம் பிராம்ஹணனென்று சொல்லும் பக்ஷத்தில் ஒவ்வொரு மனிதரும் தாய் தந்தை யிறந்த பிறகு, அவர்களுடைய தேஹத்தை எரித்துவிடுகிறார்கள்; அதனால் அவர்களுக்கு பிர்மஹத்தி தோஷம் சம்பவிக்கவேண்டும்; அப்படியில்லை; அதனால் தேஹம் பிராம்ணனாகமாட்டாது. 2. 3-வது வர்ணம் பிராம்ஹணனென்று உரைப்போமானால், பிராம்ஹணன் வெண்மை நிறம், க்ஷத்ரியன் சிவப்பு நிறம், வைசியன் மஞ்சள் வர்ணம், சூத்ரன் கருப்பு நிறம் என்று நியமமாயிருக்கவேண்டும்; அப்படியின்றி கலப்பாயிருப்பதனால் வர்ணம் பிராம்ஹணனாகாது 3. 4-வது:—கர்மம் பிராம்ஹணனென்று புகல்வோமானால் பிராம்ஹணன் கர்மரூபமான 100 வரு

---

स्यापि जनस्य जीवस्यैकरूपत्वात्तस्माज्जीवो ब्राह्मणो न भवत्येव १. अन्यच्च देहो ब्राह्मण इति चेत्तर्हि चांडालपर्यंतानां मनुष्याणां देहस्य जरामरणदर्शनात्तस्मा देहो ब्राह्मणो न भवत्ये. पुनर्देहो ब्राह्मण इति चेत्तर्हि पितृमातृशरीरदहनात्पुत्राणां ब्रह्महत्यादिदोषासम्भवः, तस्माद्देहो ब्राह्मणो न भवत्येव. २. पुनर्वर्णो ब्राह्मण इति चेत्तर्हि ब्राह्मणः श्वेतवर्णः, क्षत्रियो रक्तवर्णः, वैश्यः पीतवर्णः, शूद्रो कृष्णवर्णः, इति निय-

ஷம் ஆயுளும், க்ஷத்திரியன் அதில் பாதியான 50 வருஷம் ஆயுளும், வைசியன் அதில் பாதியான 25 வருஷம் ஆயுளும், சூத்திரன் அதில் அரைப் பங்கு 12½ வருஷம் ஆயுளும் ஜீவித்திருப்பதென்ற நிர்ணயமில்லை. அதனால் கர்மரூபமான ஆயுள் பிராம்ஹணனாகமாட்டாது. 4.

5. வது ஜாதியினால் பிராம்ஹணனென்று சொல்லலாமா? என்றால், அந்ய ஜாதியிற் பிறந்த அநேக மஹரிஷிகள் இருக்கின்றார்கள். * * * * * * *
* * * * * * * * * *
அவர்களுடைய பிறப்பு வரலாறும் புராணங்களில் அநேகவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அவர்களுடைய ஆத்மஞான விசேஷத்தினால்ஜாதி விசாரணையில்லாமலே அவர்களை பிராம்ஹணர்களென்று மிகவும் ஆதரவுடன் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஜாதியினால் பிராம்ஹணனென்று சொல்லமுடியாது. 5.

6-வது பாண்டித்யத்தினால் பிராம்ஹணனென்று சொல்லலாமென்றால், க்ஷத்ரிய வைசிய சூத்ரர்களும் வியாகரணம் அதனர்த்தமான மஹா பாஷ்யம் தர்க்கம் மீமாம்ஸை (முதலான சாஸ்திரங்களைப்) படித்தறிந்த பண்டிதர்களாய் அநேகர் இருக்கின்றார்கள்; ஆகையால் பாண்டித்தியத்தினால் பிராம்ஹணனென்று சொல்லமுடியாது. 6.

---

मे इदानीं ब्राह्मणवर्णदर्शनाभावात्संकरदर्शनात्तस्माद्वर्णो ब्राह्मणो न भवत्येव. ३. अन्यच्च, कर्म ब्राह्मण इति चेत्तर्हि ब्राह्मणः शतवर्षाणि जीवति क्षत्रियस्तदर्धं वैश्यस्तदर्धं शूद्रस्तदर्धमिति नियमाभावात्तस्मात्कर्म ब्राह्मणो न भवत्येव,४. अन्यच्च जातिर्ब्राह्मण इति चेत्तर्हि अन्यजातौ समुद्भवा बहवो महर्षयः सन्ति,.................... तेषां जातिं विनापि सम्यग्ज्ञानतया विशेषाद्ब्राह्ममत्यंतं स्वीक्रियते तस्माज्जात्या ब्राह्मणो न भवत्येव, ५. अन्यच्च पाण्डित्यं ब्राह्मण इति चेत्तर्हि, क्षत्रियवैश्य—



7-வது:—தர்மத்தினால் பிராஹ்மணனென்று சொல்லலாமென்றால் க்ஷத்ரிய வைசிய சூத்ரர்களும் இஷ்டாபூர்த்தம் முதலான தர்மங்களைச் செய்தவர்களாய் அநேகர் இருக்கின்றார்கள்; அதனால் தர்மத்தினால் ப்ராம்ஹணனென்றுசொல்லக்கூடாது. 7.

8-வது தார்மீகத்தி (தானத்தி)னால் பிராஹ்மணனென்று சொல்லலாமென்றால், க்ஷத்ரிய வைசிய சூத்ரர்களும் கன்யாதான கோதான ஹிரண்யதான பூதானாதிகள் செய்த மஹாதாதாக்களாயநேகர் இருக்கின்றார்கள். ஆகையால், தார்மீகத்தினால் பிராஹ்மணனாகமாட்டான். 8.

பின்னை எதனால் பிராஹ்மணனாவானென்றால்:—"ராகத்துவேஷாதி குணங்களில்லாதவனாய் சமதமாதிகுணபூஷிதனாய், உள்ளங்கை நெல்லிக்கனிபோல பிரஹ்மசாக்ஷாத்காரம் பண்ணின அபரோக்ஷ ஞானியே பிராஹ்மணனாவான்" என்று வஜ்ரசூசிக உபநிஷத்திலும், அப்படியே * "பிறப்பினால் சூத்ரனாகவும், உபநயனாதி சம்ஸ்காரங்களினால் த்விஜனாகவும், வேதாத்யயனத்தினால் விப்ரனாகவும், பிரஹ்மத்தையறிவதனால் பிராஹ்மணனாகவுமாகிறான்." என்றும், சொல்லப்படுவதனால்,

---

शूद्रादयोऽपि पदपदार्थवाक्यप्रमाणविज्ञाना बहवः सन्ति, तस्मात्पाण्डित्येन ब्राह्मणो न भवत्येव. ६. धर्माद्ब्राह्मण इति चेत्तर्हि, क्षत्रियवैश्यशूद्रादय इष्टापूर्तादि धर्मकारिणो बहवः सन्ति, तस्माद्धर्माद्ब्राह्मणो न भवत्येव. ७. अन्यच्च, धार्मिको ब्राह्मण इति चेत्तर्हि क्षत्रियवैश्यशूद्रादयोऽपि कन्यादानगोदानहिरण्यदानपृथ्वीदानादिदातारो बहवः संति, तस्माद्धार्मिको बृाह्मणो न भवत्येव. ८. किंतु, करतलामलकमिव पश्यत्यपरोक्षे ब्रह्मकृतार्थतया कामरागद्वेषादिरहितः शमदमसंतापादिभिर्युतः मानमात्सर्यतृष्णासंमोहादिदुष्टार्थनिवृत्तः स एव ब्राह्मण इत्युच्यते. नतु वेषधरः. ॐ शांतिः। (वज्रसूचिकोपनिषत्) (३६)

* जन्मना जायते शूद्रः व्रतबंधाद्द्विजोत्तमः। वेदाध्यायी भवेद्विप्रो

பிராஹ்மணனென்னும்பதம் பிரஹ்மஞானியையே குறிக்கிறது. இப்பிராஹ்மணன், †“ஆத்மவந்தனும் தன்னிடத்தில் சர்வப்பிராணிகளையும் பிராணிகளனைத்தினிடத்தில் தன்னையும் பார்க்கிறவனாயும், எவ்வஸ்துவினும் மோஹமற்றவனாயும் எதையும் சிந்திக்காதவனாயும் கவியா (சர்வஜ்ஞனா)யும் இம்மண்ணுலகத்தில் பூதவுடம்புடனிருந்தாலும் பிரஹ்மபீடத்தில் பிரகாசிக்கிறான். (ஆபஸ்தம்பதர்மசூத்ரம். 1, 8, 23, 1.)

இவனை பிரஹ்மாதி தேவர்களும் கைகுவித்தேத்தித் தொழுவர். இம்மஹான் ஜராமரணங்களைக்கடந்தவர். என்று தாயுமானவர் சொல்லுகிறார்.:—

“சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றுமெனலாற்
சகமீதிருந்தாலு மரணமுண்டென்பது
சதாநிஷ்டர் நினைவதில்லை
சிந்தையறி யார்க்கிது போதிப்பதல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாந்
திவ்யகுண மார்க்கண்டர் சுகாதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யரலவோ
விந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுள
ரிருக்காதி வேத முனிவ
ரெண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்க
ளிரவிமதி யாதியோர்கள்
கந்தருவர் கின்னரர்கண் மற்றையர்க ளியாவருங்
கைகுவித்திடுந் (தன்மையராம்)”

என்பதாலும், *“ஞானியோ! என்றால் நானே அவன் என்பது என் சித்தாந்தம்” “அவனே நான் அவன் எனக்குப் பிரியன்” (பக. கீ. 7, 18.) என்று பகவானே கூறும்போது பிராஹ்மணர் பெருமை எனையாலெவ்வாறுரைக்க முடியும்?

ब्रह्मज्ञो ब्राह्मणो भवेत् ॥ ‡ आत्मनि पश्यन् सर्वभूतानि न मुह्येच्चिंतयन् कविः आत्मानं चैव सर्वत्र यः पश्येत्स वै ब्रह्मा नाकपृष्ठे विराजति (३८)
'ज्ञानीत्वात्मैव मे मतम्' 'अहं स च मम प्रियः'



இம்மஹோன்னத நிலைக்குப் போக, *“மனுஷ்ய ஜன்மமென்ற கப்பல் துக்கமென்ற சமுத்ரத்தைத் தாண்டுவதற்காக அநேகபுண்யங்களென்ற பணத்தைப் பெற்ற ஈச்வரனாற் கொடுக்கப்பட்டது: அவ்வோடமுடையாமுன்பு ஜாக்ரதையாகப் பேரின்பக்கரை சேர்.” என்பது முதுமொழி. இவ்வரிய மானிடப்பிறவிக்கு விவேகமே ஒப்பற்ற பூஷணமாம். அதையபகரிக்கக் காமம் குரோதம் முதலிய கள்வர் பலருளர். அவர்கள் மனதின் மூத்தமனையாளாம் பிரவர்த்தி வயிற்றிற் பிறந்தவர்கள். தம் சிற்றன்னை நிவர்த்தியின் புத்ரர்களான விவேகன் சந்தோஷன் முதலானோரைப் பகைத்துக்கடைசியில் விவேகனுக்குவுபநிஷத்தென்னும் பத்னி வயிற்றிற் பிறந்த பிரபோதசந்த்ரனாலிறந்து நாசமடைந்த விவரத்தைக் கிருஷ்ணமிச்ர யதீந்த்ரராற் கூறப்பட்டிருப்பதைப் பிரபோத சந்திரோதய நாடகத்திற் காண்க.

இவ்வுத்தம குணரத்னமான ஞானம், சிலசமயம் எஜ்ஜாதியரிலுமுண்டாகலாம். க்ஷத்ரியரான விச்வாமித்ரர் பிரஹ்மரிஷியானதும், சூத்ரனான தர்மவ்யாதன் கௌசிகரென்னும் அந்தணருக்கு தர்மோபதேசம் பண்ணினதும் இந்த ஞானத்தாலன்றோ!

அப்படியே பிரஹ்மவம்சத்திற் பிறந்தோர் ரஜோகுணதர்ம்மமான த்வேஷாதிகளாலேவப்பட்டு யுத்தாதி யிதரகர்மங்களாசரிக்கலாம். பரசுராமர் துரோணர் யுத்தம் புரிந்துளார். ஆயினும் அவர்கள் ஞானரத்னமிழந்திலார்.

ஆகையால் ஓர் மேன்மக்களிடம் துஸ்ஸங்கத்தாலுண்டாகுந் தீயவழக்கத்தையுலகம் வெறுப்பது, அவ்வகுப்பாரின் க்ஷேமத்தைக்குறித்தேயாம். அஃதறிந்தவ்வகுப்பார் தங்குறை தீர்ந்தொழுகல் முறையாம்.

* “महता पुण्यपण्येन क्रीतेयं कायनौस्त्वया ।
पारं दुःखोदधेर्गन्तुं तर यावन्नभिद्यते ॥”

இப்படி ஜனங்களிடத்தில் இருக்கவேண்டிய நற்குணங்களில்லாமற்போக கலியுகமஹிமையே காரணமென்று ஸ்ரீமத் பாகவதம் 12-வது ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. *

ஆகையால் ஸௌராஷ்ட்ரப் பிராஹ்மணர் சிலரிடத்திலும் நீ சொல்லுகிறபடி நிஷித்தமான ஆசாரமிருக்கலாம்; அதனால் அவர்களை நிந்திக்கலாமா? நல்ல வித்வான்களாயும் மஹாஞானிகளாயும், யோகிகளாயும், மஹாகவிகளாயும் வேதசாஸ்திரங்கள் அத்தியயனம் பண்ணினவர்களாயுமெத்தனை பெயர் சௌராஷ்ட்ரப் பிராமணரிலிருக்கின்றார்கள்!

"உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே——வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி." (நன்னெறி.)

என்னும் பெரியார் மொழிப்படி பிறர் குற்றத்தைப் பாராட்டாது குணத்தைக் கொள்ளுதல் மேலோரியற்கையாதலால்,

---

* கலியுகதர்ம (அதர்ம) மதிகப்படும்பொழுது, சராசர குருவான ஸ்ரீமந்நாராயணன் சாதுக்களையிரக்ஷிக்கும் பொருட்டும், தர்மத்தையுத்தரிக்கும் பொருட்டும் சம்பலமென்னும் கிராமத்தின் முக்கியரான "விஷ்ணுயசஸின்" கிரஹத்தில் கல்கியாக அவதரிப்பார்.

தர்மஸ்தாபகரான பகவான் கல்கியாக அவதரிக்கும்பொழுது, கிரேதாயுக தர்மம் நடக்கும். அப்பொழுது ஜனங்களுடைய பிறப்பும் சாத்வீக குணமுள்ளதாயிருக்கும்.

சூர்யனும் சந்திரனும் பிரஹஸ்பதியும் புஷ்யமீ நக்ஷத்திரத்தில் (கடகராசியில்) கூடுகிறபோது கிருதயுகதர்மம் நடக்கும்.

சப்தரிஷிகளில், 'புலஹர் க்ரது' வென்னுமிரண்டு நக்ஷத்திரங்கள் இராத்திரியில் கீழ்திசையில் உதயமாகும்போது, அவ்விரண்டு நக்ஷத்திரங்களின் மத்தியில் தென்வடலான ரேகையில் 'மக' நக்ஷத்திரங்காணும்போது கலியுகமாரம்பம்.



நாம் ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணரிடமுள்ள குணத்தைப்பாராட்டியவர்களைப் பூஜிக்கவேண்டும்.

ஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து தெற்கே வரும்போது சாதுர்வர்ணஸ்தரும் வந்தார்கள். அவர்களில் க்ஷத்ரிய வைசிய சூத்ரர் அங்கங்கே பலவிடங்களில் வசிக்கிறார்களாம். அவர்களே தாங்கள் க்ஷத்ரிய வைசிய சூத்ரரென்று சொல்லுவார்கள். அவர்களுக்கும் இந்த ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர்களுக்கும் பந்தி முதலிய யாதொரு சம்மந்தமுமில்லை.

தமிழ் தெலுங்கு முதலிய பாஷைகளில் பிராம்ஹணர் பே

---

45 சப்ரிஷிமண்டலம்: ...வடக்கு திசையில் பூமியின் டிக்கிரிக்கு எதிரில் ஆகாசத்தில் தண்டிகைபோன்ற வடிவில் 7 நக்ஷத்திரங்களை யிராத்திரியிற் காணலாம். அவை இதன் இடதுபக்கத்தில் காட்டியிருக்கிற புள்ளிகள் போன்றிருக்கும்:




அவற்றில் 1க்ரது, 2புலஹர், 3.புலஸ்தியர், 4.அத்ரி, 5. அங்கிரஸ், 9. அருந்ததியுடன் விளங்கும் வஸிஸ்டர். 7, மரீசி. சப்தரிஷிமண்டலம் இப்பொழுது மகநக்ஷத்திரத்திலிருக்கிறது.

यदा चन्द्रश्च सूर्यश्च तथा तिष्यबृहस्पती । एकराशौ समेष्यन्ति
तदा भवति तत्कृतम् ॥ २४ ॥ सप्तर्षीणां तु यौ पूर्वौ दृश्येते उदि-
तौ दिवि । तयोस्तु मध्ये नक्षत्रं दृश्यते यत्समं निशि ॥
....तदाविशत्कलिर्लोकं पापे यद्रमते जनः ॥ (४०)

கலியுகம்பிறந்து தேவவர்ஷங்கள் 1000 ஆகும்போது 'கல்கி' யவதாரமும் கிரேதாயுகதர்மமும் நடக்கும். தேவவர்ஷங்கள் 1000-க்கு மனுஷ்யவருஷங்கள் 3,60000

'दिव्याब्दानां सहस्रान्ते चतुर्थे[कलौ]तु पुनः कृतम् । भविष्यति' (४१)
[ஸ்ரீமத்பாகவதம், 12-வது ஸ்கந்தம், 2-வது அத்தியாயம்.]

சுவதற்கும், மற்ற வகுப்பார் பேசுவதற்குமுள்ள பேதம்போலவே ஸௌராஷ்ட்ர பாஷையிலும் அவாந்தர பேதமுண்டு. அதனாலுமறியலாம்.". என்றார்.

2. சேதுராமன்:—ஸ்வாமி! இந்த பிராந்தத்தில்பிராம்ஹணர் நெசவு தொழில் செய்பக்காணோமே! அத்தொழில் பிராம்ஹணருக்குரியதென்று சாஸ்திரமாதரிக்குமா?" என,

ஸ்ரௌதிகள்.—"குழந்தாய் பிராம்ஹணருக்கு*" அத்தியயனம், அத்யாபனம், யஜ்ஞும். யாஜனம், தானம், பிரதிக்ரஹம், என்னும் ஆறு தொழில் என்று ஸ்வாயம்பு மனுவால் விதிக்கப்பட்டது. "† யோகம், தவம், இந்திரியநிக்ரஹம், தானம், சத்யம, சௌசம், தயை, சாஸ்திரவிசாரணை, வித்யை விஜ்ஞானம், ஆஸ்திக்யம்" ஆகிய பத்தும் பிராம்ஹண கருமங்களென்று வஸிஷ்டஸ்மிருதியிலும், சமம் (மனதை யடக்கல்) தமம், (இந்திரிய நிக்ரஹம்) சௌசம், (உள்ளும் வெளியிலும் சுத்தமாயிருத்தல்) பொறுமை உண்மை ஞானம், (பரோக்ஷம்) விஜ்ஞானம், (அபரோக்ஷம்) தைவபக்தி ஆகிய 9-ம் பிராம்ஹண கர்மங்களென்று ஸ்ரீமத் பகவத்கீதையிலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

‡ "கூடவிருந்து ஆசாரணை கற்பித்து அதைத்தாமும் நடத்திக்காட்டுகிற ஆசார்யர்களும், வேதாத்யயனம் கற்பிக்கின்ற அத்யாபகர்களும், யாகம் பண்ணிவைக்கின்ற யாஜகர்களும், (புரோஹிதர்) ஒரு பிராணிக்குந் தீங்கு, திரிகரணங்களாலுஞ்செய்யாமல் லோகோபகாரம் புரியுஞ்சாதுக்களும், பொய் குரூரமான வார்த்தை, தற்புகழ்ச்சி முதலியன வந்து விடாமல் மிதமாயும் உண்மையாயும் பிறருக்கு உபகாரத்தினிமித்தமாயும், வேதோச்சாரணமாயும் பேசுகின்ற முனிகளுந்தான்

*‘अध्यापन मध्ययनं यजनं याजनं तथा। दानं प्रतिग्रहंश्चैव ब्राह्मणानामकल्पयत्’ ॥ †‘योगस्तपो दमो दानं सत्यं शौचं दया श्रुतम्। विद्या विज्ञानमास्तिक्य मेतद्ब्राह्मणस्य लक्षणम्’ ॥ ‘शमो दमस्तपः शौचं क्षान्तिरार्जवमेव च। ज्ञानं विज्ञानमास्तिक्यं ब्राह्मं कर्म स्वभावजम्’ ॥ ‡आर्या अध्यापका याजका साधवो मुनयश्च ब्राह्मणाः *क्षात्रेण कर्मणा



பிராம்ஹணர்களென்று (சத்தர்மசூத்திரம் 3. 43லும்) கூறப்பட்டிருப்பதால் மேற்கூறிய தொழில்கள் பிராம்ஹணர்களுக்கு ஏற்பட்டவையாகிறது.

இக்காலத்தில் மேலே சொன்ன கர்மங்களையனுஷ்டிப்பவர் மிகவும் அரிதாயிருப்பார். பூர்வத்தில் க்ஷத்திரிய அரசர்கள் பிராம்ஹணர்களுக்கென்று அநேக தர்மஸ்தாபனங்களை யேற்படுத்தியிருந்தார்கள். பிராம்ஹணர் அதைப்பெற்று வைதிகமார்க்கத்தை யனுஷ்டிக்க மனுவால் விதிக்கப்பட்ட ஷட்கர்மத்தை யவலம்பித்தும், அபவர்க்கமான மோக்ஷம் பெறுவதற்கு, பின் சொன்ன யோகாப்பியாஸம் முதலியவைகளையனுஷ்டித்தும் வந்தார்கள். மேற்சொன்ன இரண்டு மார்க்கத்திலும் பழகியவர்கள் வசிஷ்டர் முதலான மஹரிஷிகள். அக்காலத்திலும், * ராஜ்யக்ஷோபம் முதலான ஆபத்காலத்தில் க்ஷத்ரிய வைசியத்தொழில் (யுத்தம் வியாபாரம் முதலியவை) களையுஞ்செய்து ஜீவிக்கவேண்டு" மென்று யாஜ்ஞவல்க்யஸ்மிருதி அத். 27 சு. 35லும், † "க்ருஷி, (உழுதல்) சில்பம், (உருவகப்படுத்தல், சித்திரமெழுதல் துணிநெய்தல் முதயியன) உபாத்யாயம், சேவகம், வியாபாரம், வண்டிவைத்து வாடகைக்கு விடல், பிறர் மனதைத் திருப்திபடுத்தல், மிகவும் செழிப்பாக புல் பூண்டு மரம் ஜலம் நிறைந்தவிடங்களுக்குப்போய் குடியேறுதல், பிரபுக்களிடம் யாசித்தல், மலையிலுள்ள விறகுகளைக் கொண்டுவந்து நகரங்களில் விற்றல், ஆகிய பத்து தொழில்கள், பிராம்ஹணர்களுக்கு ஆபத்காலத்தில் விதிக்கப்பட்ட ஜீவனஹேதுக்கள்" என்று ஷைஸ்மிருதி ஷைஅத். 42-வது சுலோகத்திலும் ‡ இதே விதியை மனுஸ்மிருதி அத். 10 சு. 116லும் சொல்லியிருக்கிறது.

அப்படியே ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர்களும் ராஜ்யக்ஷோபமான ஆபத்காலத்தில் சிலர், ஜோதிஷம், வைத்தியம் முதலான வித்யையையும், வஸ்திர நிர்மாணம் வியா

जीवेद्दिशां वाप्यापदि द्विजः’ †“कृषिः शिल्पं भृतिर्विद्या कुसीदं शकटं गिरिः। सेवानूपं नृपो भैक्ष्य मापत्तौ जीवनानि तु” ‡‘विद्याः शिल्पं भृतिस्सेवा गोरक्षा विपणिः कृषिः। गिरिर्भैक्ष्यं कुसीदं च दश जीवनहेतवः’॥

பாரம் முதலான தொழில்களையும் அவலம்பித்தார்கள்.

திராவிடாந்த்ர மஹாராராஷ்ட்ராதி பிராம்ஹணர்களும், ராஜ்யக்ஷோபமான ஆபத்காலத்திலேயே உழுதல், வியாபாரம் முதலான தொழில்களைச் செய்யலாயினர்.

மற்ற தொழில்களைக் காட்டிலும் நெய்யுந்தொழிலில் பொய் புரட்டு முதலிய பாபம் நேரிடாதென்று, பொய்யாமொழிப்புலவரான தெய்வத்திருவள்ளுவ நாயனாரும் நெய்யுந் தொழிலைக் கைகொண்டார் மேலோர் ஆசாரமும் பிரமாணச் சட்டமாகுமென்று மனுவும், † “மேலோர் எதைதை அனுஷ்டிக்கிறார்களோ அதைதையே சாதாரண ஜனங்களனுஷ்டிப்பார்களென்று” ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவும் சொல்லியிருக்கின்றார்கள். ஆகையால் சௌராஷ்ட்ரப் பிராம்ஹணரில் பலர் செய்யும் நெய்யுந்தொழில் சாஸ்திரப் பிரமாணத்திற்கு விரோதமானதல்ல.

இத்தொழில் செய்கின்ற இவர்கள் பிராம்ஹணர்தானாவென்று சந்தேகித்து கி. பி 1705-ல் மதுரையில் ஜோஸ்யம வேங்கடரெங்கய்யரென்பவர், உபாகர்மம்முடித்து வந்து கொண்டிருந்த ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர்களில் 18 பேரை அர்ஸ்ட் செய்து திருச்சிக்கனுப்ப, அங்கு அப்பொழுது அரசு செலுத்திக்கொண்டிருந்த ஸ்ரீராணி மங்கம்மாள் அவர்கள் அநேக வித்வான்களைக் கொண்டு இவர்களை விசாரித்து சகல சாஸ்திர சம்மதமாக சௌராஷ்ட்ரப் பிராம்ஹணர்களுக்கு, பிராம்ஹணர்களுக்குரிய வேதோக்தமான கர்மங்களில் அதிகாரமிருக்கிறது; அவர்கள் பாரம்பர்யமாக நடத்திவந்த வேதோக்தமான, சகல கர்மங்களையனுஷ்டித்து வரவேண்டிதென்று சாஸனங்களைக் கொடுத்திருக்கின்றார்கள்.

அப்படியே சேலம் கலெக்டர், சேலம் முனிசிபல் கௌன்சில்சேர்மன் அவர்களுக்கு வருகிற ஸென்ஸஸுக்கு சௌராஷ்ட்ரர்களை “சௌராஷ்ட்ரப் பிராம்ஹணர்கள்” என்று பதிவு செய்யவேண்டு”மென்று No. 90. Census, 25—1—01 உள்ள ஆர்டரால் உத்தரவு கொடுத்திருக்கிறார்.” என்றார்.

† ‘यद्यदाचरति श्रेष्ठः तत्तदेवेतरो जनः’ ॥ (४९)



3. சேதுராமன்:—“ஸ்வாமி! ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர்கள் வேதோக்தமான எந்த கர்மங்களையனுஷ்டிக்கிறார்கள்?” என,

சிரௌதிகள்:—“அப்பா ஸௌராஷ்ட்ர பிராம்ஹணர் யாஜுஷப் பிரயோகம் யல்லாஜீயம் முதலான கிரந்தங்களையனுசரித்து, †கர்ப்பாதானம் பும்ஸவனம் சீமந்தம் ஜாதகர்மம் நாமகரணம் அன்னப்பிராசனம் சௌளம் உபநயனம் பிராஜாபத்யம் சௌமியம் ஆக்நேயம் வைஸ்வதேவம் கோதானம் சமாவர்த்தனம் விவாஹம் அந்தியகர்மம்” ஆகிய ஷோடச சமஸ்காரங்களையும், சந்தியாவந்தனம் முதலிய நித்யகர்மங்களையும், அமாவாசை சங்க்ரமணம் (மாசப்பிறப்பு) பௌர்ணமி, க்ரஹணம், விஷுவத், (சித்திரை ஐப்பசி மாசப் பிறப்பு) உபாகர்மம் முதலான புண்யகாலங்களில் தேவரிஷி பித்ரு தர்ப்பணங்கள் கால நீர்த்த சிரார்த்தங்கள் யுகாதி வரலக்ஷ்மீ, விநாயகசதுர்த்தியாதி விரதங்கள் ஆகிய நைமித்ய கர்மங்களையும, பஞ்சகவ்யம் முதலான பிராயச்சித்த, கர்மங்களையும் ஸ்ருதி (வேதம்) ஸ்மிருதி (மனு முதலான மஹரிஷிகளாற் சொல்லப்பட்ட தர்மசாஸ்திரம்) களில் விதிக்கப்பட்டபடி வேதமந்திரங்களினால் அனுஷ்டித்து வருகிறார்கள்!

தவிர, ஆகமங்களிற் கூறியபடி தேவாலயங்களின் நித்யோத்ஸவம் மஹோத்ஸவம் பிரமோத்ஸவம் தீர்த்தோத்ஸவம் முதலான உத்ஸவங்களையும் நடத்தி வருகிறார்கள்.” என்றார்.

4. சேதுராமன்:—ஸ்வாமி! இவர்கள் தசவிதப் பிராம்ஹணர்களில் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள்?” என,

சிரௌதிகள்:—சேதுராமா! விந்தியமலைக்கு வடக்கில் வசிக்கிற, ‡ “சாரஸ்வத கான்யகுப்ஜ கௌட உத்கல மைதுல

†‘गर्भाधान पुंसवन सीमन्तोन्नयन जातकर्म नामकर्मान्नप्राशन चौलोपनयन वेदव्रतचतुष्टय गोदान समावर्तन विवाह पितृख्यानि’ [हि०,के०,ब्रह्मकर्मसमुच्चयः] (५०)

‡सारस्वताः कान्यकुब्जा गौडा उत्कलमैथिलाः । पञ्चगौडा इति

வென்னும் பிராம்ஹணாள் பஞ்சகௌடாளென்றும், தக்ஷிணத்தில் வசிக்கிற "த்ராவிட ஆந்த்ர கர்ணாட மஹாராஷ்ட்ர குர்ஜர" வென்னும் பிராம்ஹணாள் பஞ்சதிராவிடாளென்றும் வளங்குவர்; சௌராஷ்ட்ரப் பிராம்ஹணர் கூர்ஜர சம்பிரதாயத்திலடங்கியவரானதால் பஞ்சதிராவிட வகுப்பைச் சேர்ந்தவராவர். ஆனாலும் இத்தேசத்தில் வந்த பிற்பாடு ஆந்திர சம்பிரதாயத்தையனுஷ்டித்து வருகிறார்கள்.

"எவர்களுக்கு பெண்ணைக் கொடுக்கக்கூடுமோ, அவர்களுடன் போஜனஞ் செய்யவேண்டும்; சில ஆசரணைகள் (எல்லா ஜாதியாரும் சமபந்தியாக சாப்பிடுதல்) முதலியன முன்யுகத்தில் அனுஷ்டிக்கப்பட்டிருந்தாலும் அவற்றைக் கலியுகத்தில் அவசியம் விலக்கவேண்டும்" என்று பத்மபுராணம் பாதாளகண்டத்தில் சொல்லப்பட்டிருப்பதால் சௌராஷ்ட்ரப் பிராம்ஹணாள் அன்னிய (திராவிட ஆந்திராதி) பிராம்ஹணாளுக்கு ஆதித்யம் (விருந்து உண்பித்தல்) சிராத்தாதிகளில் பிராம்ணார்த்தத்திற்கு அழைத்தல், பெண் கொடுத்தல் முதலிய சம்மந்தம் அவர்களுடன் செய்யாமல் மேற்சொன்ன யெல்லாவற்றிற்கும் தங்களுக்குள்ளேயே சம்பந்தஞ் செய்கிறார்கள். இதனாலும் திராவிடாந்த்ராதி பிராம்ஹணாளுக்கும் ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணாளுக்கும் சம்பந்தமில்லாமற் போயிற்று. இதுவும் சாஸ்திரோக்தமானதே." என்றார்

5. சேதுராமன்:—ஸ்வாமி! இவர்கள் பேசும் பாஷையின் வரலாறென்ன" அதற்கு எந்தலிபியையுபயோகிக்கிறார்கள்?

சிரௌதிகள்:—குழந்தாய்! இவர்கள் பேசும் பாஷை ஸௌராஷ்ட்ரம். அது ஸௌரசேனி பாஷையின் மருவு; ஸௌரஸேனியென்பது சம்ஸ்கிருதத்திலுண்டான பிராகிருத

---

ख्याता विंध्यस्योत्तरवासिनः ॥ कर्णाटकाश्च तैलंगा द्राविडा महाराष्ट्रकाः। गुर्जरा[सौराष्ट्रा]श्चेति पञ्चैव द्राविडा विंध्यदक्षिणे ॥ यत्र कन्या प्रदातव्या तत्र कार्यं हि भोजनम्। पूर्वं समाश्रितो मार्गः कलौ त्याज्यः प्रयत्नतः ॥ पूर्वमेवं प्रसंगोभूत्सर्वजातिषु भोजनम्। वृद्धपरंपराप्राप्तं क-



பாஷை ஆறில் ஒன்று, அது சூரசேனதேசத்தார் பேசிவந்த பாஷையாகும்.

* "கௌமார பாணினீ முதலான மஹரிஷிகளால் செய்யப்பட்ட வியாகரண ரீதியான சம்ஸ்கிருத பாஷையை சம்ஸ்கிருதமென்று சொல்லப்படும்." "சம்ஸ்கிருத பாஷையிலுள்ள தாதுக் (பகுதி) களின் விகாரமே ப்ராக்ருதமெனப்படும்" ". அந்தப்பிராக்ருதம், சௌரஸேனீ, ப்ராக்ருதீ, மாகதீ, பைசாசீ, சூலிகாபைசாசீ, அபப்ரம்ஸீ, யென ஆறு வகைப்படும்."

"ப்ராக்ருதமென்பது மஹாராஷ்ட்ரமாகும்" "சூரசேன தேசத்திலுண்டான பாஷையை ஸௌரசேனியென்று சொல்லப்படும்" ஸௌரசேனி பாஷையின் விகாரம் சௌராஷ்ட்ர பாஷையென்று சொன்னேன்.

சௌராஷ்ட்ர பாஷையான "† பிராக்ருத பாஷையில் பெயர் வினைச்சொற்களிரண்டிலும் இருமை கிடையாது. இருமை வருமிடங்களில் பன்மை வழங்கும்" "‡ இரண்டாவது வேற்றுமைக்குப் பதில் சிலவிடங்களில் ஆறாம் வேற்றுமை வரும்; நான்காம் வேற்றுமைக்குப் பதில் எப்பொழுதும் ஆறாம் வேற்றுமையே உபயோகமாகும்" என்று காத்யாயன முனிவராலியற்றப்பட்ட பிராகிருத மஞ்சரியின் முகவுரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

1. பெயர்வினைச் சொற்களில் இருமை வருமிடங்களில் பன்மை வழங்குமென்பதற்கு, உதாரணம்:—

---

लौ त्याज्यं द्विजोत्तमैः ॥५३॥ * 'कौमारपाणिनीयादि संस्कृता संस्कृता मता। प्रकृतेः संस्कृतायास्तु विकृतिः प्राकृती मता' ॥ 'षड्विधा सा प्राकृती च सौरसेनी च मागधी। पैशाची चूलिकापैशाच्यपभ्रंश इति क्रमात्' ॥ (५५) 'तत्र तु प्राकृतं नाम महाराष्ट्रोद्भवं विदुः' † 'प्राकृते न द्वि वचनं सुप्तिङां चोपपद्यते। यस्माद्द्विवचनस्थाने बहुत्वं सूत्रचोदितम्' ॥ ५७ ‡ द्वितीयादि विभक्तीनां स्थाने षष्ठी क्वचिद्भवेत्। चतुर्थ्या अपि षष्ठी स्यान्नित्यमेकत्वबहुत्वयोः ॥ [प्राकृतमञ्जर्यौपोद्घातम्](५८)

பெயர்: வினை:

ஒருமை. இருமை. பன்மை. ஒருமை. இருமை. பன்மை.

रामः, रामौ, रामाः. आगच्छति, आगच्छतः, आगच्छन्ति.

रामो, ,, रामान्. अवरेस्, ,, अवरियास्.

ராமொ ,, ராமான் அவெரெஸ் ,, அவெரியாஸ்

2. இரண்டாவது காலாவது வேற்றுமைகளுக்குப் பதில் ஆரும் வேற்றுமை வருமென்பதற்கு உதாரணம்:—

रामः रावणं अताडयत्. श्रीरामः वसिष्ठाय दानं ददौ.

रामो रावणुक्हनेसि. श्रीरामो वसिस्तुक् दान् दियेसि.

ராமொ ராவணுக் ஹனெஸி. ஸ்ரீராமொ வசிஸ்டுக் தான் தியெசி.

ஸ்ரீராமர் ராவணனையடித்தார். ஸ்ரீராமர் வசிஷ்டருக்கு தானங் [கொடுத்தார்

ராவணுக் 2-ம் வேற்றுமை.

अयोध्या रामस्य राजधानी. अयोध्यो रामुक्राज्यस्थानि.

ஸ்ரீராமுக் காம். அயோத்யா. ஸ்ரீராமருடைய பட்டணம் அயோ[த்யை

ஸ்ரீராமுக் 6-ம் வேற்றுமை.

மேற்காட்டிய உதாரண வாக்கியங்களில் தமிழில் 2. 4 6. வேற்றுமைகளுக்குப் பேதமும்; ஸௌராஷ்ட்ரத்தில் 2. 4 வேற்றுமைகள் 6-ம் வேற்றுமையாய் வந்ததையுங்காண்க.

ஸௌராஷ்ட்ர லிபி தேவநாகரீ லிபியின் மோடி. (கையெழுத்து) அக்ஷரங்களாகும். அவை உனக்குத் தெரியும் பொருட்டு தேவநாகரீ அக்ஷரங்களும் ஸௌராஷ்ட்ர அக்ஷரங்களும், எழுதிக்காட்டுகிறேன். ஆனால் சம்ஸ்கிருதத்தில் ॡ காரத்திற்கு தீர்க்கமில்லை. எ ஒ. காரங்களுக்குக் குறில்கிடையாது.

உயிரெழுத்துக்கள்:—

अ आ इ ई उ ऊ ऋ ॠ ऌ ए ऐ ओ औ अं अः

ꢂ ꢃ ꢄ ꢅ ꢆ ꢇ ꢈ ꢉ ꢊ ꢍ ꢎ ꢐ ꢑ ꢂꢀ ꢂꢁ

அ ஆ இ ஈ உ ஊ ரு ரூ லு ஏ ஐ ஓ ஔ அம் அஃ

மெய்யெழுத்துக்கள்:—

क ख ग घ ङ, च छ ज झ ञ, ट ठ ड ढ ण, त थ द



45925 H15

ꢒ ꢓ ꢔ ꢕ ꢖ ꢗ ꢘ ꢙ ꢚ ꢛ ꢜ ꢝ ꢞ ꢟ ꢠ ꢡ ꢢ ꢣ

க க² க³ க⁴ ங ச ச² ஜ ஜ² ஞ ட ட² ட³ ட⁴ ண த த² த³

ध न, प फ ब भ म, य र ल व श ष स ह ळ क्ष ज्ञ.

ꢤ ꢥ ꢦ ꢧ ꢨ ꢩ ꢪ ꢫ ꢬ ꢭ ꢮ ꢯ ꢰ ꢱ ꢲ ꢳ ꢒ꣄ꢰ ꢙ꣄ꢛ

த⁴ ந ப ப² ப³ ப⁴ ம ய ர ல வ ஶ ஷ ஸ ஹ ள க்ஷ ஜ்ஞ

உயிர்மெய்யெழுத்துக்கள்:—

क का कि की कु कू कृ कॄ कॢ के कै को कौ कं कः

ꢒ ꢒꢵ ꢒꢶ ꢒꢷ ꢒꢸ ꢒꢹ ꢒꢺ ꢒꢻ ꢒꢼ ꢒꢿ ꢒꣀ ꢒꣂ ꢒꣃ ꢒꢀ ꢒꢁ

க கா கி கீ கு கூ க்ரு க்ரூ க்லு கே கை கோ கௌ கம் கஃ

பிராகிருதத்தில் ऋ ॠ ऌ அக்ஷரங்கள் கிடையாதென்று சொல்லப்பட்டிருக்கிறது; ஆனாலும் பிராகிருத லிபியில் சம்ஸ்கிருத ஸ்லோகங்கள் எழுதநேரிடும்போது மேற்சொன்ன 3 அக்ஷரங்களும் பிராகிருத உச்சரிப்புகளுக்குள. ஒ என்ற குறில்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு எழுத்துக்களுக்கும் அடியில் இக் ‿ குறியிட்டால் க். ங் ச் போன்றமெய் உச்சரிப்பு உண்டாகும்.

வடகுஜராத்தின் எல்லையில் ஆதியில் வழங்கிவந்தபிராகிருத பாஷைக்கு 'ஸௌராஷ்ட்ரீ' யென்றும், மத்தியபாகத்தைப் படையெடுத்தவர்களுடைய பிராகிருத பாஷைக்கு 'ஸௌரஸேனீ' யென்றும் வழங்கிவந்தன. குஜராத்தி என்பது ஸௌராஷ்ட்ரீ ஸௌரஸேனீ என்னுமிவ்விரண்டு பாஷைகளும் கலந்து திரிபடைந்த ஓர் மத்திமபாஷை. என்று என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா 12-வது வால்யம் 710 ம் பக்கத்தில் சொல்லியிருப்பதால் ஸௌராஷ்ட்ரபாஷைதான்

---

The old outer prakrit of north Gujarat was known a Sourastri, while the prakrit of the midland invaders was called Souraseni. Gujarati is an intermediate language derived from a mixture of the Apabhramsa forms of Sourastri & Souraseni. (Wide Fncyclopeadia Britanica 11th Edn. vol. 12, Page 710.)

146889

குஜராதி பாஷைக்கும் பூர்வீகபாஷையாயிருக்கிறது. மேலும், * வியாகரண கர்த்தாவான 'பாணினி' மஹரிஷி, ரங்க வர்ணங்களின் உச்சரிப்பைச் சொல்லும்பொழுது ,ஸௌராஷ்ட்ரஸ்திரீன்' உச்சரிப்பைத் தமது சிக்ஷையில் உதகரித்திருக்கிறார். (பாணினீய சிக்ஷை 26-வது சுலோகம் பார்க்க) இதை நோக்க பாணினீ காலத்திலும் ஸௌராஷ்ட்ர பாஷை எவ்வளவு பிரசித்தியடைந்திருந்ததென்று நன்கு விளங்கும் *என்றார்.

---

6. சேதுராமன்'—குருவை நோக்கி "சுவாமி! சௌராஷ்ட்ர பாஷை சம்ஸ்கிருத பாஷையிலிருந்து உண்டானதானால் அவ்விரண்டிற்குமுள்ள சம்பந்தம் சில பதங்களால் உதகரித்துச் சொல்லுங்கள்; அப்பாஷையில் இயற்றப்பட்டிருக்கும் சில கிரந்தங்களையும், அவற்றை இயற்றிய மஹான்களின் பெயரையும் எனக்குத் தெரியும் பொருட்டு சொல்லுங்கள். என்றான் அதற்கு,

சிரௌதிகள்:—குழந்தாய்! நீ கேட்ட விஷயங்களைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேள்:

| संस्कृता-सौराष्ट्री | சம்ஸ்கிருதம். | சௌராஷ்ட்ரம். | தமிழ் |
|---|---|---|---|
| देवः=देव् | தேவः | தேவ் | தேவன் |
| असुरः-असुरु | அசுரः | அசுரு | அரக்கன் |
| मनुष्यः-मोनि | மனுஷ்யः | மெனிக் | மனிதன் |
| स्त्री-स्त्रि | ஸ்த்ரீ | ஸ்த்ரீ | பெண் |
| केशम्-केस् | கேசம் | கேஸ் | மயிர் |
| फालम्-कपाळ् | பாலம் | கபாள் | நெற்றி |
| कर्णम्-कान् | கர்ணம் | கான் | செவி |

---

* यथा सौराष्ट्रिका नारी तक्रँ इत्यभिभाषते ।
एवं रंगाः मयाक्तव्याः खे अराँ इव खेदया ॥ पा शि०(५९)



| | | | |
|---|---|---|---|
| नासिका-नाक् | நாசிகா | நாக் | மூக்கு |
| तुण्डम्-तोण् | துண்டம் | தோண் | வாய் |
| ओष्ठम्-होट् | ஓஷ்டம் | ஹோட் | உதடு |
| दन्तम्-दात् | தந்தம் | தாத் | பல் |
| जिह्वा-जीप् | ஜிஹ்வா | ஜீப் | நாக்கு |
| गळः-गेळ | களः | கேளோ | கழுத்து |
| हस्तः-हात् | ஹஸ்தः | ஹாத் | கை |
| कूर्परः-खोव | கூர்பரः | கொவொ | முழங்கை |
| अंगुली-अंगिळि | அங்குலீ | அங்கிளீ | விரல் |
| अंगुष्ठः-हंकुटो | அங்குஷ்டः | ஹங்குடொ | பெருவிரல் |
| हृदयं=हें | ஹ்ருதயம் | ஹேம் | நெஞ்சு |
| कटी-केड् | கடீ | கேட் | இடுப்பு |
| पादः-पायँ | பாதம் | பாய் | கால் |
| वार्ता=वत्तो | வார்த்தா | வத்தொ | சொல் |
| गृहं=घेर् | க்ருஹம் | கேர் | வீடு |
| द्वारं-दार् | த்வாரம் | தார் | வாசல் |
| भित्तिः-भीत् | பித்திः | பீத் | சுவர் |
| कपाटं-कवाड् | கபாடம் | கவாட் | கதவு |
| दुग्धं-दूत् | துக்தம் | தூத் | பால் |
| दधि-धेञ् | ததி | தெய் | தயிர் |
| गौः-गाय् | கௌः | காய் | பசு |
| हिंगु-हिंगु | ஹிங்கு | ஹிங்கு | காயம் |
| लोहं-ल्होकण् | லோகம் | லொகண் | இரும்பு |
| मृत्=मात्ति | ம்ருத் | மத்தி | மண் |
| हरिद्रा-हळत् | ஹரித்ரா | ஹளத் | மஞ்சள் |
| चूर्ण-चुन्नो | சூர்ணம் | சுன்னோ, | சுண்ணம்பு |

| | | | |
|---|---|---|---|
| तिलं-तीळ् | திலம் | தீள் | எள்ளு |
| गुडं-गुळ्ळु | குடம் | குள்ளு | வெல்லம் |
| पिष्टं-पीट् | பிஷ்டம் | பீட் | மாவு |
| तन्दुलं-तन्दु | தந்துலம் | தந்து | அரிசி |
| श्याला-सळो | ச்யாளா | சளோ | மைத்துனன் |
| स्वसुरः-सोसुरो | ஸ்வஸூர: | ஸொஸூரொ | மாமனார் |
| श्वश्रूः-ससु | ஸ்வஸ்ரூ: | சஸூ | மாமியார் |
| देवरः-देवर् | தேவர: | தெவர் | மைத்துனன் |
| ननान्दृ-नेनन्दु | நநாந்த்ரு | நெநந்து | நாத்தனாள் |
| भगिनी-भेयन् | பகினீ | பெய்ன் | தங்கை |
| सपत्नी-सोवत् | ஸபத்னீ | சொவத் | சக்களத்தி |
| भ्रातृ-भै | ப்ராதா | பை | தம்பி |
| अम्बा-अम्बो | அம்பா | அம்பொ | அம்மாள் |
| आर्यः-अय्यो | ஆர்ய: | ஐயொ | ஐயன், முதலியன. |

சௌராஷ்ட்ர பாஷையில் ஸ்ரீமத் ராமாயணம், கீர்த்தனா ரூபமாக இடையில் ஸ்லோகங்களுடன், ஸ்ரீமத் கவி வேங்கடசூரி யென்பவர் இயற்றி யிருக்கின்றார்.

இவர், பக்தியிலும் நீதியிலும் அநேக கவிகளைச்செய்திருக்கின்றார். வால்மீகிராமாயணத்தின் முதல் சர்க்கமாகிய சங்க்ஷேப ராமாயணத்தை, ஸௌராஷ்ட்ரத்தில் ஸ்லோகரூபமாகச் செய்தவரும் இவரே.

இவரது சிஷ்யராகிய கந்தாடை லக்ஷ்மணசூரி என்பவர், மைராவணசரித்திரம் சௌராஷ்ட்ரத்தில் ஸ்லோக கீர்த்தனா ரூபமாக இயற்றியிருக்கின்றார்.

கு. ரங்கதாமபாகவதர், ஜயதேவரியற்றிய சம்ஸ்க்ருத கீதகோவிந்த (அஷ்டபதீ) காவ்யத்தை, ஸௌராஷ்ட்ரத்தில் மூலகிரந்தத்திற்குச்சரியான கருத்துகளமையநிர்மித்திருக்கிறார். த. சுப்பய்யபாகவதர். இவர், யோக ஞானபாவமாக அநேக கிருதிகளைச்செய்திருக்கின்றார்.



தீர்த்தார்யர், இவர். ஓர் வரகவி. இவர் ஞானரஸமாகவும் யோகபாவமாகவும், அநேக கவிகளைப்பாடியிருக்கின்றார். இவர், தஞ்சாவூரில் வெகுகாலம் மழையின்றி க்ஷாமம் சம்பவித்திருந்தபோது, அநேக பிராமணரால் ஜபிக்கப்பட்டவருண ஜபத்திற்கும் மழை வாராமலிருந்தபொழுது, தமது தைவபக்தியால் மழை பெய்வித்தா ரென்பது கர்ணபரம்பரையான விருத்தாந்தம்.

வாலாஜா நகரம் வேங்கடரமணபாகவதர். இவர் தமது குருவான திருவாதி தியாகராஜஸ்வாமி களியற்றிய தெலுங்கு நௌகா சரித்திரத்திற் கிணங்க சம்ஸ்கிருதத்தில் ஓர் நௌகாசரித்திரமியற்றினார். இம்மஹான், இன்னம் அநேக கிருதிகளைச்செய்து தமது ஆசாரியரான தியாகராஜய்யரவர்களுடைய முத்திரை வைத்து, அவர் பாதங்களில் சமர்ப்பித்தார்.

இவருடைய பௌத்திர (பேர) ரான ராமஸ்வாமிபாகவதரும், பிரபௌத்திர (கொட்பேர) ரான ரமணபாகவதரும், சங்கீத சாஹித்யமிரண்டிலும் பண்டிதர்களாயிப்பொழுது வாலாஜாநகரில் வசிக்கின்றனர்.

வேங்கடரமணபாகவதரிடம் சிக்ஷை பெற்றவர் அநேகர் அவர்களில் கவி வேங்கடசூரியும் ஒருவராவார்.

இவருடைய குமாரர்களான ராமஸ்வாமி பாகவதர், கிருஷ்ணபாகவதர் என்பவர்களின் சிஷ்யர்களில், நூஜம் பாகவதர், சங்கிதத்தில் மஹாநிபுணராயும், அவர்பெயருக்குகந்தபடியே ராஜசிம்ஹத்தின் கர்ஜனைபோன்ற உச்சஸ்வரத்தில் பாடினால், கேட்கும் சபையோர் சித்திரத்தி லெழுதப்பட்ட பிரதிமைபோல மெய்ம்மறந்து விடும்படி பாடக்கூடியவராயும், அநேக திராவிட ஆந்திர ஸௌராஷ்ட்ரப் பிராமண சிஷ்யர்களையுடையவராயும், ஸ்ரீனிவாசபாகவதர், சங்கீதம் சாஹித்யம் ஆகிய இரண்டிலும், பண்டிதராயும், சௌராஷ்டிராந்திர சம்ஸ்கிருத பாஷைகளில் அநேககிருதிகளைச் செய்தவராயும், அநேக சிஷ்யர்களுடையவராயு மிருந்தார்கள்.

இவ்விருவர்களிடம் சிக்ஷை பெற்றவர்களில் சுப்பையபா

கவதரென்பவர் கதாகாலக்ஷேபஞ் செய்து திருவாங்கூர் ராஜ சபையில் ராஜசன்மானம் பெற்றவர்.

இவருடைய தம்பியும் முனிகுப்புபாகவதருடைய சிஷ்யருமான சாரங்கபாணி பாகவதர், சங்கீதத்திலும் கதாகாலக்ஷேபத்திலும் தேர்ந்தவராயும், கவிசெய்யக்கூடியவராயுமிருக்கிறார்; இவர் ஸௌராஷ்ட்ர பாஷையில் குசேலோபாக்யானமென்னும் பக்திரஸமான காவ்யமொன்றெழுதியுள்ளார்.

விவேகாநந்தஸ்வாமிகள்.—இம்மஹான், சந்நியாச ஆஸ்ரமத்திலிருக்கின்றார்; இவர் தமிழிலும் ஸௌராஷ்ட்ரத்திலும் தமது குருவான பிரம்ஹாநந்தஸ்வாமிகள் பேரில் அநேக ஞானரஸமான கீர்த்தனைகளைப் பாடியிருக்கின்றார்; இவரிடம் அநேகர் வேதாந்தோபதேசம் பெற்று வருகின்றார்கள்.

சச்சிதாநந்தஸ்வாமிகள் அல்லது முனிநாகேந்திர பாகவதர், இவரும் பிரம்ஹாநந்தஸ்வாமிகளிடம் சிக்ஷை பெற்றவர்; இவர் சம்ஸ்கிருதத்திலும் ஆந்திரத்திலும் நல்ல வித்பத்தியுள்ளவர்; அத்வைத சித்தாந்தத்தில் ஆழ்ந்த விசாரணை செய்த ஆத்மஞானியாராவர்; இவரிடம் அநேக சிஷ்யர்கள் வேதாந்தோபதேசம் பெற்றுவருகிறார்கள்.

கௌடு ராமலிங்க சாஸ்திரிகள்.—இவர், கு. அழகர பாகவதரிடமும் பிரம்ஹாநந்தஸ்வாமிகளிடமும் வேதாந்த விசாரணை பண்ணினவர்; இவர் சம்ஸ்கிருதத்தில் மிக்க பாண்டித்யம்பெற்றிருந்தார்; இவருக்கும் அநேகம் சிஷ்யர்களுண்டு.

தெ. கிருஷ்ணமாசாரியார்:—இவர் சமஸ்கிருதத்தில் பத்மபந்தம் சக்ரபந்தம் முதலான சித்ரகவி செய்து அநேக சம்ஸ்தான மஹாராஜாக்களிடம் ராஜசனமானம் பெற்றவர்; இவரது குமாரரான ராகவாசாரியாரும் சித்ரகவியாயும், நவரஸங்களில் கதாகாலக்ஷேபஞ் செய்பவராயுமிருக்கிறார்.

நடன கோபால நாயகிஸ்வாமிகள்;— இவர், வடபத்ராரியரிடம் உபதேசம் பெற்றவர்; இவர விஸிஷ்டாத்வைத சித்தாந்தத்தில் ஸௌராஷ்ட்ர திராவிடபாஷைகளில் அநேக கீர்த்தனைகளைப்பாடி யிருக்கின்றார்; இவர், ஒருஹடயோகியாயுமிருந்தார்; இவருக்கும் அநேகம் சிஷ்யர்களுண்டு.



அழகராசர்யர், இவர் சம்ஸ்கிருதத்திலும் ஸௌராஷ்ட்ரத்திலுந்தேர்ந்தவர்; இவர், ஸௌராஷ்ட்ரபாஷையில் 'நௌகாசரிதம்' அல்லது பஞ்சல் சரித்ரமென்னும் ஸ்ருங்கார ரஸமான காவ்யமொன்றியற்றியுள்ளார். சுந்தரார்யர்:—இவர் யோகபாவத்தையனுசரித்து ஸௌராஷ்ட்ர பாஷையில் அநேக கவி பாடியிருக்கின்றார்.

தோ. என். ராமராவ்;—இவர் துவைதமதத்தில் பற்றுள்ளவர்; இவர், ஸௌராஷ்ட்ர பாஷையில் மிக்க அபிமானம் வைத்துத் தமது ஆயுள் முழுமையும் உழைத்தவர்; இவர் ஸௌராஷ்ட்ர லிபியில் சில பாட புஸ்தகங்களும் (School Readers) நீதிசம்பு என்ற நீதிசதகமும், லகு கௌமுதியின் வியாக்கியான ரூபமான வியாகரணமும், அமரகோசமென்ற நிகண்டும் இயற்றியிருக்கின்றார்.

இவர்களுக்கெல்லாம் ஸௌராஷ்ட்ர உலகம் மிக்க கடமைப்பட்டிருக்கிறது. இன்னம் அநேக பண்டிதர்களுமிருக்கின்றார்கள்; நீ கேட்டதற்கு என் ஞாபகத்தில் தோன்றிய சிலரை மட்டும் இங்கு குறிப்பிட்டேன்; இன்னம் இவ்விஷயமாக எதைக் கேட்கவேண்டுமோ அதைக்கேள் சொல்லுகிறேன்" என்றார்.

---

7. சேதுராமன்:—"ஸ்வாமி! தாங்கள் சொல்லிவந்த விஷயங்களால், என் மனம் மிகவும் சந்தோஷமடைந்தது; இன்னம் ஓர் விஷயம் மட்டும் கேட்கயிச்சையிருக்கிறது; அதாவது, இந்த ஸௌராஷ்ட்ரப்பிராம்ஹணர் இனி செய்யவேண்டிய காரியங்களெவை? இவர்கள், ஸௌராஷ்ட்ர தேசத்திலிருக்கும்போது எந்த ஆசாரியருடைய மடத்தின் சிஷ்யர்களாயிருந்தார்கள்? இப்பொழுது எவ்வாறிருக்கிறார்கள்? என்பதே" என்று கேட்க,

சிரௌதிகள்:—"சேதுராமா! நீ கேட்கின்ற கேள்வியினாலேயே உன் தர்ப்பையின் நுனிபோன்ற கூர்மையான புத்தியும், பொதுவிஷயஞானப்ரீதியும் நன்றாய் விளங்குகிறது; சொல்லுகிறேன் கேள்; ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர், இதுவரை ராஜபாஷை தேசபாஷை ஸ்வபாஷை மாத்ருபாஷை

களாகிய இங்கிலீஷ் தமிழ் ஸௌராஷ்ட்ரம் சம்ஸ்கிருத பாஷைகளைக்கற்பிக்க, வித்யாசாலைகளை யேற்படுத்தி, மாணாக்கருக்கு வேண்டிய சௌகரியங்களுடன் ஏழைக்குழந்தைகளுக்குப் புஸ்தகங்களும் அன்னமுமளித்து வித்யாதானஞ்செய்துவருகின்றார்கள்; இன்னம் வைத்தியசாலை வைத்து தர்மசிகிச்சை செய்தும், புஸ்தகசாலை யேற்படுத்தி புஸ்தகங்களும் சமாசாரப்பத்திரிகைகளும் பொதுஜனங்கள் வாசிக்கும்படி செய்தும் வருகின்றார்கள்.

இவ்விஷயத்தில் உழைக்கும் பிரமுகர்களுக்கு, பகவான் சர்வாபீஷ்டசித்தியும் தீர்க்காயுளுங்கொடுத்து ரக்ஷிப்பாராக.

மேற்சொன்ன ஸ்தாபனங்கள் பெரும்பாலும் மதுரை வாசிகள்தான் செய்திருக்கின்றார்கள்.

கும்பகோணம் தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி பாளையங்கோட்டை சென்னைபோன்ற பட்டணங்களில் வசிப்போரும் மதுரைவாசிகளைப்போல இன்னம் கல்விசாலை வைத்யசாலை புஸ்தகசாலை அன்னதான சத்திரம் முதலியவைகளை யேற்படுத்தவேண்டும்.

எல்லாவிடங்களிலுமுள்ள ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர் வைதிக சம்மந்தமான வேதாத்யயனம் சந்தியாவந்தனம் முதலான ஆன்ஹிகவிதிகள் உபநிஷத்துக்கள் புரோஹிதப் பிரயோகங்கள் ஆகமசாஸ்திரங்கள் நியாயம் தர்க்கம் வைசேஷிகம் ஜோதிஷம் சில்பம் வைத்யம் வியாகரணம் முதலானவைகளை வித்யார்த்திகளுக்கு போதிக்கும் பொருட்டு உயர்தர வித்யாஸ்தாபனங்களை யேற்படுத்தவேண்டும்.

எவர்களுக்கு எந்த வித்யையில் தேர்ச்சியுண்டோ அவர்களுக்கு அதை யின்னம் விர்த்தி செய்யவும், மாணாக்கருக்கு போதிக்கவுஞ் செய்யும்படி தனிகர் தங்களாலியன்ற அளவு மூலதனத்தைச் சேர்த்து வித்வான்களுக்கு உபகாரச் சம்பளங் கொடுக்கவேண்டும்.

* “சத்சங்கத்தில் பிரியமும், பிறருடைய ஸ்வல்ப நற்குணத்திலும் சந்தோஷமும், குருவினிடத்தில் வணக்கமும்,

* वाञ्छा सज्जनसंगमे परगुणे प्रीतिः गुरौ नम्रता, विद्यायां व्यसनं



சாஸ்திரங்களில் சிந்தனையும், தன் மனையாளிடம் சேர்க்கையும், லோகாபவாதத்தில் பயமும், பகவானிடத்தில் பக்தியும், மனதையடக்குவதில் சக்தியும், துஷ்டருறவில் ஒழிவும் ஆகிய யிந்த உத்தம குணங்கள் எவர்களிடம் குடிகொண்டிருக்கின்றனவோ அம்மஹான்களுக்கு நான் நமஸ்காரஞ்செய்கிறேன்” என்னும் பரத்ருஹரி (1-51) புகழ்ந்த (மேற்சொன்ன) குணங்கள் ஒவ்வொரு புருஷர்களிடத்திலும் † “புருஷரிடத்தில் பக்தியும், வேலையாளரிடத்தில் தயையும், மாமியார் மாமனாரிடத்தில் வணக்கமும், மைத்துனர் முதலான பந்துக்களிடத்தில் ப்ரீதியும், பெரியோ(புரோஹிதர் முதலானோ)ரிடத்தில் மரியாதையும்” அபகாரஞ் செய்தவர்களிடத்தும் பொறுமையும், சக்களத்திகளிடத்தில் என் புருஷருக்கு என்னைப்போன்ற சமமான ப்ரீதிக்குப் பாத்திரமானவளென்று பிரியமான தோழித்தன்மையும், ஆகிய யிக்குணங்கள் குலஸ்திரீகளான பதிவிரதைகளுக்குரியவை” யென்னும் சுசதீ லக்ஷணங்கள் (சுபாஷிதரத்னபாண்டாகாரம்) ஒவ்வொரு ஸ்திரீகளிடத்திலும் விளங்கவேண்டும்.

‡ “சகலதர்மங்களிலும் ஸ்ருதிஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறபடி நடந்துகொள்ளுகிற ஆசாரமே மேலானது; ஆகையால் தனக்கு மேலான சுகத்தை நாடுகிற பிராம்ஹணன், இந்த ஆசாரமான தர்மத்தில் எப்பொழுதும் அநுஷ்டானமுள்ளவனா யிருக்கவேண்டும்” “பிராம்ஹணன், ஆசாரத்தை விட்டுவிட்டால் அவன் எவ்வளவு படித்தறிந்த வித்வானாயிருந்தாலும் அவன் வேதத்திற் சொல்லிய (பிரா

स्वयोषिति रतिर्लोकापवादाद्भयम् । भक्तिश्चक्रिणि शक्तिरात्मदमने संसर्गमुक्तिः खलैः, एते येषु वसंति निर्मलगुणाः तेभ्यो महद्भ्यो नमः ॥

† भक्तिः प्रेयसि संश्रितेषु करुणा श्वश्रूषु नम्रं शिरः, प्रीतिर्यातृषु गौरवं गुरुजने क्षान्तिः कृतागस्यपि । अम्लाना कुलयोषितां व्रतविधिः सोयं विधेयः पुनः, मद्भर्तुर्दयिता इति प्रियसखीबुद्धिः सपत्निष्वपि ॥

‡ आचारः परमो धर्मः श्रुत्युक्तः स्मार्त एव च । तस्मादस्मिन् सदा युक्तो नित्यं स्यादात्मवान् द्विजः ॥ “आचराद्विच्युतो विप्रो न वेदफ-

ம்ஹண்யத்திற்கு ஏற்பட்டிருக்கிற சாஸ்வதமான) பலன் அடையமாட்டான்; ஆசாரத்துடன் கூடின பிராம்ஹணனோ வென்றால் வேதத்திற் சொல்லிய சம்பூரண பலனையடைவான்'' என்று மனுஸ்மிருதி 1-வது அத்யாயம் 108, 109-வது சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஆசார பூர்ணாளாய் விளங்கவேண்டும். அப்படி விளங்கினால், †,,எந்தப்பிராம்ஹணனுடைய முகத்தினின்று உச்சரிக்கப்படுகின்ற 'ஸ்வாஹா' 'ஸ்வதா' என்ற பதங்கள் கடைசியிலுள்ள மந்திரங்களினால் கொடுக்கப்படுகிற ஹவ்ய கவ்ய (ஹோமாக்கினியில் விடப்படுகிற நெய் அன்னம் முதலியன ஹவ்யம், பிண்டம் முதலியன கவ்யம்)ங்களை தேவர்களும் பிதுர்க்களும் புஜித்து ஜீவிக்கின்றார்களோ! அந்தப்பிராம்ஹணனைக்காட்டிலும் உலகத்தில் மேலான பிராணி எது இருக்கிறது?'' (எதுவுமில்லையென்பது கருத்து) என்ற (மனு 1-95.) சுலோகத்தின் ஸ்தோத்திரத்திற்குரியவர்களாய் விளங்குவார்கள்.

ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர்கள், ஸௌராஷ்ட்ர தேசத்திலிருக்கும்போது, சங்கராசாரியஸ்வாமிகளின் பிரதமசிஷ்யராகிய 'பத்மபாதாசாரியாள்' ஆதீனமாகிய துவாரகா மடத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள்.

"*ஸிந்துதேசம், ஸௌவீரதேசம், ஸௌராஷ்ட்ரதேசம் மஹாராஷ்ட்ர தேசம் இவைகளுக்கு நடுவிலுள்ள மேற்கு தேசங்களும் துவாரகாமடத்தைக் சேர்ந்தன". (கூர்மபுராணம் 30 அத்: 116. சு.)

†"துவாரகை க்ஷேத்ரமானது, சித்தேஸ்வர தெய்வமும், பத்ரகாளீ சக்தியும், பத்மபாத ஆசார்யரும், கோமதீ

---

लमश्नुते। आचारेण तु संयुक्तः संपूर्णफलमश्नुते ॥ †यस्यास्येन सदाश्नन्ति हव्यानि त्रिदिवौकसः। कव्यानि चैव पितरः किम्भूतमधिकं ततः

*सिन्धुसौवीरसौराष्ट्रमहाराष्ट्रास्तथान्तराः।
देशाः पश्चिमदिक्स्था ये द्वारकामठभागिनः ॥ (६४)

†द्वारकाख्यं हि क्षेत्रं स्यात्सिद्धेश्वरदैवतं स्मृतम्।



தீர்த்தமும், சாமவேதமும், ஜீவாத்ம பரமாத்ம ஐக்யபோதமான 'தத்வமஸி' யென்னும் மஹாவாக்யமும், சாமவேத அத்யயனமுமான தர்மத்தை யாசரிக்கும் தன்மையானது. (ஷை ஷை 95-97.) ஸ்லோகங்களின்படி மேற்சொன்ன தர்மங்கள் ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர்களுக்குரியவை. *

ஆனால் இப்பொழுது, தென்னிந்தியாவில் வசிக்கும் ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர் ஸ்மார்த்த வைஷ்ணவ மத்துவ மென்ற திரிமதங்களையுமவலம்பித்தவர்களா யிருக்கின்றார்கள்.

ஜனங்கள், விபூதி திருமண் முதலிய முத்ராதாரணங்களை இன்ன காலத்தில் தரிக்க ஆரம்பித்தார்கள் என்பதை சரியாயறியப் போதுமான ஆதாரங்கள் ஒன்றுங் கிடைக்காமையால் முத்ராதாரண அனுஷ்டானங்கள் அநாதியானவை யென்று ஸ்தாபிக்க ஹேதுவாகிறது.

உலகத்தில் ஜனசமூகம் பெருகப்பெருக மதபேதங்களும் விரியும். இந்தமூன்று மதங்களில் முதன்மையானது எது வென்றுநிச்சயிக்க அந்தந்த மதத்திற்கு அஸ்திவாரம் பலமாயிருக்கிற படியால், ஒன்றைத்தாழ்த்தி மற்றொன்றை உயர்த்தமுடியாது.

இம்மூன்று மதங்களும் வேதத்தை ஆதாரமாகவுள்ளவை ஸௌராஷ்ட்ரப்பிராம்ஹணர், இந்தப்பிராந்தங்களுக்கு

---

शक्तिस्तत्र भद्रकाली ह्याचार्यः पद्मपादकः ॥ विख्यातं गोमतीतीर्थं सामवेदश्च तद्गतम्। जीवात्मपरमात्मैक्यबोधो यत्र भविष्यति ॥ विख्यातं तन्महावाक्यं वाक्यं तत्त्वमसीति च। सामवेदप्रपाठी च तत्र धर्मं समाचरेत् ॥ (६७)

* இந்த துவாரகை மடாதிபதிகளாகிய பத்மபாதாசாரியாள் பூர்வத்தில் யவனர் மிலேச்சர் முதலானவர்களால் உபத்திரவிக்கப்பட்டு துவாரகா மடத்தை விட்டு தக்ஷிண தேசத்தில் ஸ்ருங்கேரிக்குச் சமீபத்தில் மூலபாகலமென்றகிராமத்தில் மடத்தை ஸ்தாபித்தார்கள். அவாளுடைய சிஷ்யபரம்பரையில் வந்த யதிவர்யரான ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான ?சதாநந்த தீர்த்தர், என்ற ஆசார்யர் இப்பொழுது இருக்கிறார் என்று பிரா, மா, 609ம்பக்கத்து டிப்பணியில் சொல்லியிருக்கிறது இப்புத்தகம் கி, பி, 1909ம் [illegible]த்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

வந்தபிற்பாடு வைஷ்ணவ தாதாசாரியார் முதலியவர்களுடைய அனுசரணையினால் வைஷ்ணவம் முதலானமத முத்ராதாரணம் பண்ணிவருகின்றனர்.

மதமென்பது:— மனிதர்களுக்கு ஸ்ரேயஸ்ஸைக் கொடுக்கக்கூடியமார்க்கத்தை முக்காலத்தையு மறிந்தஞானிகளால் ஏற்படுத்தப்பட்டதும், அவர்கள் வழியில் வந்த ஆசார்யர்களால் உபதேசிக்கப் பெற்றதுமான கொள்கையாகும். எவர்கள் எந்த மதத்தில் பிரவர்த்தித்திருக்கின்றார்களோ" அந்த மதம் அவர்களுக்கு மேலானது.'

†"என் பக்தனா (வைஷ்ணவனா)யிருந்து சங்கரனை தூஷிப்பவனும், சிவபக்தனானஸ்மார்த்த (சைவ)னாயிருந்து என்னை (விஷ்ணுவை) தூஷிப்பவனுமாகிய யிருவரும் சூர்யசந்திராளிருக்கிற பர்யந்தம் நரகத்தையடைவார்கள்" என்று சிவபுராணத்தில் ஸ்ரீ மஹா விஷ்ணு சொல்லியிருக்கின்றார்.

ஆகையால் ஒருமதத்தினர் மற்றொரு மதத்தினரை தூஷிக்கக்கூடாது.

இம்மூன்று மதஸ்தர்களும் அனுஷ்டிக்கிற நித்யகர்மங்களில் முக்கியமான காயத்ரீ மந்த்ரத்தின் அர்த்தம் இரண்டாவதற்ற பிரம்ஹத்தையே பிரதிபாதிக்கின்றது. எப்படியெனில், ‡'தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ நஃப்ரசோதயாத்' என்பதில் யஃ=ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரமாகிய முத்தொழிலும் எந்தப்பரமாத்மாவிடமிருந்து தோற்றமாத்ரமாக வுண்டாகின்றனவோ! அந்த ஸவிதா என்ற பகவான், நஃ=நம்முடைய; தியஃ=கர்மதர்மவிஷயமாகப் பிரவர்த்திக்கும் புத்தி முதலான அந்தஃகரணங்களை. ப்ரசோதயாத்=ஏவுகின்ற, தத் (தஸ்ய)=வேதங்களில் பிரஸி

†मद्भक्तो शंकरद्वेषी मद्द्वेषी शंकरप्रियः ।
तावुभौ नरकं यात यावच्चन्द्रदिवाकरौ ॥ (६८)

‡ ॐ तत्सवितुर्वरेण्यं भर्गो देवस्य धीमहि धियो यो नः प्रचोदयात् ।
यः सविता देवः नोऽस्माकं धियः कर्माणि धर्मादिविषया वा बुद्धीः प्रचोदयात्प्रेरयेत् तत्तस्य सर्वासु श्रुतिषु प्रसिद्धस्य द्योतमानस्य सवितुः



த்தமாகப் பிரகாசிக்கின்ற அந்த ஸவிதுஃ தேவஸ்ய=ஸர்வாந்தர்யாமித்தன்மையினால் எல்லாரையும் ஏவுகின்றவரும் ஜகத்ஸ்ரஷ்டாவுமான பரமேஸ்வரனுடைய ஆத்ம பூதமான, வரேண்யம்= எல்லாராலும் உபாஸிக்கப்படுவதாயும், அறியப்படுவதாயும் த்யானம்பண்ணப்படுவதாயுமான மேலான, பர்கஃ=அவித்யை யென்ன அதன் காரியமான [illegible] [illegible]திகளென்ன அவற்றை நாசஞ் செய்கின்ற பர்கமென்ற ஸ்வயஞ்ஜோதியும் பரமாத்ம ஸம்மந்தமுமான தேஜஸ்ஸை, தீமஹி= ஸோஹமென்று தியானம் பண்ணக்கடவோம்." என்று ஆஹ்நிக சந்திரிகையில் காயத்ரீ ஜபத்திற்கு சாயனாசார்யர் பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறது.

ஆகையால், சௌராஷ்ட்ரப்பிராம்ஹணர்கள் திரிமதங்களையும் அனுஷ்டிப்பது வேதவிஹிதமானதுதான். ஆனால் திராவிடாந்திராதி பிராம்ஹணர்களில் பெண் கொடுத்தல் வாங்கல் முதலிய பரஸ்பர ஸம்மந்தம் திரிமதத்தினருக்கும் வேறுபட்டிருக்கிற அவாந்தர பேதம் ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர்களுக்குள் கிடையாது.

அது ஜனசமூகப்பெருக்கைப் பொறுத்தது. ஒரே வர்ணத்தாரில் உட்பிரிவினர் பரஸ்பர ஸம்பந்தஞ் செய்து கொள்ளுதல் ஆழ்ந்த அபிமானத்தையும், ஒற்றுமையையும், வெவ்வேறாகப் பிரிந்து போதல், மேலெழுந்த அபிமானத்தையும் வேற்றுமையையுங் காட்டுமென்று சிருங்கேரிமடம் அபிநவ நிருஸிம்ஹபாரதி ஸ்வாமிகள், நமது திராவிடப் பிராம்ஹணர்களில் வடமாள் அஷ்டஸஹஸ்ரகாள் முதலிய பிராம்ஹணர்களை பரஸ்பர ஸம்பந்தஞ் செய்து கொள்ளுவது நலமென்று திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள்.

அதனால் ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர் அனுஷ்டிக்கிற ஸ்மார்த்த வைஷ்ணவ மத்துவமத பரஸ்பர ஸம்பந்தமும்

सर्वान्तर्यामितया प्रेरकस्य जगत्स्रष्टुः परमेश्वरस्यात्मभूतं वरेण्यं सर्वैरुपास्यतया ज्ञेयतया च संभजनीयं भर्गः अविद्यातत्कार्ययोर्भर्जनाद्भर्गः स्वयंज्योतिः परमात्मकं तेजः धीमहि तद्योऽहं सोऽसौ योऽसौ सोऽहमिति वयं ध्यायेम । आ०, च०, पृ० २३. (६९)

சமூக முன்னேற்றத்திற்கு அநுகூலமானதுதான்.

*"மனுஷ்யர்களுக்கு தர்மம் மூலம்; அந்த தர்மமானது ஆசார்யனையாசிரயித்தது; அதனால் ஆசார்யரென்ற நல்ல இரத்தினத்தினொளியாகிய சாசனம் பெறுவது எல்லா[illegible]தும் மேலான [illegible] ப்பட்டதப்பட்ட தர்ம மார்க்கத்தையனுசரிக்கும் மனிதர், சகல பாபங்களிலிருந்து விடுபட்டு அஸ்வமேதம் முதலிய யாகங்களைச் செய்த புண்ய புருஷர் அடையும் உத்தமகதியடைவர்" என்னும் ஷை புராணம் ஷை அத். 141, 142-வது சுலோகங்களின்படி ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர் உத்தம ஆசாரியரைக்கை விடாது அவராஜ்ஞைப்படி நடந்தும், †"பிராம்ஹணர்களில் வித்வான்மேல்; வித்வான்களிலும் விலக்கவேண்டியவைகளையும் செய்யவேண்டியவைகளையும் செவ்வையாயறிந்தவர்மேல்; அப்படியறிந்தவர்களிலும் விலக்குவனவற்றை விலக்கிச் செய்வனவற்றைச் செய்பவர்மேல்; அவர்களிலும் பிராம்ஹத்தையறிந்த ஞானிகள் மேல்" என்னும் மனுஸ்மிருதி 1வது அத்யாயம் 97-வது ஸ்லோகத்தின்படி பிரம்மஞானிகளாயுமிருந்து பரமோத்தமகதியடையக்கடவரென்று நான் சர்வாந்தர்யாமியான பகவானை ஸ்மரிக்கிறேன்." என்று ஸ்ரௌதிகள் சொல்லிமுடித்தார்.

---

## உத்தர பீடிகை.

சேதுராமன்:—"ஸ்வாமி! இன்று நான் தேவரீர் திருவாக்கினின்று ஸௌராஷ்ட்ரப் பிராம்ஹணர்களைக் குறித்த சகல விஷயங்களுங் கேட்டு பரமசந்தோஷபரிதனானேன்; தேவரீர் சொன்ன வாக்கியங்கள் யாவும் ஸ்ருதி

---

* धर्मो मूलं मनुष्याणां स चाचार्यावलम्बनः । तस्मादाचार्यसुमणेः शासनं सर्वतोधिकम् ॥ आचार्याक्षिप्तदण्डास्तु कृत्वा पापानि मानवाः । निर्मलाः स्वर्गमायान्ति सन्तः सुकृतिनो यथा ॥ (७१)

†ब्राह्मणेषु च विद्वांसः विद्वत्सु कृतबुद्धयः ।
कृतबुद्धिषु कर्तारः कर्तृषु ब्रह्मवेदिनः ॥ (७२)



ஸ்மிருதி இதிஹாச புராணங்களிலிருந்து உதகரிக்கப்பட்டவையாதலால்; இது ஒரு புண்ணிய சரித்திரமாக நினைக்கிறேன்; மேலும், எவனுடைய நாமாவையுச்சரித்தமாத்திரத்தில் பிராணிகள் ஜன்மசம்சாரபந்தத்திலிருந்து விடுபட்டு மேலான கதியையடைவார்களோ! அந்தப் பரமாத்மாவான விஷ்ணுவின் பிரஸ்தாபமான கிரிநாராயணப்பிராம்ஹண விருத்தாந்தம் இதன் மத்தியில் நக்ஷத்திரங்களினிடையில் சந்திரன் போல பிரகாசிக்கிறது.

ஆகையால் இதை வாசிப்போரும் கேட்போரும் மேலான சுகங்களை யடைவார்களென்று சத்தியமாய் நம்புகிறேன்; என் மீது கருணைகூர்ந்து இவ்விஷயங்களைத் திருவாய்மலர்ந்தருளிய தேவரீருக்குத் திரிகரணங்களாலும் வணங்குகிறேனென்றுசேதுராமன் தன் ஆசிரியரான சோமசுந்தர ஸ்ரௌதிகளை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான்.

ஸ்ரௌதிகளும் தன் மாணாக்கனையாசீர்வதித்து எழுந்திருக்கச் சொல்லி சேதுராமனை நோக்கிக் "குழந்தாய்! நமமுன்னோராகிய ஆர்யர், பிரதிதினங்களிலும் * "சகல ஜனங்களுக்கும் க்ஷேமமுண்டாகட்டும். மன்னர், செங்கோன்மையினால் பூமியைப் பாதுகாக்கட்டும். மறையோர் முதல் பசுவீறாகவுள்ள பிராணிகளனைத்தும், அப்படியே எல்லாவுலகங்களும் சுபமாகவும் சுகமாகவும் வாழட்டும். மேகம் காலமழை பெய்க. பிருதிவி, பயிர்ப்பச்சைகள் நிறைந்தோங்க. நாடு, வறுமையின்றி வாழ்க. அந்தணர், அச்சமின்றி தங்கள் சத்கர்மங்களைச்செய்க" என்று ஆசிகூறி பொதுக்ஷேமத்தைக் கோரி வந்தவர். அவர்களின் சிஷ்டாசாரத்தையனுஷ்டிக்கும் நாம், †ஆகாயத்தினின்று பெய்த மழை

---

* स्वस्तिः प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥
काले वर्षतु पर्जन्यः पृथिवी सस्यशालिनी ।
देशोऽयं क्षोभरहितः ब्राह्मणाः सन्तु निर्भयाः ॥ (७३)
†आकाशात्पतितं तोयं यथा गच्छति सागरम् ।

நீர்களெல்லாம் (பலநதிகளாய்) சமுத்திரமடைவதுபோல நாநாதெய்வங்களைக்குறித்து செய்யப்படும் நமஸ்காரங்களெல்லாம் கேசவனென்னும் எங்கும் நிறைந்து சர்வப்பிராணிகளின் ஹ்ருதயத்தில் குடிகொண்டிருக்கின்ற ஒரே பரமாத்மாவையடைகின்றன.” என்ற சர்வமத சமரஸக்கொள்கையுள்ளவரன்றோ! அந்தவம்சத்தினோரான ஸௌராஷ்ட்ரரும் நம்மில் சகோதரராவர். அதனால் நாமனைவரும், “ மூலவர்க்கம் தாதுவர்க்கம் முதலிய பலன்களுடன் கூடிய கற்பகக்கொடியாகும் பூதேவிமாதாவையும், ஜனங்களை சட்டங்களினால் நல்வழியிலொழுகச் செய்தலாலும், தீயவர் தொந்தரவு நீக்கி ரக்ஷித்தலாலும், அன்னபானாதிகளையுதவிப்போஷித்தலாலும், பிரஜைகளுக்குப் பிதா போன்ற நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தியவர்களையும், ‘பிதராவபிவாதயே’ (பிதரௌ— அன்னை தந்தைகளை, அபிவாதயே—வணங்குகிறேன்) என்று எக்காலமும் வணங்கி எல்லா தேசத்தாரிடமும், எல்லா மதஸ்தரிடமும் சகோதரபாவமாக ஒற்றுமையுடனும், ராஜ்விஸ்வாஸத்துடனும் வாழக்கடவோ” மென்று சேதுராமனுக்கு கிரஹத்திற்குப் போக உத்தரவு கொடுத்துத் தாமும் எழுந்து மாத்யாஹ்னிகம் பண்ணுவதற்குப் புறப்பட்டார்.

சர்வே ஜனாஃ சுகினோபவந்து.

ஓம் தத் சத் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணமஸ்து.

सर्वदेवनमस्कारः केशवं प्रति गच्छति ॥ [७४]

संजीवनं मैथिलकन्यकायाः सौन्दर्यसर्वस्वमहानिधानम् ।
शशांकपंकेरुहयोस्समानं रामस्य वन्दे रमणीयमास्यम् ॥ (७५)

सौराष्ट्रचरितं पुण्यं श्रुतिस्मृत्यर्थसंयुतम् ।
द्राविड्या भाषया बद्धं जीयादाचन्द्रतारकम् ॥ (७६)

भारद्वाजान्वये जातसीतारामार्यसूनुना ।
ग्रथितं वेंकट्रामेण सौराष्ट्रचरितं मया ॥ (७७)

ஸ்ரீமத்ஸௌராஷ்ட்ர சரித்ர சங்கிரகம்,

முற்றிற்று.

ஒவ்வொருவரும் காலையில் எழுந்தவுடன்
தியானம் பண்ணவேண்டிய

## பகவத் ப்ராத: ஸ்மரணம்.

ப்ராத: ஸ்மராமி பணிராஜதநௌ சயாநம்
நாகாமராஸுரநராதிஜகந்நிதாநம்
வேதை: ஸஹாகமகணைருபகீயமாநம்
காந்தாரகேதநவதாம் பரமம் நிதாநம் 1

ப்ராதர்பஜாமி பவஸாகரவாரிபாரம்
தேவர்ஷிஸித்தநிவஹைர்விஹிதோபஹாரம்
ஸந்த்ருப்ததாநவகதம்பமதாபஹாரம்
ஸௌந்தர்யராசிஜலராசிஸுதாவிஹாரம் 2

ப்ராதர்நமாமி சரதம்பரகாந்திகாந்தம்
பாதாரவிந்தமகரந்தஜுஷாம் பவாந்தம்
நாநாவதாரஹ்ருதபூமிபரம் க்ருதாந்தம்
பாதோஜகம்புரதபாதகரம் ப்ரசாந்தம் 3

ஶ்லோகத்ரயமிதம் புண்யம் ப்ரஹ்மாநந்தேந கீர்திதம்
ய: படேத் ப்ராதருத்தாய ஸர்வபாபை: ப்ரமுச்யதே 4

இதி ஸ்ரீபரமஹம்ஸ ஸ்வாமி ப்ரஹ்மாநந்தவிரசிதம்
ஸ்ரீபகவத் ப்ராத: ஸ்மரணம் ஸம்பூர்ணம்.

भगवत्प्रातः स्मरणम् ।

प्रातः स्मरामि फणिराजतनौ शयानं नागामरासुरनरादिजगन्निदानम् ।
वेदैः सहागमगणैरुपगीयमानं कांतारकेतनवतां परमं निधानम् ॥ १

प्रातर्भजामि भवसागरवारिपारं देवर्षिसिद्धनिवहैर्विहितोपहारम् ।
संदृप्तदानवकदम्बमदापहारं सौन्दर्यराशिजलराशिसुताविहारम् ॥ २

प्रातर्नमामि शरदम्बरकांतिकांतं पादारविंदमकरन्दजुषां भवांतम् ।
नानावतारहृतभूमिभरं कृतान्तं पाथोजकम्बुरथपादकरं प्रशान्तम् ॥ ३

श्लोकत्रयमिदं पुण्यं ब्रह्मानन्देन कीर्तितम् ।
यः पठेत् प्रातरुत्थाय सर्वपापैः प्रमुच्यते ॥ ४

इति श्रीपरमहंसस्वामिब्रह्मानन्दविरचितं
श्रीभगवत्प्रातः स्मरणम् संपूर्णम् ॥

## இந்நூலிற் கூறப்பட்டுள்ள ஆதாரகிரந்தங்களும் அவற்றின் சங்கேதப் பெயர்களும் அடியில் எழுதப்படுகின்றன.

| | |
|---|---|
| அமரகோசம். | அமரம் |
| ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரம் | ஆ. த. ஸூ. |
| ஆஹ்நிகசந்திரிகா. | ஆ. ச. |
| இந்துதேசசரித்திரம். | இ. தே. ச. |
| கூர்மபுராணம். | கூ. பு. |
| தாயுமானவர் பாடல் | தா. பா. |
| நன்னெறி. | நன். |
| பகவத்கீதை. | ப. கீ. |
| பத்மபுராணம். | ப. பு. |
| பர்த்ருஹரி. | பர். ஹ. |
| பாகவதம். | பாக. |
| பாரதம். | பார. |
| பாணினீய சிக்ஷை. | பா. சி. |
| பிரபாவக சரித்ரம் | பி. ச. |
| பிராமணோத்பத்திமார்த்தாண்டம். | பிரா. மா. |
| பிராசீனலேகமாலை. | பி லே. மா |
| பிராகிருதமஞ்சரீ. | பிரா. ம. |
| மநுஸ்மிருதி | ம. ஸ். |
| மாககாவ்யம் | மாகம். |
| யாஜ்ஞவல்க்யஸ்மிருதி. | யா. ஸ். |
| வால்மீகிராமாயணம். | வா. ரா. |
| வஜ்ரஸூசிக உபநிஷத். | வ. ஸூ. உ. |
| வசிஷ்டஸ்மிருதி. | வ. ஸ். |
| விநாயகபுராணம். | வி. பு. |
| வியாஸஸ்மிருதி. | வ்யா. ஸ். |
| சிவபுராணம். | சி. பு. |
| ஹரிவம்சம். | ஹ. வ. |
| ஹிரண்யகேசீய பிரம்ஹகர்மசமுச்சயம் | ஹி. கே. பி. க. ச. |

அத்யாயம், அத். ஸ்லோகம், ஸ். சர்க்கம், சர். பர்வம், பர். காண்டம், கா.

| | |
|---|---|
| Cunninghams Geography. | C. G. |



| | |
|---|---|
| Encyclopeadia Brittanica. | E. B. |
| Traveller's Companion | T C. |
| Singer's Guide | S. G. |

---

## பிழைதிருத்தம்.

| பிழை. | திருத்தம். | பக்கம். | வரி. |
|---|---|---|---|
| ஸௌஷ்ட்ர | ஸ்ளராஷ்ட்ர | 2 | 1 |
| ஸௌத்ஷ்ட்ர | ஸௌராஷ்ட்ர | 3 | 12 |
| சொலலையவாது | சொல்லையாவது | 5 | 29 |
| ஸௌராஷ்ட்ரம் வலிபி | வலபீ, வலபி | 6 | 11, 17 |
| இப்போழுது | இப்பொழுது | 9 | 4 |
| ரோஹிஙியிடம் | ரோஹிணியிடம் | 11 | 8 |
| தக்ஷப்பிரஜாபதி | தக்ஷப்பிரஜாபதி | 11 | 21 |
| வனபர்வம் वन | சல்யபர்வம் शल्य | 12 | 4, 2 |
| தக்ஷிணைகளுடன், சக்ஈ. | தக்ஷிணைகளுடன், கச்ஈ. | 12,15 | 11,5. |
| கட்டங்களால், [துதி | கட்டடங்களால் | 17 | 21 |
| ராயதேவருடைய, செ | ராயருடைய, செலுத்தி | 19 | 7, 18 |
| பிரிடிஷ் ராஜங்கம் | பிரிட்டிஷ் ராஜாங்கம் | 20 | 13 |
| பிராஹ்மனர் &c. | பிராஹ்மணர் | 21 | 7 |
| ஜீவன் | ஜீவனம் | 25 | 17 |
| பூர்க்த மெழுகல் | பூர்த்த மொள்ளல் | 26,28. | 19,15. |
| வஸ்த்ராபத | வஸ்த்ராபத | 30 | 20 |
| வஹாவ்ரதத்தை | மஹாவ்ரதத்தை | 34 | 24 |
| சூத்ரதிரர் போது | சூத்ரர் போது | 36,42. | 22,26. |
| சப்ரிஷிமண்டலம்:— | சப்தரிஷிமண்டலம்:— | 43 | 11 |
| பூமியின், 9. | பூமியின், 6 | ,, | ,, 22 |
| வஸிஸ்டர் | வஸிஷ்டர் | 43 | 22 |
| அரிதாபிருப்பார் | அரிதாயிருப்பார் | 45 | 6 |
| முதயியன | முதலியன | ,, | 19 |
| மஹாராஷ்ட்ராதி | மஹாராஷ்ட்ராதி | 46 | 3 |
| மைதுல | மைதில | 47 | 28 |
| சிரார்த்தங்கள் [ஸ் | சிராத்தங்கள் | 47 | 15 |
| அவெரெஸ், அவெரியா | அவரெஸ் அவரியாஸ் | 50 | 6 |
| ளராஷ்ட்ரீ | ஸௌராஷ்ட்ரீ | 51 | 22 |

| | | | |
|---|---|---|---|
| உதகரித்திருக்கிருர் | உதாகரித்திருக்கிருர் | 5 | 5 |
| யிருக்கிறது, ஸ்தியிரீன் | யிருக்கிறது, ஸ்திரீயின் | 52 | 2, 5 |
| சங்ஸ்கிருத பாதம் | சம்ஸ்க்ருத பாதஃ | ,, 53. | 11,14. |
| இவர்ர். வகிக்கின்றனர் | இவர். வசிக்கின்றனர் | 55 | 9, 19 |
| உயர்தா | உயர்தர [அத் | 58 | 25 |
| ஷெ புராணம் ஷெ அத் | கூர்மபுராணம் 30-வது | 6ƒ | 10 |
| a | as | 51 | 1 |
| Lessur | Lesser | 15 | 7 |
| Wide Fncyclopeadia [Brittanlca | Vide Encyclopeadia [Brittanica. | 51 ,, | 5 ,, |
| ममचेन्वाचयूात्बुधः ॥" | मम चेत्यूचिवान्बुधः ॥" | முகவுரை | 3 |
| निस्वास, क्रान्तेन्दु, तले‌ु. | निश्वास, कान्तेन्दु, तलेपु. | ४ | |
| चक्रयर्ति सौराष्ट | चक्रवर्ती सौराष्ट्र | ६,८. | ६,१ |
| बाजसनयि, श्रोसोमनाथ. | वाजसनेयि' श्रीसोमनाथ. | ७,८. | १,२. |
| नियाणं, नाराणात्मज.: | निर्याणं, नारायणात्मजः | १०,१८. | २ |
| महातेजा भगवा० यन् | महातेजाः भगवा० यत् | १८,२१ | ३,६ |
| विजयतगरे श्रूयतां | विजयनगरे श्रूयंतां | ,, २३. | ५,१० |
| क्रोध, नाराथणा. | क्रोध, नारायणा. | ,, | |
| सर्वा, दास्यती. | सर्वाः, दास्यति. | २४,५ | २,१० |
| विपये चातुवर्ण्यं | विपये चातुर्वर्ण्यं | २९,३२. | ३,१ |
| गागिनः, निदृशनं. | गाभिनः, निदर्शनं. | ३१ | |
| ब्राह्मणो संतापादिभिः | ब्राह्मणो संतोपादिभिः | ३७-९ | १,३,७ |
| धमात् व्रतबंधाद्विजोत्तमः | धर्मात् व्रतबंधाद्द्विजोत्तमः | ३९ | २,१० |
| भवत्ये ब्राह्मणस्यलक्षणं | भवत्येव ब्राह्मणलक्षणं | ,, ४४ | ३ |
| शोचं नित्यमेकत्ववहुत्वयोः | शौचं नित्यमेकवहुत्वयोः | ४४,४९ | ३,७ |
| राजधाती प्रयात्तव्याः | राजधानी प्रयोक्तव्याः | ५०,५२. | १४,२ |
| स्वसुरः सपत्निष्वपि | श्वशुरः सपत्नीष्वपि | ५४-९ | ७,५ |
| सिद्धेश्वरदैवतं [illegible] | [illegible] सिद्धेश्वरः स्मृतः सवितुः | ६० | ५ |
| स्वस्तिः [illegible]रामेण | स्वस्ति [illegible]कटरामेण | ६५-६ | १,७ |

146889



மஹாவிஷ்ணுவின் 24 அவதாரங்களில் நரநாராயணுவதா[ர]ன்று. பகவான் நாராயண ரிஷியாகவும், அவரே நரனுகவும் [அவ]தரித்து, நாராயணன் குருவாகவும் நரன் சிஷ்யனுகவுமிருந்து, [கர்ம] மார்க்கத்தையும் ஞான மார்க்கத்தையும் உலகத்தில் பரவும்படி [செய்த]ருரென்று ஸ்ரீமத் பாகவதத்திற் கூறப்பட்டிருக்கிறது.

ஐம்பத்தொரு அக்ஷர (சப்த) ரூபமாகயிருந்து சமஸ்த வித்[யை]களாகப் பிரகாசிப்பது வாக்தேவதையான சரஸ்வதி. வித்யைக[ள்] 14. அவையாவன:— வேதங்கள் 4. (ரிக், யஜுஸ், சாமம், அத[ர்]வணம்) அங்கங்கள் 6. (சிக்ஷை, கல்பம், சந்தஸ், ஜோதிஷம், வ்யாகரணம், நிருக்தம்) மீமாம்ஸை 1, ந்யாயம் 1, புராணங்கள் 1, தர்ம சாஸ்திரங்கள் 1 ஆக வித்யைகள் 14.

கலியுக ஜனங்களுக்கு (பிராஹ்மணர்களுக்கு) விரிவான வேதங்களைப் பாராயணம்போதுமான ஆயுள், சக்தி, அறிவு இராதென்று முன்பே தமது ஞான திருஷ்டியினுலறிந்த வ்யாச பகவான், விஸ்தாரமாயிருந்த வேதத்தை ரிக், யஜுஸ், ஸாம, அதர்வணமென்னும் நான்கு பாகங்களாக வகுத்து, அததற்கு யேற்பட்ட சாகை (பிரிவு) களையும் ஒழுங்குபடுத்தி, பைலர் முதலான சிஷ்யர்களுக்கு உபதேசித்து, அவர்களுடைய சிஷ்ய ப்ரசிஷ்ய உபசிஷ்யர்கள் முகமாகக் கலியுகத்தாருக்குச் சுலபமாகத்தெரியும்படி செய்தார். ஆகையால், நாராயணன், நரன், சரஸ்வதி, வ்யாசர், ஆகிய நால்வரையும் வணங்கி கிரந்தாரம்பஞ்செய்யவேண்டுமென்று மங்களங்கூறப்பட்டது.

மஹாவிஷ்ணுவின் 24 அவதாரங்களின் விவரம்:—1. நாராயணுவதாரம். 2. வராஹாவதாரம். 3. நாரதாவதாரம். 4. நரநாராயணுவதாரம். 5. கபிலாவதாரம். 6. தத்தாத்ரேய அவதாரம். 7. குமாராவதாரம். 8. யஜ்ஞாவதாரம். 9. ரிஷபதேவாவதாரம். 10. ஹரி அவதாரம். 11. பிருதுராஜ அவதாரம். 12. மத்ஸ்யாவதாரம். 13. கூர்மாவதாரம். 14. தன்வந்திரி அவதாரம். 15. மோஹினி அவதாரம். 16. நரசிம்ஹாவதாரம். 17. வாமனுவதாரம். 18. பரசுராமாவதாரம். 19. வ்யாசாவதாரம். 20. ஸ்ரீ ராமாவதாரம். 21. பலராமாவதாரம். 22. ஸ்ரீ கிருஷ்ணுவதாரம். 23. புத்தாவதாரம். 24. கல்கி அவதாரம்.]

ஸ்ரீராமஜயம்.

## பிரகடனம்.

# அத்புத ராமாயணம்.

இது வால்மீகி மஹரிஷியினால் இயற்றப்பட்ட ராமாயணங்களில் ஒன்று. இது சம்ஸ்கிருத பாஷையிலுள்ளது. இதன் பெயருக்குத் தகுந்தபடி சீதா பிராட்டியாரின் அபார சக்தியைத்தெரிவிக்கும் சதகண்ட ராவண சம்ஹாரம் முதலிய அநேக ஆச்சரியமான விஷயங்களும், வேதாந்த பரமான அர்த்த புஷ்டியுள்ள ஸ்லோகங்கள் பலவும் இதில் நிரம்பியிருக்கின்றன. இது சம்ஸ்கிருத பாஷையிலிருக்கிறபடியால் அப்பாஷை தெரியாதவர்களுக்குச் சுலபமாகத் தெரியும்பொருட்டு, மூல ஸ்லோகங்களை நாகரி அல்லது கிரந்தாக்ஷரத்திலும், அதன் அர்த்தத்தைச் சுலபமான தமிழ் வசன நடையிலும் அங்கங்கே வரும் முக்கிய விஷயங்களுக்கு, இக் [ ] குறிக்குள் விசேஷ உரையும் எழுதி பளபளப்பான கிளேஸ் கடிதம் டிம்மி 8 பக்க அளவில் 40 பக்கங்கொண்ட புஸ்தக ரூபமாக மாதமொரு முறை வெளியிடப்படும். இதன் மாதிரியை இக்கவரின் 2, 3-ம் பக்கங்களிற் காண்க.

இதற்கு உள்ளூர் வெளியூர் சந்தாதாரர்களுக்கு தபாற்கூலியுள்பட வருஷம் 1-க்கு ரூ 3—0—0. ஆறு மாசத்திற்கு ரூ 1—8—0.

1915-ம் வருஷம் ஜூலை மீ 31உக்குள் சேருகிறவர்களுக்கு வருஷம் 1க்கு தபாற்கூலியுள்பட சந்தா ரூ 2—8—0. மீ 6-க்கு ரூ 1—4—0.

விரும்பின சந்தாதாரர்களுக்கு "ஸ்ரீமத் ஸௌராஷ்ட்ர சரித்ர சங்கிரகம்" காபி 1 இனாமாகக் கொடுக்கப்படும்.

அத்புத ராமாயணம் முடிந்தவுடன் அத்யாத்ம ராமாயணம் போன்ற இதர ராமாயணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளியிடப்படும். அவசியமான விடங்களில் சரித்திர சம்மந்தமான 'சித்திரப்' படங்களும் சேர்க்கப்படும். இது "இந்துமத மாதாந்தர சஞ்சிகை" யென்ற தலைப்பின்கீழ் பிரசுரிக்கப்படும். இதற்குச் சந்தாதாரர்களாக இந்துக்களனைவரும் சேர்ந்து சந்தா முன் பணமாகச்செலுத்தி இந்த நன்முயற்சியை ஆதரிப்பீர்களென்று நம்புகிறேன்.

ராமாயண மஞ்சரி ஆபீஸ்
6-வது லெக்ஷிமிபுரம்
தெரு, மதுரை.

J. S. வேங்கடராம சாஸ்திரியார்,
மானேஜிங் புரோப்ரைட்டர்.

PRINTED AT THE M. L. V. PRESS MADURA COVERS ONLY.